www.tamilarangam.net

Australia.....1.50S France...........8.00F India.......12.00Rs Norway......12.00Kr Switzerland.......2.50S
Canada.......1.00$ Germany....2.25DM Malaysia.....1.50$ Srilanka... .20.00Rs United Kindom....90p

# நாழிகை

DECEMBER 1994

The International Tamil Newsmagazine



## இலங்கை:
## இனப் பிரச்னைக்கு தீர்வு என்ன?





மேயர்: தலை தப்பியது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமிழ் இமைத் துணைகள் கண்ணுக்கு அணிஎன அமைக்கு மாபோல்
உமிழ் சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்பது ஓரார்
அமிழ்தினைச் சுவைசெய் தன்ன அழகினுக்கு அழகு செய்தார்
இமிழ் திரைப் பரவை ஞாலம் எழைமை உடைத்து மாதோ.

– கம்பராமாயணம்; கோலம்காண் படலம்




ஆம்;
அழகினுக்கு அழகு செய்ய
ராஜூ பட்னி அன் சன்

*Experts in Exquisite Modern & Tamils' Traditional Jewellery*

**Raju Pattni & Son**
58-60 EALING ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 4TL
TEL: 081-903 6677 FAX: 081-904 9547

www.tamilarangam.net

**பாரிசில் கோல்ட் என்றதும் உங்கள் நினைவில் நிற்கவேண்டிய ஸ்தாபனம்**

# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

**(BIJOUTERIE - HORLOGERIE - CADEAUX - IMPORT - EXPORT)**

உங்கள் அழகை மேலும் அதிகரிக்க
உங்களுக்கு வேண்டிய தங்க நகைகளை
தரமான சிறந்த வேலைப்பாடுகளுடன்
உங்களுக்குத் தருபவர்கள்.

கற்கள் பதித்த மோதிரங்கள், கைச்செயின்,
காப்பு, சங்கிலி, தாலி, தாலிக்கொடி,
தோடு, அட்டியல், பதக்கம்.

பட்டுப் புடவைகள், பட்டு வேட்டி, சால்வைகள்,
வேண்டிய அளவுகளில் சேட்டுகள், ரவுசர்கள்,
சிறுபிள்ளைகளின் உடுப்பு வகைகள்.

கைக்கடிகாரங்கள்,
சுவர்-மேசை மணிக்கூடுகள், கல்குலேற்றர்கள்,
வீட்டை அலங்கரிக்க
கவர்ச்சிக் கலைப்பொருள்கள்,
தெய்வச் சிலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள்,
நிறைகுடச் செட்டுகள், வேண்டிய அளவுகளில்
குத்துவிளக்குகள், வோக்மன், ரேடியோ கசெட்
றெக்கோடர், புதிய-பழைய பாடல்கள் அடங்கிய
ஒடியோ கசெட்டுகள்.


மங்கையர் எழில் கூட்டுவதற்கான
அழகுசாதனப் பொருள்கள், இமிட்டேசன்
நகைகள், வெளிநாட்டு வாசனைத்திரவியங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



## GOLDEN STAR

**199, Rue du Fg. St. Denis, Paris**
**Tel: 42 09 26 50 / 46 07 26 44**
**Metro: La Chapelle, Gare du Nord**

www.tamilarangam.net




லண்டனில் தமிழ்க்கடை

142 HOE STREET, WALTHAMSTOW, LONDON E17 4QR TEL: 081-521 4955 FAX: 081-521 9482
69 HOLLOWAY ROAD, HIGHBURY & ISLINGTON, LONDON N7 8JZ TEL: 071-609 1912 FAX: 071-609 0501

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


எண்ணம் ... 9
இலங்கை: ஐ.தே.க. அரசின் 'புதையல்கள்' ... 16
பிரிட்டன்: மேயரின் தலைமைக்கு சோதனை ... 17
தமிழ்நாடும் தலைநகரும்: சேஷன் கிளப்பிய 'சென்சேஷன்' ... 21
உலக விவகாரம்–பொஸ்னியா: அமெரிக்காவின் திடீர் மனமாற்றம் ... 22
மத்திய கிழக்கு: உள்நாட்டு யுத்த அபாயத்தில் அரபாத் ... 24
கலை: கலைப் புது மலர்கள் ... 26
இசை ராத்திரி ... 28
இந்தியா:வெங்கட்ராமன் கிளப்பிய சர்ச்சை ... 29
சிறப்புக் கட்டுரை: தமிழாராய்ச்சியும் மாநாட்டுப் பந்தல்களும் ... 31
செவ்வி–எம்.ஏ.நுஃமான்: தமிழில் புகலிட இலக்கியம் புதிய பிரிவாக வளர்கிறது ... 32
சிறுகதை: தமயந்தி ... 39
சினிமா: கமல்ஹாசனின் 'நம்மவர்' ... 42
புத்தக விமர்சனம் ... 43
சொற்சதுரங்கம் ... 45
ஜன்னல் ... 48




■ 19 இந்தியா

**ராவுக்கு ஒரு சவால்**

சோனியா காந்தியின் முகத்தில் பூக்கும் புன்னகைக்குப் பொருள் என்ன?

■ 12 அட்டைச் செய்தி: இலங்கை

**திருப்பு முனையில் இலங்கை?**

மகள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யும் தாய் – வரலாற்று பெருமை. இனப்பிரச்னை தொடர்பிலும் பெருமை சேர்ப்பாரா? என்பதே எழுப்பப்படும் முக்கிய வினா.



■ 34 சிறப்பு கட்டுரை

**தஸ்லிமா நஸ்ரீன் என்ற பிரச்னை**

சர்ச்சைக்குரிய பங்களாதேஷ் எழுத்தாளர் பற்றி ஒரு விரிவான நோக்கு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Nazhikai**
The International Tamil Newsmagazine
VOL.II, No.2, December 1994

**EDITOR:**
S. Mahalingasivam

**CONTRIBUTING EDITORS:**
S. Swaminathan, Wimal Sockanathan, M. Pushparajan, Pon.Balasundaram
Yamuna Rajendran

**LAYOUT ARTIST:**
K. Krishnarajah

**TECHNICAL ASST:**
S. Perinpanathan

**EDITORIAL OFFICE:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK
Tel: 081-961 5962
Fax: 081-961 5962

**PUBLISHERS:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

**PRINTERS:**
Set Line Data Ltd
London SE1

Cover printed at ABILITY PRINTING, Rayners Lane, Harrow, Middlesex

**Subscription for 12 issues**

UK:.................................................£14.00
Europe/India/Sri Lanka:.................. £15.00
All other countries:.......................... £20.00
Payable to NEWSMEDIA INTERNATIONAL LIMITED

**Please complete the form and return to**

Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

Name:...............................................................

Address:...........................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

Tel:...................................................................

**Sending herewith cheque/draft/money order for the ammout of ................**

# ஜெய மோகன் பதில்: இலங்கைப் படைப்பாளியின் சொந்த அனுபவங்கள் தீவிரமானவை

இலங்கைப் படைப்புகளின் வடிவம் பற்றிய என் கட்டுரையை முழுமையாக நிராகரித்து இரு விமரிசகர்கள் எழுதியுள்ளார்கள். அதில் உள்ள அனைத்து கருத்துக்களும் 'இந்தியா டுடே' இலக்கிய மலரில் உள்ள படைப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை என்று காட்ட முயல்கிறார்கள். அக்கட்டுரையிலேயே தெளிவாக குறிப்பிட்டுள்ளபடி, ஓர் உதாரணமாக மட்டுமே அம்மலர் முன்னிறுத்தப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைப் படைப்புகளை வைத்துப் பார்க்கும்போது, அங்குள்ள மூன்று பிரதான போக்குகளுக்கு திட்டவட்டமான உதாரணங்கள் அம்மலரில் உள்ளன என்பதனால் மட்டுமே அது உதாரணமாக்கப்பட்டது. அறுபது வருடகால இலங்கை படைப்பிலக்கியங்களை முழுக்க ஒரு சிறு விமரிசனக் குறிப்பில் உதாரணம் காட்ட முடியாது.

திரு சிவசேகரம் தீர்ப்புகளை வழங்குகிறார். அவை பொருட்படுத்தும் தகுதி படைத்தவையாகப் படவில்லை. ஆனால், அவர் இலங்கைத் தமிழ் படைப்பாளிகள் மத்தியில் தமிழ்நாட்டு இலக்கிய வாசகர்கள் பற்றி பரவலாக உள்ள சில தவறான எண்ணங்களை தந்திரமாகப் பயன்படுத்தியுள்ளார். இது மிக ஆபத்தான விளைவுகளை உருவாக்கக்கூடியது. பரஸ்பர அவநம்பிக்கைகளை வளர்க்கக்கூடியது. தமிழ்நாட்டு வாசகர்கள் இலங்கை இலக்கியத்தை அலட்சியம் செய்கிறார்கள், பெருநில மனோபாவமே இதற்குக் காரணம் என்று இலங்கைப் படைப்பாளிகளில் கணிசமானோர் நம்புகிறார்கள். தமிழ் வாசகர்களில் அதிகபட்சம் இரண்டாயிரம் பேரைத்தவிர பிறர் புதுமைப்பித்தனையோ, மவுனியையோ, சுந்தரராமசாமியையோ கேள்விப்படாதவர்கள். சமீபகாலம் வரை கல்வித்துறைகளில்கூட இவர்கள் அறியப்படாதிருந்தார்கள். சின்னஞ்சிறு வாசகர்வட்டம் கொண்ட சிற்றிதழ்களிலேயே இலக்கியப் படைப்புகள் பிரசுரிக்கப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வந்தன. இந்நிலை மாறியது 'மாலன்' இந்தியாடுடேக்கும், ஐராவதம் மகாதேவன் தினமணிக்கும், கோமல் சுவாமிநாதன் சுபமங்களாவுக்கும் பொறுப்பேற்ற பிறகுதான். மாறுதல்கூட குறிப்பிடும்படி இல்லை. தரமான தமிழ் சஞ்சிகைகள் இலங்கை வாசகர்களை குறிவைப்பதுகூட, தமிழ்நாட்டு வாசகர்களை நம்பி பத்தாயிரம் பிரதிகூட விற்கமுடியாது என்பதனால்தான். இலங்கைத் தமிழ் படைப்பாளிகள் பெற்ற வாசக அங்கீகாரத்தை எந்த தமிழ் படைப்பாளியும் இங்கு கனவுகூட காண முடியாது. ஆனால், இங்குள்ள சிற்றிதழ் சார்ந்த இலக்கிய வாசகன் இலங்கை இலக்கியம் பற்றி விரிவான அளவில் அறிந்துவைத்திருக்கிறான். கடந்த பத்தாண்டுகளாக இலங்கைப் படைப்புகள் மீது விசேஷமான அக்கறை இங்கு உள்ளது. 'இலங்கையர்கோன்' முதல் ரஞ்சகுமார் வரையிலான படைப்பாளிகள் (சட்டநாதன் இன்னும் வந்து சேரவில்லை) சாதாரணமாகவே இங்கு இலக்கிய விவாதங்களில் அடிபடுகிறவர்கள்தான். இலங்கைப் படைப்பாளிகளின் தனிப்பட்ட வாழ்க்கைகளும், பரஸ்பர பிணக்குகளும் கூட இங்கு எல்லாருக்கும் தெரிந்தவையே. சிலசமயம், அங்குள்ள கோஷ்டிச் சண்டைகளில் இங்குள்ளவர்கள் கட்சிகட்டுவதும் நடக்கிறது. ஆனால், படைப்புகள் இங்கு கிடைப்பதற்கு ஒரு வருடம் முதல் மூன்று வருடம் வரை ஆகிறது. இலங்கைத் தமிழ் படைப்பாளிகள் இங்கு பல சிற்றிதழ்களை நடத்தியுள்ளனர். கடந்த பத்தாண்டுகளில் வந்த முக்கியமான இலக்கிய வெளியீடுகளில் எல்லாம் இலங்கைத் தமிழ் படைப்புகள் கணிசமான அளவு உள்ளன. இலங்கைத் தமிழ் கவிதைகள் பற்றி இங்கு உயர்வான கருத்தும், சில விமரிசனங்களும் உள்ளன. சேரன், ஜெயபாலன், கி. பி. அரவிந்தன் முதலிய சிலருடைய பெயர்கள் மிக அதிக மாக அடிபடுகின்றன. இலங்கைத் தமிழ் நாடகங்கள் பற்றியும் நாடக வட்டாரங்க ளில் உயர்வான அபிப்பிராயம் கூறப்படுகிறது. ஆனால், இலங்கையின் புனைகதைகள் பற்றிய எனது கருத்தே இங்குள்ள கணிசமான அளவு வாசகர்கள் கொண்டுள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளது. (விருந்து மரியாதைப் பேச்சுகளை பொருட்படுத்த வேண்டியதில்லை) அறியாமை, அலட்சியம் என்றெல்லாம் பெரிய வார்த்தைகளை பயன்படுத்துவது தமிழ் வாசகர்களின் அக்கறையையே நிராகரிப்பதாகும்.

கடந்த பத்தாண்டுகாலமாக தீவிரமாக இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட படைப்பாளிகள் எவரும் இலங்கைத் தமிழ் எழுத்தை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் அல்லர் என்றும், உண்மையான படைப்பாளிகள் அடையாளமின்றி இலங்கையில் உள்ளார்கள் என்றும், அவர்களை அறியாமல் கருத்துச் சொல்லக்கூடாது என்றும் இவர்கள் கூறுகிறார்களா? அப்படியானால், கைலாசபதி முதல் பத்மநாப அய்யர், செ. யோகநாதன் வரையிலான ஆர்வலர்கள், நேர்மையும் ரசனையும் இல்லாதவர்கள் என்று

> தரமான தமிழ் சஞ்சிகைகள் இலங்கை வாசகர்களை குறிவைப்பதுகூட. தமிழ் நாட்டு வாசகர்களை நம்பி பத்தாயிரம் பிரதிகூட விற்க முடியாது என்பதனால்தான்.

அர்த்தம். தகுந்த ஆதாரமின்றி இப்படிக் கூறுவது அவதூறு அன்றி வேறல்ல.

துன்பியல் அழகியலல்ல என்று ஏதோ நான் கூறியதாக சோ. சிவபாதசுந்தரம் கூறுவது வியப்புத் தருகிறது. அரட்டை நடையில் கூறினால், நான் கூறிய விஷயம் இதுவே. இலங்கைப் படைப்பாளியின் சொந்த வாழ்க்கையின் அனுபவங்கள் மிகத் தீவிரமானவை. இதனால், தீவிரமான விருப்பு வெறுப்புகளும் உள்ளன. அனுபவங்களை முழுமையாக அணுகுவதற்கு இத்தகைய உணர்ச்சி வேகம் பெரிய தடை. கலைப்படைப்புக்கு இருந்தே ஆகவேண்டிய உணர்ச்சிசமநிலை இதனால் பாதிக்கப்படும். அனுபவங்களை நேரடியாக எழுதும்போது அவற்றை ஆய்வுசெய்ய முடியாமல் போகிறது. வரலாற்றின் ஆழங்களுக்கும், அடிமனப் பதிவுகளுக்கும் செல்ல முடியாமல் போகிறது. அனுபவத்தை ஆராய அதனுடன் ஒரு தூரம் உருவாகவேண்டும். காலம் அந்தத் தூரத்தை உருவாக்கும். இலக்கிய வடிவமும் உருவாக்கும். பண்டைத் தமிழ் படைப்புகளில் படைப்பாளி சுய அனுபவத்தை நேரடியாக முன்வைக்காமல், ஏற்கனவே வகுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் சூழலுக்குள் (திணை, துறை) அதை ஏற்றி கூறினான். அதன் மூலம் அனுபவத்திடமிருந்து விலகி நிற்கவும், உணர்ச்சிசமநிலை காக்கவும், குறிப்பமைதியை உருவாக்கவும் முடிந்தது. யதார்த்தவாத மரபு அதன் நேரடித்தன்மை காரணமாக சமநிலையை பேண தடையாக அமைகிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மிக எளிய இக்கருத்தைப் புரிந்துகொள்ள இவர்களுக்கு என்ன திணறல் என்றுதான் ஆற்றாமையாக உள்ளது. ஏற்கனவே யதார்த்தவாதம் அங்கு மறுபரிசீலனைக்கு உள்ளாகிவிட்டது என்றால் நான் கூறும் கருத்துக்களை ஏன் மூர்க்கமாக அறியாமை என்றெல்லாம் வசைபாட வேண்டும்?

இலங்கைத் தமிழ் படைப்பாளியின் தீவிர நிலையை நான் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். என் தாயும் தந்தையும் தற்கொலை செய்துகொண்டனர். மரணத்துக்கும் மனச்சிதைவுக்கும் நடுவே ஆறு வருட காலம் ஊசலாடியவன் நான். தீவிர அனுபவங்களை சமநிலை குலையாமல் வெளிப்படுத்தும் மொழியையும் வடிவத்தையும் தேடித்தான் நானும் செயல்பட்டு வருகிறேன். இப் பொதுத்தன்மையே எனது கட்டுரைக்கான முகாந்தரம். விமரிசகர்களிடம் விவாதம் செய்ய எனக்கு நேரமில்லை; மனமும் இல்லை.

திரு சிவசேகரத்தின் கடிதத்தின் தோரணை வியப்புத் தருகிறது. அவர் ஓர் இலக்கிய மேதை என்று ஒப்புக்கொள்ள நேரிட்டாலும் கூட, இந்த தோரணை நாகரீகமானதல்ல என்றுதான் நான் கூறுவேன். தமிழ் விமரிசகர்கள் பற்றிய ஆதாரமற்ற, பொத்தாம் பொதுவான, ஒற்றை வரித் தீர்ப்பை அவர் முன்வைக்கிறார். எந்தத் தமிழ் விமரிசகனும் எந்த விஷயம் பற்றியும் இப்படி ஒரு முடிவை குறிப்பட்டதில்லை. கோபத்தில், அவதூறில் இறங்கவும் சிவசேகரம் தயங்கவில்லை என்பது அதிர்ச்சி தருகிறது. ஆகஸ்ட், 1994 சுபமங்களா இதழில் நான் ஞானக்கூத்தன் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தேன்.

> ■ இலங்கைப் படைப்புகள்மீது விசேஷமான அக்கறை தமிழ்நாட்டில் உள்ளது.
>
> ■ இலங்கைத் தமிழ் கவிதைகள் பற்றி இங்கு உயர்வான கருத்துகள் உள்ளன.
>
> ■ ஆனால், இலங்கையின் புனைகதைகள் பற்றிய எனது கருத்தே இங்குள்ள கணிசமான அளவு வாசகர்கள் கொண்டுள்ளது.

அதில் எங்கும் இலங்கைத் தமிழ் கவிதைகள் பற்றி ஒரு வரிகூட குறிப்பிடப்படவில்லை. எதுவுமே சொல்லாதத னால் அது அறியாமை என்ற முடிவுக்கு சிவசேகரம் வந்திருக்கக்கூடும். உண்மையில் இலங்கை இலக்கியம் பற்றியும், கவிதைகள் பற்றியும் மலையாளத்தில் மட்டுமே நான் எழுதியிருக்கிறேன். 30 கவிதைகளை மொழிபெயர்த்துமிருக்கிறேன். கிளப்பிவிடப்பட்டுள்ள காழ்ப்புகளை மீறி, சில படைப்பாளிகளாவது தங்கள் படைப்பு மொழி, வடிவம் பற்றி யோசிக்கும்போது என் கருத்துக்களையும் கணக்கிலெடுத்துக்கொள்வார்கள் என்று நம்புறேன்.

ஜெய மோகன்,
தருமபுரி,
தமிழ்நாடு

## ராஜேஸ்வரியின் மனித நேயம்

நாழிகை நன்றாகவே இருக்கிறது.

மேற்கத்திய சூழலில் வாழும் நம்மவரின் அவல வாழ்க்கையை ராஜேஸ்வரி மிகவும் தத்ரூபமாகக் கூறியுள்ளார். அவர் எப்பொழுதுமே நம் பண்பாட்டை மறக்கமாட்டார்; சிறந்த மனிதநேயம் மிக்கவர். அவரைத் தெரியாது, ஆனாலும், அவரின் சிறுகதைகளிலும், நாவல்களிலும் அந்த மனிதநேயம் வெளிப்படுவதைக் காணலாம்.

தமிழ்நாடும் தலைநகரும் கட்டுரை நாசூக்காக அமைகிறது. விஷயம் தெரிந்தவர்கள் ரசிக்கலாம் - ஓரளவுக்கு தென்னிந்திய அரசியல் நடப்புகள் தெரிந்தவர்கள் மட்டுமே.

இலங்கைச் சிறுகதைகள் தொடர்பில், சோ. சிவபாதசுந்தரம் காலத்து கதைகள், செ. யோகநாதன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் போன்றவர்களின் கதைகள் மற்றும் தற்காலத்தில் புலம் பெயர்ந்தோர் எழுதும் 'துன்பியல்' கதைகள் என்று ஏதோ ஒரு பிரிவில் கதைகளைக் கொண்டுவரலாம்.

திருமதி ப. சுந்தரலிங்கம்,
மோல்டன்,
மசச்சுசெற்ஸ்,
அமெரிக்கா.

## மனிதனின் கடவுள்

ராஜேஸ்வரியின் கதையில், 'மனிதன் உண்டாக்கிய கடவுளை மீறிக் கடவுள் என்ன செய்யமுடியும்' என்ற வாக்கியம் எனக்கு நன்றாகப் பிடித்தது. அவரை மனமாரப் பாராட்டுகிறேன்.

எஸ். அகஸ்தியர்,
பாரிஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net



# சந்திரிகா எப்படி செயல்படுகிறார்?

இலங்கையின் பேராதனைப் பல்கலைக் கழகம் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கௌரவ டாக்டர் பட்டமொன்றை அளிக்க தீர் மானித்து அதனை அவருக்கு அறிவித்தபோது, சந் திரிகா அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்து பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அறிவித்திருக் கிறார். தான் அதனை ஏற்றுக்கொள்வது பொருத்தமற் றது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இப்போதெல்லாம் பல இடங்களில் பல்கலைக் கழ கங்கள் பதவிக்கு வரும் அரசியல் தலைவர்களுக்கு கௌரவ பட்டங்களை அளிப்பதில் முன்னிற்கின் றன. அப்படி, பட்டங்களுக்காக அரசியல்வாதிகளும் முன்னிற்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தில் தமிழ் நாட்டில் இந்த நிலைமை மிக அதிகம் என்று தெரிகிறது. ஒரு காலத்தில் தி. மு. க. தலைவர் மு. கரு ணாநிதி முதலமைச்சராக விருந்தபோது, மதுரைப் பல்கலைக்கழக பட்டமளிப்புக்கு அவரை அழைப்ப தற்குக்கூட அப்போது துணைவேந்தராகவிருந்த தெ. பொ. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை மறுத்துவிட்டார். ஆனால், இப்போது தமிழ்நாட்டில் பதவிக்குவரும் முத லமைச்சர்கள் அனைவருக்குமே டாக்டர் பட்டம் காத் திருப்பதாகவே தெரிகிறது.

பிரிட்டனில், மாக்கிரட் தச்சர் பிரதமராக இருந்த காலத்தில் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்க ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகம் விடாப்பிடியாக மறுத்தது. பொதுவாக, இலங்கைப் பல்கலைக்கழகங்கள் நீண் டகாலமாக பிரிட்டன், மற்றும் பல நாடுகளுடன் ஒரு பரிவர்த்தனையைக் கொண்டிருந்ததனாலோ என் னவோ சில தனித்துவங்களை அவை கொண்டனவா கவே இருந்தன. இன்னமும் அது பேணப்படும் என்றே நம்பலாம்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி யேற்ற போதிலேயே பல சாதனைகளுக்கு அவர் உரி யவர்தான். இலங்கையின் முதலாவது பெண் ஜனா திபதி; தந்தை, தாய் இருவரையுமே பிரதமர்களாகக் கொண்டவர்; தம் முன்னிலையில் தாய் பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்யப் பெற்றவர். இவைதவிர, இலங்கையில் எவருமே பெறாத பெரு வெற்றியை இவர் பெற்றிருக்கிறார். அதுவும் மிக குழப்பமான ஒரு காலகட்டத்தில், நாட்டின் அனைத்து இன மக்களின தும் அதி பெரும்பான்மையான வாக்குகளையும் அவர் ஏகோபித்து பெற்றிருக்கிறார்.

இலங்கையின் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர் தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்காத காலங்களிலும்கூட மொத்த வாக்குகள் அடிப்படை யில் அக் கட்சிதான் கூடுதல் வாக்குகளை நாடளா விய ரீதியில் பெரும்பாலும் பெற்றிருக்கிறது. இதனை மனதில் வைத்துத்தான் நாட்டின் தேர்தல் முறையை விகிதாசார தேர்தல் முறைக்கு ஜே. ஆர். ஜயவர்த்தன மாற்றினார். ஆக, அந்த 'கிழ நரி'யின் தந்தரத்தையும் சந்திரிகா தவிடுபொடியாக்கியிருக்கிறார். இதுவரை காலமும் இனத்துவேஷம் தேர்தல் வெற்றிக்கு ஒரு யுக் தியாக்கப்பட்டுவந்தபோது, இனப் பிரச்னைக்கு ஒரு சமாதானத் தீர்வு முயற்சியை வெளிக்காட்டியும் அவர் வெற்றிபெற்றார்.

தவிரவும், கல்வித் தகைமையிலும்கூட அவர் தகுதி யானவரேதான். சோர்போண் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் அவர். ஆனாலும், சந்திரிகா சாதிக்க வேண்டியவை இனிமேல்தான் இருக்கின்றன. தேர்தலில் மூன்று விடயங்களை அவர் முன்வைத் தார். இனப்பிரச்னைக்கு தீர்வு; ஜனாதிபதி ஆட்சி முறை ரத்து; லஞ்ச ஒழிப்பு என்பன அவை.

இனப் பிரச்னைக்கு அவர் காணப்போகும் தீர்வு இவற்றுள் தலையாயது. அதனை அவர் அவசர அவச ரமாக செய்து முடித்துவிடவில்லை என்று கூறிவிட முடியாது. பதவிக்கு வந்ததும் ராஜீவ் காந்தி மேற் கொண்டது போன்ற தீர்வுகளில் சந்திரிகா தீர்வைக் கண்டுவிட முடியாது. புரையோடிப்போன, மிகச் சிக்கலான, உணர்ச்சிமயமான, உயிரான, அபாயகர மான பிரச்னை இது. அத்துடன், இது முற்றிலும் ஓர் உள்நாட்டுப் பிரச்னை என்பதுமல்ல. ஒரு நிரந்தர தீர் வுக்கு அது வெகு பக்குவமாக அணுகப்படவேண் டும். மேலும், அது அவர் ஒருவர் மட்டும் தீர்த்துவிட வல்லதுமல்ல. விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா தொடர்புகளைக் கொண்டிருக்கிறார். மாவீரர் தின உரையில் பிரபாகரனும் சமாதானத் தீர்வுக்கான தன் னுடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருக் கிறார்.

புலிகள் தரப்பிலும் அவர்கள் மிக ஜாக்கிரதை யாக இருக்கவேண்டிய அவசியம் - பொறுப்பு அவர் களுக்கிருக்கிறது. எப்படியோ, அவர்கள் அங்கு ஒரு ராஜ்யத்தை நிர்வகித்துக்கொண்டிருக்கிறார்கள் என் பது உண்மை. அந்தவகையில், இன சுய கௌரவங்க ளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் ஒரு தீர்வு தேவை. இருசாராரும் ஒருவரை ஒருவர் எந்த அளவுக்கு நம்பமு டியும் என்பது இங்கு எழக்கூடிய முக்கிய பிரச்னை. இவ்விவ காரத்தில் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமருடன் பேச்சுக்கள் நிகழ்த் தியிருக்கிறார். அவ்விதமாகவே அரசு - விடுதலைப் புலிகள் தரப்பிலும் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு, அது எல்லோருமிணைந்த ஒரு சுமுகமான தீர்வொன்றுக்கு இட்டுச் செல்லவேண்டும்; அப்படியொரு சாதக நிலையை உருவாக்குவதில்தான் இப் பிரச்னையை நோக்கும் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

ஆக, சந்திரிகா நிதானமாகவே செயல்படுகிறார் என்பதுதான் டாக்டர் பட்டத்தை அவர் ஏற்க மறுத்தது வலியுறுத்துகிறது. அந்த நிதானத்தில், அவரும் பிரபா கரனும் நோபல் பரிசையே வெல்லட்டும். ☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


THAMPA


SOLICITORS

ZAMBIA HOUSE
8A SOUTHHILL AVENUE
SOUTH HARROW
MIDDX HA2 ONQ
TEL:081 426 8562
HOME:081-422 8248
FAX:081-426 8307

* CONVEYANCING
* LITIGATION
* IMMIGRATION MATTERS
* WILLS & PROBATE
* LANDLORD & TENANT
* MATRIMONIAL MATTERS
* PERSONAL INJURY
* LIQUOR LICENSING

LEGAL AID WORK UNDERTAKEN


# சொன்னார்கள்



■ "பிழையான பக்கம் நோக்கிச் சுட எனது ஆயுதத்தைப் பயன்படுத்து வதை தொலைக்காட்சியில் நான் பார்க்க நேரிடும் வேளைகளில் என் கண்களில் கண்ணீர்தான் பெருக்கெடுக்கிறது."

- மிக்கைல் கலாஷ்னிகோவ்.
(உலகமெங்கும் கெரில்லாக்கள் பயன்படுத்தும் ஏ.கே. 47 ரக துப்பாக்கியை உரு வாக்கியவர்)

■ "டெங் ஷியாஒபிங் இருக்கவேண்டிய இடத்திலேயே அவர் இருக் கிறார்."

- 90 வயதான சீனத் தலைவர், வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டிருப்பதாக வெளியான வதந்திகள் குறித்து சீன வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர்.

■ "தெரியுமா, எம்மைப்போன்றவர்கள் எப்போதாவதுதான் ஜனாதி பதிகளாக வர முடிகிறது."

- ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சின்.
(பில் கிளின்டனை விளித்து)

■ "எப்படி தொழுகை நடத்துவது என்பதை எங்களுக்கு கற்பிக்கிறார் கள். ஆனால் அதைவிட, கம்பியூட்டரைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமே."

- பொஸ்னிய அரசாங்கத்தின் தீவிரப்படுத்தப்படும் மத அடிப்படை நடவடிக்கை கள் குறித்து சரயேவோவில் 8ஆம் தர மாணவி ஒருவர்.

■ "சுவர் இருக்கும் வரை நான் அவர்களின் பாசத்துக்குரிய சகோதரி யாக, சிற்றன்னையாக இருந்தேன். ஆனால் இப்போ, அவர்கள் என்னை மறந்துவிட்டார்கள். வருடத்தில் ஓரிரு தடவை மட்டுமே அவர்களுடன் பேசுகிறேன்; அதுவும் நானாகத்தான்."

- முன்னைய கிழக்கு, மேற்கு பேர்ளின் வாசிகளிடையே அதிகரிக்கும் சமூக பிரிவு குறித்து, முன்னைய கிழக்கு பேர்ளின் வாசி ஒருவர்.





தி ஐலண்ட், இலங்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அறிவிலே புதியன

தானியங்கி பல் தூரிகைகள் ஏற்கனவே பாவனையில் இருக்கின்றன. வீட்டிலேயே பற்களைப் பேணிக் கொள்ளும் முறைகளின் சமீபத்திய கண்டுபிடிப்பாக, நிமிடத்துக்கு 30 ஆயிரம் தடவைகள் அசையவல்ல மின் தூரிகை ஒன்று பாவனைக்கு வந்துள்ளது.

இந்த தூரிகையின் துரித இயக்கம், பொதுவாக பற்பசை புக இயலாத, பற்களுக்கும் முரசுக்கும் இடைப்பட்ட பகுதிகளுள் பற்பசையை பலமாக செலுத்துவதில் உதவுவதாக இத் தூரிகையின் தயாரிப்பாளர்களான கொலறாடோவின் கொலின்ஸ் நிறுவனத்தினர் கூறுகிறார்கள்.



இதனால், முரசைப் பாதிக்கும் பல கிருமிகள் அகற்றப்படுவதுடன், கோப்பி, தேநீர், புகைத்தல் முதலானவற்றால் ஏற்படும் கறைகளும் அகற்றப்படுகின்றன.

பற்களில் பிரயோகிக்கப்பட வேண்டிய அளவு அழுத்தத்தையும், வேகத்தையும் தூரிகை தானே உணர்ந்துகொள்ளவல்லது.

இரண்டு தூரிகைகளுடன் இது விற்பனையாகிறது. 24 மணி நேரம் மின்னேற்றப்பட்டால், அது ஒரு வாரம் இயங்குவதற்குப் போதுமானது. இதன் விலை 150 அமெரிக்க டொலர்கள்.

மேலை நாடுகளில் பல் வைத்தியம் மிக செலவினமானதாகிவிட்டபோது, இத் தூரிகை சில சமயங்களில் சந்தையில் பிரபல்யத்தைப் பெறலாம். ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருப்புமுனையில் இலங்கை?

## சாதனை படைத்த ஜனாதிபதி சாதனை படைப்பாரா?

எல்லாளன்

'எமது தேசம் முக்கியமான ஒரு திருப்புமுனையில் நின்றுகொண்டுள்ள நிலையில், இலங்கையின் நான்காவது ஜனாபதியாக நான் பதவியேற்கிறேன்.'

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவுடன் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த முதலாவது வசனமே இது.

எனினும், உண்மையில் இலங்கையின் சரித்திரத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடிய வகையில் சந்திரிகாவின் இந்த மாபெரும் வெற்றி அமைந்துள்ளது என்று கூறுவதே பொருத்தமானதாக இருக்கும்.

சுமார் 62 வீதமான மக்களின் ஆதரவுடன் சந்திரிகா பெற்றுக்கொண்ட இந்த வெற்றி, இந்தத் திருப்புமுனைக்கான ஓர் அத்திபாரமாக அமையுமா என்பதை எதிர்வரும் காலங்களில் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளே உறுதிப்படுத்தவேண்டும்.



49 வயதான புதிய ஜனாதிபதி, அரசியலின் உச்சநிலைக்கு திடீரென வந்தவர் தானென்றாலும், அரசியலிலும் தேசிய பிரச்னைகளிலும் ஒரு தெளிவான அணுகுமுறை அவரிடம் உள்ளது. அரசியலில் நேரடியாகப் பிரவேசித்து சுமார் ஒன்றரை ஆண்டுக்குள் அரசியலின் உச்சநிலைக்கு வருவதற்கு அவரது இந்த அணுகுமுறையும் ஒரு காரணம்.

1993 மே மாதத்தில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின் மூலமே சந்திரிகா தீவிரமான அரசியலில் பிரவேசித்தார். இத்தேர்தலில் வெற்றிபெற்று, மேல்மாகாண சபையின் முதலமைச்சராக அவர் பதவியேற்றார். எனினும், மேல் மாகாணத்தில் பொதுஜன முன்னணியால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. ஒரு ஸ்திரமான ஆட்சியை பொதுஜன முன்னணியால் வழங்க முடியும் என்பதை நிரூபிக்க முடியாத நிலையே அவருக்கு அப்போது ஏற்பட்டது.

இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலின் முன்பாக பொதுத் தேர்தலை நடத்துவதென்ற முடிவையும் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க மேற்கொண்டார். சோதிடர்கள் குறித்துக்கொடுத்த நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலுக்கான அறிவித்தலையும் வெளியிட்டார். எனினும், சோதிடர்கள்மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ளாதவாறு அவர் தோல்வியடைந்தார்.

இந்தப் பொதுத் தேர்தலில்கூட தனித்து ஆட்சியமைக்கக்கூடிய ஒரு வெற்றியை சந்திரிகாவால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. முஸ்லிம் காங்கிரசின் ஆதரவுடன் ஒரு வாக்கு பெரும்பான்மையைப் பெற்ற அரசாங்கமொன்றாகவே அவரது அரசு உள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெற்ற 'மாபெரும்' வெற்றி எவரும் எதிர்பார்க்காத ஒன்று. பிரசாரக் கூட்டங்களில்கூட சுமார் 10 லட்சம் அதிகப்படியான வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என்றே பொதுஜன முன்னணியின் தலைவர்கள்கூட கூறிவந்தார்கள். ஆனால், சுமார் 20 லட்சம் பெரும்பான்மையை அவர் பெற்றிருப்பது ஒரு வியப்பான வெற்றியே.

காமினியின் படுகொலையால் ஏற்படக்கூடிய ஓர் அனுதாப அலை, சந்திரிகா அலையை மூழ்கடித்துவிடும் என ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க)யினர் நம்பியிருந்தார்கள். ஆனால், இந்த 'சந்திரிகா அலை' 'அனுதாப அலையை' ஒரேயடியாக மூழ்கடித்துவிட்டது எவரும் எதிர்பார்க்காத ஒன்றுதான். இந்த அனுதாப அலை எங்கே போனதென்பது தான் ஒருவருக்கும் தெரியவில்லை. பொதுத் தேர்தலிலேயே சந்திரிகா அலை மேலோங்கியிருந்தது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில்தான் இது உச்சநிலையை அடைந்தது.

ஐ.தே.க. வெறுமனே அனுதாப அலையை நம்பியே தேர்தல் களத்தில் தனது வியூகங்களை அமைத்துக் கொண்

---

அரசியலிலும் தேசிய பிரச்னைகளிலும் ஒரு தெளிவான அணுகுமுறை அவரிடம் உள்ளது.

---

தனது தந்தையோ அல்லது தாயாரோ அடையாத அரசியலின் உச்ச நிலையை இன்று சந்திரிகா அடைந்துள்ளார். தேர்தல் தொடர்பாக அவர் அளித்த மூன்று வாக்குறுதிகளே இதற்குக் காரணம்.

★ பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப்பிரச்னைக்கு சமாதானமான முறையில் தீர்வொன்றைக் காணுதல்.

★ நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழித்தல்.

★ உயர்மட்டத்தில் லஞ்சம், ஊழல்கள் போன்றவற்றை இல்லாதொழித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டது. காமினியின் படுகொலை 'அரசும் புலிகளும் இணைந்து செய்த ஒரு கூட்டுச் சதி' என ஐ.தே.க. தலைவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அனுதாபத்தையும், அதனுடன் கலந்து இனவாதத்தையும் பரப்புவதன்மூலம் வாக்குகளைப் பெறுவதற்கு அவர்கள் திட்டமிட்டார்கள்.

இந்த அனுதாப அலையை முறியடிப்பதற்கான புதிய யுக்தி ஒன்றை சந்திரிகா கையாண்டார். காமினியின் கொலை தொடர்பாக அனுதாபத்துடன் குறிப்பிட்ட இவர், கொடிய வன்செயல்களால், தான் தந்தையை, கணவனை இழந்தது தொடர்பாகவும் தெரிவித்தார். இதனால், இவ்வாறான வன்செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு தான் உறுதிபூண்டுள்ளதாகவும் உறுதிபடத் தெரிவித்துவந்தார்.

சந்திரிகாவின் இந்தப் பிரச்சாரம், அனுதாப அலை முழுமையாக ஐ.தே.க. வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கவின் பக்கம் செல்வதைத் தடைசெய்துவிட்டது. உண்மையைச் சொல்லப்போனால் அலைமோதிய சந்திரிகா அலை, ஐ.தே.க. எதிர்பார்த்த அனுதாப அலையை ஒரேயடியாக மூழ்கடித்துவிட்டது.

தனது தந்தையோ அல்லது தாயாரோ அடையாத அரசியலின் உச்ச நிலையை இன்று சந்திரிகா அடைந்துள்ளார். தேர்தல் தொடர்பாக அவர் அளித்த மூன்று வாக்குறுதிகளே இதற்குக் காரணமென அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப்பிரச்னைக்கு சமாதானமான முறையில் தீர்வொன்றைக் காணுதல்.

2. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழித்தல்.

3. உயர்மட்டத்தில் காணப்படும் லஞ்சம், ஊழல்கள் போன்றவற்றை இல்லாதொழித்தல்.

முக்கியமாக இந்த மூன்று வாக்குறுதிகளையும் முன்வைத்தே ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டார். அதே வேளையில், ஆகஸ்ட் 16ஆம் தேதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற உடனடியாகவே இவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கையை பொதுஜன முன்னணி அரசு ஆரம்பித்திருந்தது.

எனவே, அரசின் இந்த நடவடிக்கைகளுக்கான ஓர் அங்கீகாரமாகவே ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளைக் கருத வேண்டியுள்ளது. இதன் அடிப்படையிலேயே இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மக்களின் ஆணையே இந்தத் தேர்தல் முடிவுகள் என ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் புதிய ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே, இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகளை புதிய ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டியவராகவுள்ளார். விடுதலைப் புலிகளும் இதற்குச் சாதகமான முறையில் தம்முடைய பிரதிபலிப்புக்களை வெளியிட்டார்கள். ஒருதலைப்பட்சமான முறையில் யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் புதிய ஜனாதிபதிக்கு மேலும் ஒரு பொறுப்பை அவர்கள் ஒப்படைத்தார்கள்.

இந்த நிலையில், சிறுபான்மையின மக்கள் புதிய ஜனாதிபதியைப்பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதும் அவசியமாகின்றது. உண்மையில், சந்திரிகாவிடமிருந்து அவர்கள் நிறையவே எதிர்பார்க்கின்றார்கள்.


இதனால்தான் சிறுபான்மையின மக்கள் தமது வாக்குகளை கிட்டத்தட்ட முழுமையாக சந்திரிகாவுக்கே வழங்கியுள்ளார்கள். வெறும் பாணுக்கும், பருப்புக்கும், நிவாரணங்களுக்காகவும் அளிக்கப்பட்ட வாக்குகள் அல்ல இவை. பிரச்னைகளுக்கு சமாதான வழிமுறைகளில் நியாயமான ஒரு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குகளே அவை.

சிறுபான்னையின மக்கள் முழுமையாக சந்திரிகாவுக்குப் பின்னால் உள்ளார்கள் என்பது இத் தேர்தல் முடிவுகள் உணர்த்தும் மற்றொரு முக்கியமான விடயமாகும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வட பகுதியில் தேர்தல் நடைபெறவில்லை. எனினும், ராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தீவுப்பகுதிகளிலும், வவுனியா நகரப் பகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 80 வீதமான வாக்குகளை பெற்றமையும், யாழ்ப்பாணத்தில் (தீவுப்பகுதி மற்றும் இடம் பெயர்ந்தவர்களின் வாக்குகள்) 96 வீதமான வாக்குகளை சந்திரிகா பெற்றுக்கொண்டமையும் தமிழ், முஸ்லிம் மக்கள் அவரை முழுமையாக ஆதரித்துள்ளார்கள் என்பதன் வெளிப்பாடே.

இதனைவிட கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் பெருமளவிலுள்ள சிறுபான்மையின மக்கள் சந்திரிகாவையே ஆதரித்திருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம் கட்சிகள் சந்திரிகாவை ஆதரிக்குமாறு கூறியதுதான் இதற்குக் காரணமல்ல. இந்தக் கட்சிகளின் இவ்வாறான கோரிக்கை ஒன்றை விடுத்திருக்காவிட்டாலும்கூட, சிறுபான்மையின மக்கள் சந்திரிகாவையே ஆதரித்திருப்பார்கள் என்பது வெளிப்படை.

கடைசி நேரத்தில் தொண்டமான் 'குத்துக்கரணம்' அடித்தும்கூட, மலையக வாக்குகளில் முழுமையான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அவரால் முடியாமல் போய்விட்டது. தொண்டமானின் சகாக்களில்கூட பலர் ஐ.தே.கவுக்கு ஆதரவான பிரச்சாரங்களையே மேற்கொண்டுவந்தார்கள். எனினும் தமிழ், முஸ்லிம் மக்கள் சந்திரிகாவையே கிட்டத்தட்ட முழுமை



படம்: ஆனந்தி

தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணை நேரம்

**ஒருதலைப்பட்சமான முறையில் யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் புதிய ஜனாதிபதிக்கு மேலும் ஒரு பொறுப்பை விடுதலைப் புலிகள் ஒப்படைத் தார்கள்.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக ஆதரித்துள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. அதேவேளையில், சிங்கள மக்களும் சந்திரிகா மீதான நம்பிக்கையை இத் தேர்தலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். எனவே, சகல இன மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தலைவராகவே சந்திரிகா நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சகல இன மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, பெரும் ஆதரவைப் பெற்றுள்ள ஒரு தலைவராக சந்திரிகாவே உள்ளார். இது அவருக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்துள்ளது. இந்தப் பலத்தைக்கொண்டு இனப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு சிறுபான்மையின மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.



செஞ்சோலை அனாதைச் சிறுவர் இல்லம்

**1970**ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலேயே ஐ.தே.க. இறுதியாகத் தோல்வியடைந்தது. 24 வருடங்களாகத் தொடர்ந்து வெற்றியையே கண்டு வந்த ஐ.தே.க.வுக்கு இவ்வருடத்தில் அடுத்தடுத்து பல தோல்விகள். இத் தோல்விகளின் உச்சக் கட்டமாகவே ஜனாதிபதி தேர்தல் தோல்வி அமைந்துள்ளது.

**1970** முதல் கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்ற ஜே. ஆர். ஜயவர்த்தன, **1988**ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார். அப்போதும் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு கட்சியாகவே ஐ.தே.க. விளங்கியது. இதனைத் தொடர்ந்து ஆர். பிரேமதாஸவிடம் கட்சித் தலைமை சென்றது. **1988**ஆம் ஆண்டுத் தேர்தலில் மயிரிழையில் (2 லட்சத்து**80** ஆயிரம் வாக்குகள்) வெற்றிபெற்ற அவர், **1993**ஆம் ஆண்டு கொல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கட்சித் தலைமையை ஏற்றுக்கொண்ட விஜேதுங்கவே ஐ.தே.க.வின் பின்னடைவுக்கு பிரதான காரணம் என கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர்கூட குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள்.

பிரேமதாஸ காலத்தில் கட்சியில் ஏற்பட்ட பிளவுகளும், அதன் தொடர்ச்சியாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆரம்பமும்கூட ஐ.தே.க.வைப் பலவீனப்படுத்தியது. பிரேமதாஸவின் மரணத்தைத் தொடர்ந்து, பிரிந்து சென்ற காமினி போன்றவர்களை மீண்டும் இணைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்கூட கட்சியில் பிளவையே ஏற்படுத்தின.

எனினும், பல தடைகளையும் முறியடித்து ஜனாதிபதி வேட்பாளராக காமினி தெரிவுசெய்யப்பட்டபோது, கட்சியில் அதிருப்தி அதிகரித்தது. பின்னர் காமினியின் மரணத்தைத் தொடர்ந்து, கட்சித் தலைமையை ரணில் கைப்பப்பற்றக்கூடாது என்பதற்காக காமினி அணியினர் நிதானமிழந்து செயல்பட்டனர். கட்சியின் தலைமையைத் தம்வசமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ரணிலின் ஆதரவாளர்களை அவர்கள் பகைத்துக்கொண்டார்கள்.

இதற்காக அவர்கள் கையாண்ட அணுகுமுறைகள் அனுதாப வாக்குகளைக்கூட அவர்களால் பெறமுடியாத நிலைமையையே ஏற்படுத்தியது. உண்மையில், அந்த நடவடிக்கைகள் ரணிலின் பக்கமே அனுதாபத்தை ஏற்படுத்தின. ரணிலின் ஆதரவாளர்கள் பலர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்துக் கொண்டனர். ஐ.தே.க.வின் தோல்விக்கு அது முதலாவது காரணம்.

இரண்டாவதாக, கடந்தகால நடவடிக்கைகள் காரணமாக சிறுபான்மையின மக்களை ஐ.தே.க. அந்நியப்படுத்திவிட்டது. முக்கியமாக டி. பி. விஜேதுங்கவின் உரைகள் சிறுபான்மையின மக்களை மிகவும் மோசமான முறையில் புண்படுத்தின. அத்துடன், ஐ.தே.க. அரசால் அமுல்செய்யப்பட்ட பொருளாதாரத் தடை, ராணுவ நடவடிக்கைகள் போன்றன தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையே ஏற்படுத்தியிருந்தன.

மூன்றாவதாக, விலைவாசியேற்றம், பொருளாதார பிரச்னைகள், சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைவு மற்றும் விரயங்கள், ஊழல்கள் போன்றனவும் மாற்றமொன்

> இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சகல இன மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டு. பெரும் ஆதரவைப் பெற்றுள்ள ஒரு தலைவராக சந்திரிகாவே உள்ளார். இது அவருக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்துள்ளது. இந்தப் பலத்தைக்கொண்டு இனப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு சிறுபான்மையின மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.



படங்கள்: ஆனந்தி

யாழ்ப்பாணத்தில் வீதிப் போக்குவரத்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றின் அவசியத்தை சிங்கள மக்களுக்கு உணர்த்தியது. இதன் விளைவாகவே சரித்திரத்தில் காணாத தோல்வியை ஐ.தே.க. சந்தித்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தேர்தலொன்றில் கட்சியொன்று சந்தித்த மிகப் பெரிய தோல்வியாக இது கருதப்படுகிறது. முன்னைய தேர்தல் தொகுதி அடிப்படையில் கவனிக்கும்போது பதுளை மாவட்டத்திலுள்ள மஹியங்கனையில் மட்டுமே ஐ.தே.க. வெற்றி பெற்றது.

இதனைவிட, கடந்த இரண்டரை மாத காலத்தில் பொதுஜன முன்னணி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களின் பெருமளவு ஆதரவைப் பெற்றுள்ளது என்பதையும் அந்த் வெற்றி தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

சகல இன மக்களின் அங்கீகாரத்துடனும் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சந்திரிகாவின் கரங்கள் பலப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன. எனவே, இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எவற்றை அவர் மேற்கொள்வார் என்ற கேள்வி இப்போது அனைவரிடமும் எழுகின்றது. அரசு ஆரம்பித்துள்ள சமாதான முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ள மக்கள், எந்தவிதமான தாமதமுமின்றி இது தொடரவேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, இதனையிட்டு உடனடிக் கவனத்தை அரசு செலுத்தவேண்டிய நிலையிலுள்ளது. சமாதானத்தை முன்னெடுப்பதில் எதனையும் தடையாகக் கூறமுடியாத நிலையில் அரசு உள்ளது.

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் அரசு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இவை இரண்டும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியை அரசு தளரவிடக்கூடாது என்று கூறுகிறார் தமிழ் அரசியல்வாதி ஒருவர்.

இதனால், காமினி திஸநாயக்கவின் படுகொலையைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே அரசு உள்ளது. ஒரு குண்டுவெடிப்பைக் காட்டி பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டால் பல குண்டுவெடிப்புகள் இடம்பெறுவதற்கே அது வழிவகுக்கும். இதனை அரசும் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளதாகவே தெரிகின்றது.

மக்களின் ஆணை பலமாக இருப்பதால் சமாதானத்தை முன்னெடுப்பதற்கு எந்தத் தடையும் இன்று அரசாங்கத்துக்கு இல்லை.

என்ன செய்யப்போகின்றது புதிய அரசு? ❑

# சாதனைமேல் சாதனை



இலங்கை அரசியலில் புகழ் பூத்த அந்தக் குடும்பம் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக்கொண்டு விட்டது. இலங்கை அரசியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய பண்டாரநாயக்கவின் வாரிசுகள் மற்றொரு திருப்பத்தை அரசியலில் ஏற்படுத்தப்போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்துள்ளார்கள்.

இவர்கள் அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகின்றார்களோ இல்லையோ. 'கின்னஸ்' புத்தகத்தில் மட்டும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திவிட்டார்கள்.

1959ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்டார். இதனையடுத்து அவரின் வாரிசாக 1960இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டார். இதன் மூலம் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற சாதனையை அவர் ஏற்படுத்திக்கொண்டார். அத்துடன், கணவனின் மறைவைத் தொடர்ந்து அவர் களது மனைவிமார் அரசியலில் பிரவேசிக்கும் புதிய மரபொன்றையும் அவர் ஏற்படுத்தினார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பிரதமர் பதவியை யாரும் இரண்டு தடவைகளுக்குமேல் வகித்ததில்லை. சிறிமாவோ இப்போது பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டதன் மூலம் இந்தச் சாதனையையும் முறியடித்திருக்கிறார். 1960 ஆம் ஆண்டில் முதல்தடவையாக பிரதமரான அவர் 1970இல் இரண்டாவது தடவையும் தெரிவானார். 34 வருடகால அரசியலில் மூன்றாவது தடவை பிரதமராகப் பதவியேற்றதன்மூலம் இந்த சாதனையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.



சந்திரிகாவைப் பொறுத்தவரையில். கடந்த வருடம் மேல் மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றதன் மூலம் இலங்கையின் முதலாவது பெண் முதலமைச்சர் என்ற சாதனையை நிலைநாட்டினார். ஒன்றரைவருட காலத்திலேயே அரசியலின் உச்சத்துக்கு வந்த அவர். இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதியாக இன்று பதவியேற்றுள்ளார்.

பிலிப்பைன்ஸ். ஆர்ஜன்டீனா. நிக்கரகுவா ஆகிய நாடுகளிலேயே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளாக பெண்கள் இருந்திருக்கிறார்கள். இந்த வரிசையில் நான்காவதாக இப்போது சந்திரிகா இணைந்து கொள்கிறார்.

மகள் ஜனாதிபதியாகவும் தாய் பிரதமராகவும் உள்ள ஓர் அரசியலை. இலங்கையைவிட வேறு எந்த நாட்டிலுமே காணமுடியாது. இந்த வகையில் இதுவும் ஒரு சாதனையாகவே உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐ.தே.க. அரசின் 'புதையல்கள்'

**வில்மா விமலதாச**

சூரியகந்தை; இலங்கையின் தென்பகுதியில், மக்கள் மிக ஐதாக வாழ்கின்ற மலைப்பிரதேச இடமொன்று.

மாஜிஸ்ரேட் ஒருவரும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் அவதானித்துக்கொண்டிருக்க, கூலியாள்கள் பலர் நிலத்தை ஆழமாகத் தோண்டுகிறார்கள்.

நூற்றுக்கணக்கான பெற்றோரும்கூட ஆவலாகப் பார்த்திருக்கிறார்கள். பதற்றம்; தவிப்பு.

கிழிந்த உடைகளும், மனித சடலங்களும் குழியிலிருந்து மேலே கொண்டுவரப்படுகையில், சிலர் வீரிட்டு அழுகிறார்கள்.

> **ஒருவர்பின் ஒருவராக**
> **பலியான 32 மாணவர்கள்**
>
> அதிபரின் மகள். அம்மாணவர்களில் ஒருவருடன் காதல் கொண்டிருந்தார்.

1989-90இல், தென்னிலங்கையில் இளைஞர் கிளர்ச்சியொன்றில் காணாமல் போன 32 பாடசாலைச் சிறுவர்களின் சடலங்கள் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்டு இந்த அகழ்வு நடைபெறுகிறது. அப்பகுதியில், மேலும் 300 பேரின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இது ஒன்றும் புதிதான காட்சியல்ல. தென்பகுதியில், கடந்த ஆறு ஆண்டுகளில் இடம்பெற்ற அரசியல் கொலைகளில் 60 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் காணாமற் போயுள்ளதாகவும், ஆயிரத்துக்குமதிகமான வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் ஆகஸ்டில் பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்கவின் பொதுசன முன்னணி அரசு கூறுகிறது.

இத்தகைய துஷ்பிரயோகங்கள் இனி நடைபெறாது என்றும், கடந்த காலங்களில் இத்தகைய துர் நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்திருக்கிறார். அவரின் இந் நடவடிக்கை, இப்பொழுது எதிர்க்கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு (ஐ.தே.க) அரசியல் ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும். ஆனால் அதேவேளை, இலங்கையின் வரலாற்றில் பயங்கரமான ஒரு காலகட்டத்தின் ரணத்தை ஆறவைப்பதிலும் அது உதவுகின்றது.

வடக்கில், சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக ஒரு தனி தாயகத்துக்குப் போராடும் கெரில்லாப் போராளிகளோடு, தெற்கில் இடதுசாரி ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) யின் கிளர்ச்சிகளையும் ஒடுக்க வலதுசாரி ஐ.தே.க. அரசு முயன்றது.

ஜே.வி.பி.யை ஒழிக்கும் முன்னைய அரசின் நடவடிக்கைகள், இரவுவேளைகளில் திருடர்கள்போல வீடுகளுள் புகுந்து, அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவோர் எனச் சந்தேகிக்கும் இளைஞர்கள் அனைவரையும் அபகரித்துச் செல்லும் மரணப் படைகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

இளம் ஜே.வி.பி. இயக்கவாதிகளை ஒப்புதல் வாக்குமூலங்களுக்காக அவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கி, அந்தக் காயங்களின் வேதனையிலேயே அவர்கள் இறந்துபோக விடுவார்கள்; அல்லது சுட்டுக் கொல்வார்கள். பின்னர், சடலங்களை ரயர்களைப் போட்டு எரித்து, குழிகளில் புதைத்துவிடுவார்கள். சில சடலங்கள் ஆறுகளிலும் வீசப்பட்டன.

காட்டிக் கொடுப்பவர்களுக்கு இந்தக் காலம் சாதகமான காலமாகவும் இருந்தது. தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று எவர்பற்றியாவது இராணுவத்துக்கு, பொலிசாருக்கு தகவல் கொடுத்ததும், மறுகணமே அவர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

அந்த 32 பாடசாலைச் சிறுவர்களின் தலைவிதியும் அப்படியானதுதான். அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளின் சந்தேகத்தில் கொல்லப்படவில்லை. ஆனால், அவர்களது பாடசாலை அதிபரின் மகள், அம்மாணவர்களில் ஒருவருடன் காதல் கொண்டிருந்தார் என்று ஆத்திரம் கொண்ட அதிபரால் அவர்களுக்கு அக்கதி ஏற்பட்டது. விசாரணைக்காக இம் மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக அழைத்துச் செல்லப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

புதிய அரசின் உறுதிமொழிக்கமைய, பாடசாலை அதிபரும், நான்கு இராணுவ அதிகாரிகளும் இக் கொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதுதவிர, வேறும்பல புதை குழிகளும் தோண்டப்படுகின்றன. இன்னொரு சம்பவத்தில், கொழும்பின் தென்மேற்குப் பகுதியில், கொகந்தர என்ற இடத்தில் 5 மனித எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டதையடுத்து, பொலிசார் தமது சகாவான உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசேட பிரிவொன்று நிறுவப்பட்டு, பெற்றோரும், உறவினரும் சடலங்கள் கண்டெடுக்கப்படக்கூடியவர்களின் பெயர்கள், இடங்கள் பற்றி தெரிவிக்கிறார்கள்.

முன்னைய அரசாங்கத்தின் ஜே.வி.பி.க்கு எதிரான இத்தகைய குரூர நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்த பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்கள்மீது, நீதிக்குப் புறம்பான கொலைகளில் அவர்களின் ஈடுபாட்டுக்காக கொலைக் குற்றம் சுமத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மனித உரிமைகள் தொடர்பில் அரசின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், புதிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சித்திரவதைக்கெதிரான சர்வதேச உடன்படிக்கைக்கு உள்ளூர் வலுவை ஏற்படுத்தும் விதத்தில் சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார். சித்திரவதை, இந்த உத்தேச சட்டமூலத்தின் மூலம், 7 முதல் 10 வருட சிறைத் தண்டனை அல்லது 10 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபா வரையிலான அபராதத்துக்குரிய குற்றமாக ஆக்கப்படுகிறது.

சுமத்தப்பட்ட சித்திரவதைக் குற்றம் இலங்கைக்கு வெளியில் புரியப்பட்டிருந்தாலும் சம்பந்தப்பட்டோர் மீது விசாரணை நடத்தி, தண்டனை வழங்குவதற்கான மேல் நீதிமன்ற அதிகாரத்துக்கும் சட்டமூலம் வழிவகுக்கிறது. (நாணய மாற்று: 1 mbkÇ¡fblhy®=49% gh) ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேயரின் தலைமைக்கு சோதனை

பொன். பாலசுந்தரம்

தலை தப்பினாலும் தலைவலி தீரவில்லை. தலைவலி தீராததால் தலையும் போகலாம்.

இன்று, பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரின் நிலை இதுதான். சர்ச்சைக்குரியதும், மேயரின் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள்ளேயே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதுமான ஒன்று, பிரசில்ஸை



தலைமையாகக் கொண்ட ஐரோப்பிய சமூக அமைப்பு.

'பிரசில்ஸா, பிரிட்டனா? இதில் எது பிரிட்டிஷாருக்குத் தேவை?'

'பிரிட்டன் தன்னைத் தானே நம்பி வாழும் கௌரவம் மிக்க நாடு. ஆனால், இன்றோ அது பிரசில்ஸை நம்பி வாழும் ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறது.'

இப்படி, பல குற்றச்சாட்டுகளை மேயர் அரசு எதிர்நோக்குவதுடன், அவற்றைச் சமாளிக்கவேண்டியும் இருக்கிறது. இவ்வேளையில்தான், ஐரோப்பிய சமூக அமைப்புக்கு பிரிட்டன் வழங்கும் நிதி உதவியை தொடர்ந்து வழங்கவும், அதனை அதிகரிக்கவும் கோரும் மசோதா ஒன்றை மேயர் அரசாங்கம் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு முன்வைத்தது. அவ்வளவுதான்; தொழிற் கட்சிக்கு அது அவலாகிவிட்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மேயரையும், கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தையும் ஆட்டங்காணச் செய்ய தொழிற் கட்சி முனைந்தது.

கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் ஐரோப்பிய சமூகத்தையும், பிரிட்டன் அதற்குப் பெருமளவு பணத்தை அளிப்பதையும் எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். இப்படி எதிர்ப்பவர்களுக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. 1922ஆம் ஆண்டில், அரசாங்க கட்சியின் பின்வரிசை எம்.பிகள் சிலர், தமது குரலுக்கு முக்கியத்துவம் கோரி, குழு ஒன்றை அமைத்திருந்தார்கள். அது '1922 குழு' என்று, இன்னமும் செயல்பட்டு வருகிறது. அக் குழுவில் உள்ளவர்கள் சிலர் மேயரின் இந்த கோரிக்கையை எதிர்த்தார்கள். அதனை தனக்கு சாதகமாக்கிக்கொள்ள தொழிற் கட்சி தீர்மானித்தது.

அதிகரித்த நிதி உதவி தேவையில்லை என்றும், பிரிட்டிஷ் மக்களால் அதை ஏற்க முடியாது என்றும் கூறும் ஒரு திருத்தப் பிரேரணையை தொழிற் கட்சி கொண்டுவந்தது. கன்சர்வேட்டிவ் கட்சிக்குள்ளிருந்து இந்த ஐரோப்பிய நிதி மசோதாவுக்கு எதிராக போர்க்கோலம் பூண்டோரின் போக்கு எப்படி இருக்குமென்பதில்தான் தொழிற் கட்சியின் பார்வை விழுந்தது.

தனது கட்சியைச் சார்ந்த சிலர் புரட்சிக்கு தயாராக இருக்கிறார்கள் என்று அறிந்ததும் மேயர் உஷாராகிவிட்டார். அரசாங்கம் கொண்டுவரும் மசோதா தோல்வி கண்டால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு செல்வதைத் தவிர தமக்கு வேறு வழி இல்லை என்று எச்சரித்தார். 'கூண்டோடு கைலாயம்' என்பதுபோல, அமைச்சரவை அப்படியே ராஜிநாமா செய்துவிடும் என்று மேயர் கூறியதும், அது 'தற்கொலை ஒப்பந்தம்' என்று தொழிற் கட்சியும், பத்திரிகைகளும் கண்டனமும் கிண்டலும் செய்தன. எனினும், மேயர் நிலை மாறவில்லை. மசோதா மீதான வாக்கெடுப்பை அரசாங்கத்தின் மீதான ஒரு நம்பிக்கைப் பிரேரணையாகவே கருதப்போவதாக அவர் அறிவித்தார். பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி நடத்திய மார்க்கிரட் தச்சரின் திறமையும், கண்டிப்பும், விட்டுக் கொடுக்காத போக்கும், சாதனைத் திற






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னும் ஜோன் மேயரிடம் இல்லை என்பது பலரதும் குற்றச்சாட்டு. ஆனால், அவர் இதுவரையில் தமது நான்கு வருட தலைமையில் ஏதோ ஒரு வகையில் பிரச்னைகளை சமாளித்து வந்திருப்பதையும் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள்.

தேர்தலை எதிர்நோக்க கன்சர்வேட்டிவ்கள் தயாராக இல்லை. சில பத்திரிகைகளின் கணிப்புப்படி, இப்போது தேர்தலுச் சென்றால் வெற்றி வாய்ப்பு தொழிற் கட்சிக்கே உண்டு. இதுதான் மேயருக்கு இப்போது சாதகமாகியது. போர்க்கொடி உயர்த்திய கன்சர்வேட்டிவ்களும் தேர்தலுக்கு தயாரில்லை. தொழிற் கூட்சியின் திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஆதரவாக 303 பேரும், எதிராக 330 பேருமாக 27 அதிகப்படி வாக்குகளால் பிரேரணை தோல்விகண்டது. கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த 7 எம்.பி.கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; ஒருவர் தொழிற்கட்சியினருடன் சேர்ந்து ஆதரவாக வாக்களித்தார். இந்த எட்டு எம்.பி. களும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக இனிவரும் பொதுத் தேர்தல்களில் கட்சியின் சார்பில் போட்டியிட அவர்களுக்கு அனுமதி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சமூகத்தில் 15 நாடுகள் உள்ளன. இவற்றில் அநேகமான நாடுகள் பிரிட்டன் இந்த அமைப்புக்கு வழங்கும் பணத்தில் ஆடம்பரமாக இருக்கின்றன என்றும் அதேவேளை, பிரிட்டிஷ் மக்களைச் சுரண்டி, அரசு தானம் செய்வதாகவும் எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். பிரிட்டனின் நிகர உதவி அடுத்த ஆண்டில் ஏழரைக் கோடி ஸ்ரேர்ளிங் பவுணாகவும் அடுத்தடுத்த ஆண்டுகளில் படிப்படியாக அது அதிகரித்து 1999ஆம் ஆண்டில் 25 கோடி பவுணாக இருக்குமென்றும் தெரிவித்த நிதி அமைச்சர் ஆர்தர் கிளார்க், இது ஒரு சர்வதேச உடன்படிக்கை; அதனைக் கௌரவிக்கவே வேண்டும் என்றும் கூறினார். ஐரோப்பிய சமூக நாடுகளிலிருந்து பிரிட்டன் தனித்து நின்றால் பிரிட்டனால் எதனையும் சாதிப்பது கடினம் என்பது நிதி அமைச்சரின் தொனியாக இருந்தது.

எப்படியெனினும், இந்த விவாதத்தில் மேயர் தப்பித்துக்கொண்டாலும் அவருடைய தலைவலி முற்றாக தீர்ந்துவிடவில்லை.

மேயரின் தலைமையை மாற்ற வேண்டும் என்பதில் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் திரை மறைவு அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

எரிபொருள் பாவனைக்கான வரியை 8 சதவீததித்லிருந்து 17.5 சதவீதத்துக்கு அதிகரித்ததனால் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

கன்சர்வேட்டிவ் தலைப் பீடத்தைக் கைப்பற்றுவதில் அமைச்சர் மைக்கல் ஹசில்ரைனுக்கு ஆசை இருக்கிறது. 1992இல் தச்சரை பதவி இறக்குவதில் முன்னிணியில் நின்றவர் இவர். ஆனால், அண்மையில் தபால் நிலையங்களைத் தனியார் மயமாக்கும் இவரது கொள்கைக்கு பாராளுமன்றத்தில் விழுந்த 'அடி' இவரைச் சற்று பின்னுக்குத் தள்ளியிருக்கிறது. இவரைவிட, நிதி அமைச்சர் கிளார்க். இப்படி இன்னுஞ் சிலர் இருக்கிறார்கள்.

பிரிட்டன் இன்று பலமுனைப் பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது. உள்நாட்டு அரசியல், பொருளாதார பிரச்னைகளில் வெளிநாட்டு விவகாரங்கள் கோணலாகியுள்ளன.

பணவீக்கத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்து, உலக அரங்கில் மற்றைய நாடுகளுடன் சமமாக நிறுத்தவேண்டும். இவற்றையெல்லாம் சமாளிக்க இன்று பிரிட்டனுக்கு வேண்டியது நிதானமான, நேர்மையான அரசியல் சாணக்கியம் நிறைந்த அரசாங்க தலைமையே. □

# மேயர்: தொடரும் சோதனை



பாராளுமன்றத்தில் எரிபொருள் பாவனைக்கான வரி அதிகரிப்பு உபமான்ய பிரேரணை மீதான விவாதத்தில் மேயர் அரசாங்கம் 8 வாக்குகளால் தோல்வி கண்டது.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் உள் பூசல்களை இது அம்பலமாக்கியதுடன், மேயரின் தலைக்கான ஆபத்து தொடர்வதற்கான எச்சரிக்கையும் விடுக்கிறது.

மேயர் அரசு உண்மையிலேயே அடித்தளத்தை இழந்துவிட்டது. வாக்கெடுப்பின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட இந்த உண்மை, தொழிற் கட்சியினருக்கு குதூகலத்தை அளிக்கிறது. அரசாங்கத்தைக் கலைத்துவிடும்படியும் அது கோருகிறது.

ஒரு நிதி மசோதா மீது அரசாங்கம் தோல்வியடைந்தால் மட்டுமே அது ராஜினாமா செய்யவேண்டும் என்பது பாராளுமன்ற சம்பிரதாயம். ஆனால், இப்போது இந்த வரி அதிகரிப்பு மசோதா அப்படியானதல்ல. நிதி அமைச்சர் இதனை நிவர்த்தி செய்ய வேறு வழிவகைகளைக் கையாளமுடியும். அவ் வேளைகளிலும் என்ன நடக்கும் என்பதனையும் கூறிவிட முடியாது.

கன்சர்வேட்டிவ் கட்சி இப்பொழுது, ஐரோப்பிய நிதி உதவி மசோதாவுக்கு எதிராக வாக்களித்து கட்சிக்கோப்பை இழந்த எம்.பி.களுக்கு மன்னிப்பளித்து, இன்னொரு தடவை கட்சியின் பலத்தை கட்டியெழுப்ப முயல்வது; அல்லது, மேயரின் தலைமையை மாற்றி வேறொருவரைப் பிரதமராக்கி கட்சிக்கு புத்துயிரூட்டுவது; அல்லது பொதுத் தேர்தலை எதிர் கொள்வது என்ற அதற்குள்ள இந்த வழிவகைகளில் எதனை மேற்கொண்டாலும் அதன் எதிர்காலம் கடினமானதாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

தொழிற்கட்சிக்கு இப்பொழுது ஆதரவு அலை சாதகமாகவே இருக்கிறது. தொழிற் சங்கங்களின் சார்புடைய இக்கட்சி பதவிக்கு வந்தால் பிரச்னைகள் அதிகரித்து, பணவீக்கத்திலிருந்து இப்பொழுது தலைதூக்கிக் கொண்டிருக்கும் பிரிட்டன் மீண்டும் பின்தள்ளப்பட்டுவிடும் என்ற பயமும் மக்கள் மத்தியில் இருப்பதாக தெரிகிறது. பெருமை, பாரம்பரியம், பழமை போன்றவற்றை விரும்பும் பிரிட்டிஷ் மக்கள் தேர்தலில் என்ன செய்வார்கள் என்பதை கூறிவிடுவது சுலபமல்ல.

முடியாட்சியை மடிமேல் வைத்து தாலாட்டுபவர்கள் பிரிட்டிஷ் மக்கள் என்று தெரிந்தும், தாம் பதவிக்கு வந்தால் முடியாட்சியை மட்டம் தட்டப்போவதாக தொழிற் கட்சி கூறியிருப்பது 'இராணித் தேனீயின் கூட்டுக்கு கல்லெறிந்த கதை'யாகத்தான் தோன்றகிறது. தொழிற் கட்சியினர் அரசியல் குட்டையின் ஆழம் தெரிந்தவர்களாக இருந்தும் இப்படிக் காலை விடுவது நல்லதுதானா? □

— பாலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ராவுக்கு ஒரு சவால்

## நேரு குடும்பம் ஆட்சியில் தொடர சோனியா முயல்கிறார்

டி. கே. ஜோஷி

### இந்தியாவின் முதல் குடும்பம்




மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாவின் முகத்தில் அவ்வப்போது புன்முறுவல் பூக்க ஆரம்பித்திருக்கிறது. அது பலரையும் வெகுவாகவே கவருகிறது; ராஜீவ் காந்தியின் ஆதரவாளர்கள் பெருமளவினருக்கு பெருமகிழ்வைத் தருகிறது.

ஆனால், பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கோ அந்த முறுவல் கவலையைத்தான் அளிக்கிறது. பிரகடனப்படுத்தாத ஒரு போட்டி ராவுக்கும், இத்தாலியப் பெண்ணான சோனியாவுக்குமிடையே, கட்சி ஆளுமையைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. 1966 முற்பகுதியில் நடைபெறவிருக்கும் அடுத்த பொதுத் தேர்தலுடன் இது முழுமையாக வெளிப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரத்தைத் தொடர்ந்து, இந்திய அரசியலில் பெரும் ஆதிக்கத்தைக் கொண்டிருந்த நேரு பரம்பரையை மேலும் அதில் தொடரவைக்க அவர் விரும்புகிறாரா, அல்லது செல்வாக்குமிக்க அரசியல் சூத்திரதாரி என்பதுடன் மாத்திரம் நின்றுகொள்ள நினைக்கிறாரா என்பது இன்னமும் தெளிவாகவில்லை. கணவரது கொலைக்குப் பின்னர், 1991இல் அவரின் தெரிவாகவே ராவ் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆளும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளில் அவரின் பிரசன்னம் அதிகரித்திருப்பதும், அவரின் 230 மில்லியன் ரூபா ராஜீவ் காந்தி அடிப்படைநிறுவன (Rajiv Gandhi Foundation) அறிவுத்துறைதர்ம நடவடிக்கைகளில் அவர் மும்முரமாக ஈடுபடுவதும் ஒதுங்கியே வாழ்ந்துவிட அவர் விரும்பவில்லை என்பதைச் சாற்றுகின்றன.

அவர் பலவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டு, சாதுரியமாக செயல்படுவதாகவே பலரும் நம்புகிறார்கள். வெளிநாட்டவராக இருந்தாலும், பிரதமர் இந்திரா காந்தி தன்னுடைய அரசியல் வாரிசாக தான் தேர்ந்த சஞ்சய் காந்தியின் மனைவி மனேகாவைவிட, சோனியாவே அவரின் பெருவிருப்புக்குரிய மருமகளாக விளங்கினார். ராஜீவின் மரணத்துக்குப் பின்னர் காங்கிரசின் தலைமைப் பதவி சோனியாவுக்கு வழங்கப்பட்டபோது அவர் அதை ஏற்க மறுத்தார். எதிலும் ஈடுபடாமல் காங்கிரசினதும், ராவ் அரசாங்கத்தினதும் நடவடிக்கைகளை அவர் சேய்மையிலிருந்தே அவதானித்து வந்தார். தன்னுடைய நடத்தையில் தனக்கொரு மதிப்பை அவர் உருவாக்கினார். ராஜீவ் ஆதரவாளர்களின் மனத்தாங்கல்களை அவர் செவிமடுத்தாலும், அவர்களுக்காக ராவுடன் எவ்வித சர்ச்சையையும் அவர் ஏற்படுத்தவில்லை.

ஆனால், சோனியாவின் போக்கில் ஒரு மாற்றம் துல்லியமாகவே இப்போது தெரிகிறது. ஜூனில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டதில் அவருக்கு பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜீவ் கொலைக்குப் பின்னர் அவர் கலந்துகொண்ட முதல் அரசியல் வைபவம் அதுவே. ராவ் பிரவேசித்த சமயம் பார்த்தே, போட்டிக்கு நிற்கும் பிரதமரைப்போல, கட்சியின் ஏக தலைவராக அவரும் பிரவேசித்தார்.

சோனியா காண்பிக்கும் இந்த சமிக்ஞையை, ராவ் ஒன்றில் பொருட்படுத்தவில்லை; அல்லது அவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ராஜீவ் காந்தி யின் 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காங்கிரஸ் கூட்டத்தில் ராஜீவ் ஆதரவாளர்களால் ராவ் பகிரங்கமாகவே அவமரி யாதைக் குள்ளானார். 'சோனியா காந்தி வாழ்க. சோனியா காந்தி, நீங்களே நாட்டை ஆள்கிறீர்கள்' போன்ற சுலோகங்களை அவர்கள் 10 நிமிடங்களுக்கு மேலாக கோஷமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

> அவர் பலவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டு, சாதுரியமாக செயல்படுவதாகவே பலரும் நம்புகிறார்கள்.
>
> 'பொது மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் தொடர்பான அவரது அணுகுமுறைகள் இந்திரா காந்தியைப் போன்றவை'

சமீபத்தில் கல்கத்தா விஜயமொன் றின்போது, வீதியின் இருமருங்கிலும் திரண்டு நின்ற மக்களுக்கு அவர் கையசைத்து, மகிழ்ச்சி தெரிவித்தது மாத்திரமன்றி, பாதுகாப்பு எல்லைகளை மீறி அருகே வந்தவர்களிடையே சிறிய உரையையும் ஆற்றியிருக்கிறார். மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு, 'பொது மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் தொடர்பான அவரது அணுகுமுறைகள் இந்திரா காந்தியைப் போன்றவை'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று ஒப்பிடுகிறார்.

கம்யூனிச ஆட்சியிலுள்ள கல்கத்தாவுக்கான அவரது இந்த விஜயம் பரீட்சார்த்தமான ஒன்று என்றே அவதானிகள் கருதுகின்றனர். காங்கிரஸ் தலைவர்கள் அவரிடம் சென்று சம்பிரதாய ரீதியல் மரியாதை செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். 'உபகண்டத்தில் தொடரும் பரம்பரை ஆட்சியை சோனியா நிறைவேற்றுவார் என்றே பலரும் நம்புகிறார்கள். பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகள் மறைந்த தலைவர்களின் மனைவி, அல்லது புதல்விகளால் ஏற்கனவே ஆளப்படுகின்றன. 'சம்பிரதாய கட்டுப்பாடுடைய சமுதாயத்தில், பரம்பரை ஆட்சிக்கு சட்டபூர்வமான ஓர் உரிமை உண்டு' என்று இவர்கள் வாதிடுகிறார்கள்.

இந்திய சமூகத்தினரிடையே படித்தவர்களிலிருந்து பாமரர் வரை, பலதரப்பட்டவர் மத்தியிலும் செல்வாக்கைத் தேடும் விதத்தில், ராஜீவ் காந்தி ஆதார நிறுவனத்தின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் சோனியா பயன்படுத்துவதாக விமர்சகர்கள் கருதுகிறார்கள். இந்த ஆதார நிறுவனம் அதன் ஓர் அமைப்பான சமகால கல்வி நிறுவனத்தின் (Institute For Contemporary Studies) மூலம் விரிவுரைகள், கருத்தரங்குகளை ஒழுங்கு செய்கிறது. அத்துடன், பஞ்சாப் மாநிலத்தில் பயங்கரவாத வன்செயல்களால் அனாதைகளான பிள்ளைகளின் கல்வி, பராமரிப்புக்கு பணமும் வழங்குகிறது.

இந்தியா முழுவதும் வீதியோரங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கு இரவு தங்குமிடமும், பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்களையும் அது ஏற்கனவே வகுத்திருக்கிறது. நிவாரண, அபிவிருத்தி வேலைகளுக்காக அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவியும் அளிக்கிறது.

இந் நடவடிக்கைகள், சோனியா மக்களின் மனங்களை வெல்வதற்கான வழிவகைகளாகவே தென்படுகின்றன. கலை, கலாச்சார நடவடிக்கைகளிலான அவரின் ஈடுபாடும், புராதன பொருள்கள் மீதான ரசனையும் மக்களுக்கு அவரின் மாமியாரை நினைவூட்டுகின்றன.

காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் கர்நாடகா முதல்வர் பங்காரப்பா போன்று, தனக்குப் பகையானவர்களுடனான ராஜீவ் அடிப்படை நிறுவனத்தின் தொடர்புகளை ராவ் கவனிக்காமலேயே இருக்கிறார். சோனியாவும், கிருஷ்ணமூர்த்தி போன்ற, ராஜீவ் அரசாங்கத்தில் உயர் பதவி வகித்து, ராவ் அரசாங்கத்தால் குற்ற வழக்குகள் சுமத்தப்பட்டோர் போன்றோரை அந்நிறுவனத்திலிருந்து நீக்கிவிட எண்ணவில்லை.

1966இல் அரசியல் உயர் பதவிக்கு சோனியா குறிவைக்காவிட்டாலும், மகள் பிரியாங்காவையோ, அல்லது மகன் ராகுலையோ அவர் அப்பதவிக்கு தயார்படுத்தலாம். எப்படியெனினும், ராவுக்கு நிச்சயமாக அவர் அதிகாரத்தில் வைரியாகவே ஆவார். ஓர் அரசியல்வாதியைப் போன்று, அதிகாரத்தைத்தேடி வெளிப்படையாகவே அவர் வந்துவிட மாட்டார் என்று ராவின் ஆதரவாளர்கள் நம்புகிறார்கள். 'சோனியாவின் நடவடிக்கைகள், ராவ் அடிக்கடி அவரைத் திரும்பிப் பார்க்கவே வைக்கும்; ஆனால், ராவுக்கு அவர் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்பது, அவருக்கு ஓர் இடைஞ்சலாக இருக்கமுடிவது மட்டுமே' என்று அரசியல் விமர்சகர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

நேரு பரம்பரையிலிருந்து ராவ் அதிகம் சுதந்திரமாகச் செயல்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்வதுதான் சோனியாவின் நோக்கமென்று சிலர் கருதுகிறார்கள். கட்சிமீது ராவ் தனது ஆளுமையைப் பதிக்க முனையும்போதெல்லாம் சோனியா அவற்றை ராஜீவைக் கண்டிப்பனவாகவே நோக்குகிறார்.

ஆக, இவை எல்லாவற்றையும் விட, சோனியா பாதுகாக்கவேண்டியவை பல: அவரது விசேடமான ஸ்தானம் - கௌரவம்; அவரின் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள்; அவரது பிள்ளைகளின் எதிர்காலம். □

## ஜரிகைப் பட்டில் கிளின்டன்

சென்னையில் அமெரிக்க தூதரகம் தொடங்கி 200 வருடங்கள் நிறைவதைக் குறிக்கும் வகையில் அமெரிக்கத் தகவல் மையம் ஒருமாத கால விழாவை நடாத்தி வருகிறது. தொடக்க நாளான நவம்பர் எட்டாம் தேதி இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் பிராங் விஸ்னர் இதற்காக சென்னை வந்திருந் தார். இருநூறு வருடங்களில் இந்திய அமெரிக்க உறவை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைக் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி.

அங்கு, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது நான்கு அடி அகலமும் எட்டடி உயரமும் கொண்ட மரகதப் பச்சைப் பட்டு நூலில், அசல் தங்க ஜரிகையினால் நெய்யப்பட்ட ஒரு தோரணம். அதில் நடுவே காட்சியளிக்கின்றனர் அமெரிக்க அதிபர் பில் கிளின்டனும், பிரதமர் நரசிம்ம ராவும். பட்டாலும், ஜரிகையாலும் இந்திய அமெரிக்க உறவை இழையோடு இழையாக அழகாக நெய்து அன்பளிப்பு செய்திருப்பவர் சென்னை குமரன் சில்க்ஸ் அதிபரும் முன்னாள் சென்னை நகர துணை ஷெரீஃபுமான திரு பி. சி. ராமமூர்த்தி.

தமிழக மக்கள் சார்பில் இந்தத் தோர ணத்தை அமெரிக்க அரசுக்கு வழங்குவதாக தெரிவித்த ஆளுநர் சென்னா ரெட்டி, இந்தத் தோரணம் வாஷிங்டன் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையை அலங்கரிக்க வேண்டும் என்று அமெரிக்க தூதர் பிராங் விஸ்னரிடம் கேட்டுக் கொண்டார். அதற்கு முன்னதாக இதைப் பிரதமர் நரசிம்மராவிடம் காண்பியுங்கள் என்றும் கூறினார்.

இந்த அதியற்புதமான கலையழகு மிக்க தோரணம் இப்பொழுது சென்னை அமெரிக்க தூதரகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு படைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது என்று குமரன் சில்க்ஸ் அதிபர் ராமமூர்த்தியைக் கேட்டபோது அவர் சொன்னார்:

'சில வருடங்களுக்கு முன்பு என் பிறந்த நாளையொட்டி காஞ்சிபுரத்திலுள்ள எங்கள் வாடிக்கையாளர்களான பட்டு நெசவாளர்கள் இதே மாதிரி பட்டிலும் ஜரிகையிலும் என்னையும் என் மனைவியையும் சிறப்பாக உருவகப்படுத்தி நெய்து தந்தார்கள். நமது உருவம் பதித்த பட்டுத் தோரணம் நம்மிடம் இருப்பதில் பெரிய பயனுமில்லை, பெருமையுமில்லை என்று நினைத்த நான், வேறு பிரமுகர்களின் உருவங்களை இவ்வாறு பட்டில், ஜரிகை இழைகளாக நெய்யச்செய்தேன். அமெரிக்க தூதரகத்துக்கு இந்திய அமெரிக்க உறவை விளக்கும்படி இதைச் செய்தேன்.

இதைச் செய்துமுடிக்க மூன்று மாதம் ஆகியிருக்கிறது. குறிப்பாக, நடுவில் உள்ள கிளின்டன்-ராவ் உருவப் பகுதியை மிகுந்த கவனத்துடன் நெய்வதற்கு கலையுணர்வுகொண்ட எம் நெசவாளர்கள் 19 மணிநேரம் எடுத்துக்கொண்டனர். ஓர் இழை பிசகினாலும் உருவ அமைப்பு மாறிவிடும் என்பதே இதற்குக் காரணம்.

இதைத் தயாரிக்க எவ்வளவு செலவாகியிருக்கும் என்று திரு ராமமூர்த்தியைக் கேட்டோம். மொத்தச் செலவை இனிமேல்தான் கணக்கிட வேண்டும் என்றவர், 'எனினும் இரு நாடுகளதும் உறவை டொலரிலும் ரூபாயிலும் மதிப்பிட்டுவிட முடியுமா' என்று கேட்டார்.


ஆனால், அமெரிக்க தகவல் மையத்தில் இந்தத் தோரணத்துக்கு அருகே உள்ள தகவல் பலகை, இதன் மதிப்பு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் என்கிறது. □

– ந. சாவித்திரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்நாடும் தலைநகரும்: பாமரன்

# சேஷன் கிளப்பிய 'சென்சேஷன்'

## திராவிட கட்சிகள் ஒன்று சேர்ந்தன

நூல் என்றால் சிக்கல்; வரலாறு என்பது தகராறு. இதுதான் இன்று தமிழ்நாட்டின் நூல் வரலாறு.

பேசுவதனால் பிரச்னைகளுக்கு உள்ளாகும் இந்தியாவின் தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் இந்தவகையில் தன் வரலாறு மூலம் ஒரு புதிய சிக்கலை உண்டாக்கியிருக்கிறார்.

சாதாரணமாக நண்பர்களுடன் பேசும்பொழுது ஊசிவெடிகளாகச் சொற்களைச் சிந்துவார். விதிகள் மீறப்படும்பொழுது நட்பு - பகை பாராமல் சம்பந்தப்பட்டவர்கள்மீது வெங்காய வெடிகளை வீசுவார். பத்திரிகையாளர் கூட்டங்களில் சரவெடி கொளுத்துவார். பொதுமேடைகளில் கட்டுக்கட்டாக பட்டாசுக்களை வெடிப்பார். ஆகவே, அவரைச்சுற்றி எப்பொழுதுமே பகையும் புகையும்.

சேஷன் இப்பொழுது ஓர் அரசியல் அணுகுண்டுக்குத் திரியில் தீ வைத்திருக்கிறார். அது வெடிக்கும்பொழுது அவர் காயம்படாமல் தப்புவாரா என்பது தெரியவில்லை. காயம் பட்டாலும் அலட்டிக் கொள்பவரில்லை. அடுத்தவர் காயப்படுவதுபற்றியும் அவர் அலட்டிக்கொள்வதில்லை. சேஷனின் புதிய வெடிகுண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவுநர் அமரர் சி. என். அண்ணாதுரை பற்றியது.

முப்பது வருடங்களுக்கு முன்பு மதுரை மாவட்ட கலெக்டராக இருந்தபொழுது தாம் சந்தித்த இந்தி எதிர்ப்பு போராட் டம் பற்றி தனது வரலாற்று நூலில் நினைவுகூரும் சேஷன், 'அண்ணா அறிந்தோ அறியாமலோ இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையொட்டி அமெரிக்க உளவு நிறுவனமாகிய சி.ஐ.ஏ.யின் கைப்பாவையாக செயல்பட்டார். அந்தப் போராட்டத்தை சி.ஐ.ஏ. மறைமுகமாகத் தூண்டியது' என்று சொல்கிறார். சேஷனின் வாழ்க்கை வரலாற்றை Seshan: An Intimate Story என்ற தலைப்பில் புத்தமாக எழுதியிருப்பவர் FINANCIAL EXPRESS நாளேட்டில் பணிபுரியும் நிருபர் கே. கோவிந்தன்குட்டி.

புத்தகம் கிளப்பிவிட்டுள்ள பிரச்னையைப் பார்க்கும்போது, Seshan: An Intimidate Story என்றே பெயர் வைத்திருக்கலாமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. உத்தேச வெளியீட்டு நாள் அக்டோபர் 17ஆம் தேதி. ஆனால், அதற்கு ஐந்து நாள்கள் முன்னதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு 'அண்ணாதுரைக்கு சி.ஐ.ஏ. தொடர்பு - சேஷன் சொல்கிறார்' என்றபடி ஒரு முன்பக்கச் செய்தியை புத்தக வெளியீட்டின் முன்னோட்டமாக எழுதியிருந்தது.

வழிபாட்டு உணர்வுமிக்க தமிழர்களைப் போராடுவதற்குத் தனியாகத் தூண்டவேண்டிய அவசியம் இல்லை என்பதனால் தி.மு.க, ம.தி.மு.க, அ.இ.அ.தி.மு.க. கட்சித் தலைவர்கள் அறிக்கைகள் விடுக்க ஆரம்பித்தார்கள். 'சேஷன் தன் கூற்றை வாபஸ் பெறவேண்டும்' என்று குரல் கொடுத்தது திமுக. கலைஞர் முரசொலியில் கட்டுரைகள் எழுதினார். தலைநகரில் போராட்டம் நடத்துவோம் என்றார் ம.தி.மு.க. தலைவர் வை. கோபால்சாமி. ஆட்சியில் உள்ள காரணத்தினால், வசதியினால் இன்னும் ஒருபடி மேலே போயிற்று அஇஅதிமுக. ஒரு ஞாயிற்றுக்கிழமை உயர்நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் முறையிட்டு புத்தக வெளியீட்டுக்கு ஆறுவார கால இடைக்காலத் தடையைப் பெற்றுக் கொண்டது. நான்கு வாரகாலத்துக்குள் நூலாசிரியரும், நூல் நாயகரும் பதில்கொடுக்க ஆணையிடப்பட்டார்கள்.

எப்படியோ திராவிட இயக்கங்களை ஏதோ ஒரு வழியில் குறுகிய காலத்துக்காவது ஒருங்கிணைந்து போராடத் தூண்டியுள்ள சேஷனை கட்சிகளுக்கு அப்பாற்பட்ட திராவிட உணர்வு கொண்டவர்கள் நன்றியுடன் நினைத்துப்பார்க்கக் கடமைப்பட்டவர்கள். கட்சித் தலைவர்களும் சேஷனுக்கு நன்றி செலுத்தவேண்டும். கட்சிகளின் உள் பிரச்னைகளைக்கண்டு கட்சியினரும் மக்களும் வெறுப்படைந் துபோயிருக்கும் இந்நேரத்தில் பழைய குப்பையைக் கிளறி, உணர்ச்சிப்பெருக்குக்கு வழிதிறந்து எல்லோருமே சிலகாலம் அரசியல் நடத்தமுடியும்.

தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, நண்பர்களைவிடவும் பகைவர்களை அரசியல் அரங்கில் அதிகம் சம்பாதித்துள்ள சேஷன் முரட்டுப் பிடிவாதக்காரர். எனவே, அவர் தனது சி.ஐ.ஏ., சி.என்.ஏ. தொடர்பு பற்றி கருத்தினைத் திரும்பப்பெற்றுக்கொள்வாரா என்பதை இப்போதைக்கு உறுதியாகச் சொல்லமுடியாது. விழுவது தெரியாமல் விழவும் தெரியும் அவருக்கு.

ஆனாலும், சேஷன் - அண்ணா - சி.ஐ.ஏ. - திராவிடக் கட்சிகள் தாண்டி இந்தப் புத்தக வெளியீட்டுச் சிக்கல் சில நிதர்சனமான உண்மைகளை மக்கள்முன் வைக்கிறது. ஆனால், அதைப்பற்றிப் பேசுவோர் அதிகம் இல்லை என்பதுதான் தமிழ்நாட்டின் கருத்துலகச் சீரழிவுக் கொடுமை.

* ஒரு புத்தகத்தில் மாறுபட்ட கருத்து தெரிவிக்கப்படுகிறது என்பதனால் புத்தகத்தையே தடைசெய்யவேண்டும் என்று கோருவது சரியல்ல.

* சம்பந்தப்பட்டவர்கள் பிரச்னைக்குரிய புத்தகத்தைப் படித்துப்பார்த்து, மறுக்கவேண்டிய கருத்துக்களுக்குத் தம் மறுப்பைத் தெரிவித்து அதையே ஒரு சிறு புத்தகமாக வெளியிடலாம்.

* ஏற்காத கருத்துக்களுக்கான மறுப்புகளைப் பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளியிடலாம்.

* பிரச்னைக்குரிய புத்தகத்தைப் படிக்கும் அனைவரும் மறுப்புக் கட்டுரைகளையும் படிக்கவேண்டும் என்று சிலர் விரும்பினால் அவர்கள் தம் மறுப்பினைக் கையேடுகளாக அச்சிட்டு மூல நூலை வாங்கும் ஒவ்வொருவரும் இதையும் பெற்றுக்கொள்ளும் ஏற்பாட்டினைப் புத்தக விற்பனையாளர்கள் மூலம் செய்முடியும். அப்படிச் செய்வதுதான் நாகரீகமான மறுப்பு.

கறுப்புக்கொடி, கூச்சல், கூப்பாடு போன்றவை மறுப்புகளின் அடையாளங்கள்; சடங்குகள். அவையே அசலான மறுப்புகள் ஆகமாட்டா.

இன்று சேஷனை ஏதாவது ஒரு காரணத்துக்காக எதிர்ப்பது என்பது அஇஅதிமுகவை விட ஜெயலலிதாவுக்கு அதிகம் லாபகரமானது. அவருடன் சேர்ந்து தர்ம அடி கொடுப்பது மற்றவர்களுக்கு மன நிறைவு தருவது. வழக்குத் தொடுத்து, புத்தக வெளியீட்டை நிறுத்தி வைத்து மற்ற திராவிட அமைப்புகளைப் பின்னுக்குத் தள்ளியதிலும் ஜெயலலிதாவுக்கு வெற்றியே.

ஆனால், குறுகிய நோக்கினை விலக்கிவிட்டுப் பார்த்தால் எல்லோரும் அடிப்பது சேஷனை அல்ல. கருத்துச் சுதந்திரத்தை. இதே போக்கில் மறுப்புகள் ஒவ்வொரு புத்தகத்துக்கும் வெளிவருமானால் அதன் கருத்துக் கருவூல இழப்பைச் சந்திக்கப்போவது மக்களேயன்றி அரசியல் வாதிகள் அல்லர்.

எழுத்துக்கு மறுப்பு எழுத்து மூலம்தான் தரப்படவேண்டும். வேறு வழிகளில் அல்ல. அதுவும் 'ஆயுத எழுத்து' என்ற ஓர் எழுத்தைத் தம் மொழியில் வைத்துக்கொண்டுள்ள தமிழர்கள் எழுத்தை மட்டுமே ஆயுதமாக்க வேண்டும். எழுத்தை எழுத்தால்தான் சந்திக்கவேண்டும். அப்படிச் செய்வார்களா என்பது இன்றைய நிலையில் கேள்விக்குறியே. ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அமெரிக்காவின் திடீர் மன மாற்றம்

## ஆயுதத் தடையை ரத்துச் செய்து முஸ்லிம் ராணுவத்துக்கு ஆயுத பயிற்சி


**விமல் சொக்கநாதன்**



(மேலே) கரடிச்சின் ஆதரவான ( பிய போராளி ஒருவர்.
(இடது) சேர்பிய தளங்களை நோக் பொஸ்னிய முஸ்லிம்களின் ஏ ணைத் தாக்குதல், (கீழே) கரடிச்



ஐரோப்பிய பிராந்தியத்தின் கிழக்குப் பகுதியில் முன்னாள் யூகோஸ்லாவியாவில் நடந்துவரும் போராட்டம் எப்போது ஆரம்பித்தது என்பதே இப்போது பலருக்கும் மறந்துபோயிருக்கலாம். இரும்புத் தலைவர் டிட்டோவின் கம்யூனிச ஆட்சி குலைந்ததும் பொஸ்னியா என்றும், குறோசியா என்றும் சேர்பியா என்றும் சின்னாபின்னமாகச் சிதறிய இந்த நாடுகள், ஒவ்வொன்றும் ஒன்றின் குரல்வளையை மற்றையது நெரித்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டன. இந்தக் கொலைஞர்களில் மோசமானவர்களாகக் கருதப்பட்டவர்கள் பொஸ்னிய சேர்பியர்கள்.



பொஸ்னிய ஹேர்ர்சிகோவினா என்று நீட்டி அழைக்கப்பட்ட பொஸ்னியாவில் முஸ்லிம்கள் வாழக்கூடாது என்று விதித்து அவர்களைச் சிறைப்பிடித்து சித்திரவதை செய்து, பெண்களைக் கற்பழித்து நாட்டிலிருந்தே விரட்டி அகதி முகாம்களுக்கு தள்ளிய 'வீரர்கள்' இந்த பொஸ்னிய சேர்பியர்கள். தமது வீர சாகசங்களுக்கு இவர்கள் சூட்டிய பெயர் Ethnic Cleansing - இனச் சுத்திகரிப்பு.

1992 ஆரம்பப் பகுதியிலிருந்து கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகளாக இந்த பொஸ்னிய சேர்பியர்களின் அடாவடித்தனம் நிகழ்ந்தது. உலக பத்திரிகையாளர்கள் துயரக் கருத்துக்களை எழுதித் தள்ளினார்கள். உலக தொலைக்காட்சி, வானொலிகள் பொஸ்னிய முஸ்லிம் குழந்தைகளின் அவலங்களை - பெண்களின் கண்ணீரை - இளைஞர்களின் சடலங்களை படங்களில் சித்தரித்தன. ஐ.நா. போன்ற உலக அரங்குகள், ஐரோப்பிய சமூகம் போன்ற பிராந்திய அரங்குகள் கூடிக் கூடி விவாதித்தன. சமாதானத் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். சமரசப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், முடிவு பூஜ்யம்தான்.

தூங்குபவனை எழுப்பலாம். ஆனால் தூங்குவது போல நடிப்பவனை, பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியாது. அதே போல, சமாதான நோக்கத்துடன் சமரசம் செய்ய வருபவனை நம்பலாம். ஆனால், சமாதானம் என்ற பெயரில் பாசாங்கு செய்து வருபவனை நம்பமுடியாது. பொஸ்னிய சேர்பியர்களும் இப்படியான பாசாங்குக் காரர்களாக இருந்தார்கள். எந்த சமரச முயற்சியையும் அவர்கள் ஏற்க விரும்பவில்லை. எந்த சமாதான உடன்படிக்கையையும் அவர்கள் கைச்சாத்திட்டு உடன்பட்டு நடக்கவில்லை. இதன் விளைவு; இன்றுவரை சுமார் 2 லட்சம் மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அல்லது காணாமற் போயிருக்கிறார்கள். பொஸ்னியாவில் இன்று ஐ. நா. சபையின் 23 ஆயிரம் சமாதானக் காவல் துருப்புக்கள் காவலில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பொஸ்னிய சேர்பியர்களின் சண்டித்தனத்துக்குத் தலைவர், கரடிச் என்ற மூர்க்க குணம் கொண்ட மனிதன். இவருக்கும் இவரது படைகளுக்கும் ஆதரவாக அயல் நாடான சேர்பியாவின் தலைவர் மிலோ செவிச் ஆயுதங்களை வழங்கிவந்தார்.

இப்படியாக வந்து குவிந்த ஆயுதங்களுடன், பொஸ்னிய சேர்பியர்கள் முஸ்லிம்களைத் துவம்சம் செய்துவர, உலக நாடுகள் கண்டும் காணாமல் இருந்தன. இது போதாது என்று, தாக்கப்பட்டு வந்த முஸ்லிம்களுக்கு எந்த உலக நாடும் ஆயுதங்களை வழங்கி உதவக்கூடாது, அனுப்பக்கூடாது என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை தடை வேறு விதித்திருந்தது.

பொஸ்னிய முஸ்லிம்களை பொஸ்னிய சேர்பியர்கள் தாக்கும்போது சமரசம் செய்வதே முறை. ஆயுதங்கள் இல்லாமல் தவிக்கும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டால் இரத்தக்களரி ஏற்படும், உயிர்ப்பலி அதிகரிக்கும், சண்டை மேலும் பலகாலம் நீடிக்கும்... என்பது பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளின் வாதம். இந்தக் கொள்கையை அமெரிக்கா ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக தன் ஐரோப்பிய சகாக்களுடன் சேர்ந்து பாடி ஒத்துழைத்தது. இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்கக் கொள்கையில் திடீர்த் திருப்பம் (பிரிட்டனின் முன்னாள் தலைவி மாக்கிரட் தச்சரின் மொழியில் சொன்னால், ('U-Turn') அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு என்ன காரணம் என்று தெரியாமல் அமெரிக்க நண்பர்களான டச்சு, பெல்ஜியன், பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்கள் திகைத்து நின்றன.

அமெரிக்க அரசின் கொள்கை இப்போது மாறியதுபோல, பொஸ்னிய சேர்பியர்களின் இரண்டரை ஆண்டு கால அதிருஷ்டமும் மாற ஆரம்பித்தது கவனிக்கத்தக்கது. பொஸ்னிய சேர்பியர்களிடம் கனரக ஆயுதபலம் இருந்தது. எங்கள் பீரங்கிகளுக்கு முன்னால் இந்த முஸ்லிம்களின் சிறுபிள்ளை விளையாட்டுக்கள் எம் மாத்திரம்... என்று ஆணவத்துடன் கொக்கரித்தார்கள் பொஸ்னிய சேர்பியர்கள். அவர்களின் பொறிபறக்கும் பீரங்கிகளின் முன்னால் முஸ்லிம்கள் பொசுங்கிப் போனார்கள். இது இரண்டரை ஆண்டுகளாக நடந்த கதை.

இப்போது, பொஸ்னிய முஸ்லிம்கள் எதிரிகளை நேரடியாக எதிர் கொள்ளாமல், ஐம்பது வருடங்களுக்குமுன் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்டுகள் கடைப்பிடித்த கெரில்லாத் தாக்குதல் முறையை அதாவது, மறைந்து பதுங்கியிருந்து பாய்ச்சல் நடாத்தும் முறையை கடைப்பிடித்தார்கள்; அமோக வெற்றிகண்டார்கள். பொஸ்னியாவின் முஸ்லிம் படைப்பிரிவுகள் சின்னஞ்சிறு குழுக்களாக (சுமார் 100 பேர் மட்டுமே கொண்ட பிரிவுகளாகப் பிரிந்து) 16 இடங்களில் பொஸ்னிய சேர்பியர்கள் மீது தாக்குதல் நடாத்தி வெற்றி கண்டார்கள்.

முதல் தடவையாக எதிரியிடமிருந்து ஊர்களை மீட்டார்கள். அப்படி மீட்கப்பட்ட ஊர்களில் ஒன்று குப்பிரெஸ். 'முஸ்லிம்களாவது; எங்களை வெல்வதாவது' என்று உதாசீனமாக நடந்து வந்த பொஸ்னிய சேர்பிய தலைமைப் பீடம், அதிர்ந்துபோயிருக்கிறது. பொஸ்னிய முஸ்லிம்களிடம் உள்ளதைவிட 10 மடங்கு பெரிய படைபலம் பொஸ்னிய சேர்பியர்களிடம் இருக்கிறது. 'இருக்கிறது' என்பதைவிட, இருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

உலக நாடுகள் உருவாக்கிய சமாதான உடன்படிக்கையை பொஸ்னிய சேர்பியர்கள் அங்கீகரிக்க மறுத்ததால் அவர்களுக்கு இதுவரை உதவி வழங்கிவந்த சேர்பிய அரசும் உதவியை துண்டித்திருக்கிறது. பொஸ்னிய சேர்பியர்களுக்கு உயிர்நாடியான எரிபொருள், மற்றும் ஆயுதங்களை அனுப்பிவந்த சேர்பிய அரசு, எல்லை களை மூடி, பொஸ்னிய சேர்பியர்களை துண்டித்திருப்பதால் கடந்த மூன்று மாதங்களாக எரிபொருள், உத விப்பொருள்கள் இல்லாமல் அவதியுறும் பொஸ்னிய சேர்பியர்களுக்கு இப்போதைய திடீர்த்தாக்குதல் திடீர் தோல்வி பலத்த ஏமாற்றமாக இருக்கும்.

'எங்கள் எதிரிகள் போர் வேண்டும் என்று கேட்கிறார்கள்; சரி, நாங்கள் அவர்களுக்கு போரைக் கொடுப்போம்' என்று, வீழ்ந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் அறைகூவல் விடுத்திருக்கிறார் பொஸ்னிய சேர்பிய தளபதி கரடிச்.

இவற்றுக்கெல்லாம் தலைப்பாகை வைப்பதுபோல், திடீரென வெளியாகியது அமெரிக்க அரசாங்கத்தின் அறிக்கை.

'நவம்பர் மாதம் 12ஆம் தேதி நள்ளிரவு தொடக்கம் அமெரிக்க ராணுவம் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எதிரான ஆயுதத் தடையை நடைமுறைப்படுத்த மாட்டாது' என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபை அறிவித்த ஆயுத ஏற்றுமதித் தடையை கடந்த இரண்டரை வருடங்களாக அமெரிக்க, மற்றும் பிரிட்டிஷ் கப்பல்கள் நடைமுறைப்படுத்தி வந்தன. பொஸ்னியாவுக்கோ அல்லது குறோசியாவுக்கோ ஆயுதங்களைக் கொண்டுசெல்வதாக சந்தேகிக்கப்படும் எந்தக் கப்பலையும் நடுக்கடலில் நிறுத்தி சோதனை செய்து திருப்பி அனுப்பிவந்தன அமெரிக்க-பிரிட்டிஷ் கப்பல்கள். கடந்த ஒன்றரை வருட காலத்தில் 42 ஆயிரம் கப்பல்கள் அட்ரியாற்றிக் கடலில் வழிமறிக்கப்பட்டு பிரிட்டிஷ், அமெரிக்க துருப்புகளால் சோதனை செய்யப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிசோதனைகளிலிருந்து அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இனி விலகுவதோடு, தமது ஒற்றாடல் வேவுத் தகவல்களை அதாவது, வரும் கப்பல்கள் பற்றிய இரகசிய தகவல்களை ஐரோப்பிய சகாக்களுடன் இனிமேல் பகிர்ந்துகொள்வதில்லை என்றும் அமெரிக்க அரசு அறிவித்திருக்கிறது.

● முதல் தடவையாக முஸ்லிம்கள் எதிரியிடமிருந்து ஊர்களை மீட்டார்கள். 'முஸ்லிம்களாவது; எங்களை வெல்வதாவது' என்று உதாசீனமாக நடந்து வந்த பொஸ்னிய சேர்பிய தலைமைப் பீடம். அதிர்ந்துபோயிருக்கிறது. பொஸ்னிய முஸ்லிம்களிடம் உள்ளதைவிட 10 மடங்கு பெரிய படைபலம் பொஸ்னிய சேர்பியர்களிடம் இருக்கிறது. 'இருக்கிறது' என்பதைவிட, இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

● "எங்கள் எதிரிகள் போர் வேண்டும் என்று கேட்கிறார்கள்; சரி. நாங்கள் அவர்களுக்கு போரைக் கொடுப்போம்" என்று. வீழ்ந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் அறைகூவல் விடுத்திருக்கிறார் பொஸ்னிய சேர்பிய தளபதி கரடிச்.

● பொஸ்னியாவுக்கோ அல்லது குறோசியாவுக்கோ ஆயுதங்களைக் கொண்டுசெல்வதாக சந்தேகிக்கப்படும் எந்தக் கப்பலையும் நடுக் கடலில் நிறுத்தி சோதனை செய்து திருப்பி அனுப்பிவந்தன அமெரிக்க–பிரிட்டிஷ் கப்பல்கள். கடந்த ஒன்றரை வருட காலத்தில் 42 ஆயிரம் கப்பல்கள் அட்ரியாற்றிக் கடலில் வழிமறிக்கப்பட்டு பிரிட்டிஷ். அமெரிக்க துருப்புகளால் சோதனை செய்யப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'நேட்டோ' எனப்படும் வட அத்தலாந்திக் ஒப்பந்த நிறுவன நாடுகளில் ஒன்றான அமெரிக்கா, அதன் சக அங்கத்துவ நாடுகளுடன் கலந்துரையாடாமல் ஒருதலைப்பட்சமாக இப்படி அறிக்கை விடுத்திருப்பது, அதுவும், நேர் எதிரான கருத்துள்ள அறிக்கை விடுத்திருப்பது குறித்து 'நேட்டோ' நண்பர்கள் - ஐரோப்பிய அரசாங்கங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன.

1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐ. நா. மன்றம் நிறைவேற்றிய பிரேரணையை அமெரிக்காவின் இந்த அறிவித்தல் ஒரு கேலிக்கூத்தாக மாற்றிவிட்டதாக ஐரோப்பிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவில் நடைபெற்ற நடுத்தவணைத் தேர்தல்களில் அதிபர் கிளின்டனின் ஜனநாயகக் கட்சி தோல்விகண்டு, காங்கிரஸ் சபையில் அதிபரின் அதிகாரம் ஒடுக்கப்பட்டிருப்பதால், அதிபர் காங்கிரஸ் சபையைத் திருத்திப்படுத்த இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக சில அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அடிக்குமேல் அடி, பேரடியாக, தனது ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா மற்றொரு பேரதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. ஐரோப்பிய அரசுகளின் கருத்துகளுக்கு மாறாக அமெரிக்க அரசு பொஸ்னிய முஸ்லிம் ராணுவத்துக்கு ஆயுதப் பயிற்சி வழங்கவிருப்பதாக அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் உறுதிப்படுத்தியிருக்கிறது.

அமெரிக்கா தனது நடுநிலைக் கொள்கைளை உதறித் தள்ளியதால், பொஸ்னிய வட்டாரத்தில் போர் அபாயம் அதிகரிக்கும் ஆபத்து உருவாகியிருப்பதாக பலர் அச்சம் தெரிவிக்கிறார்கள். அமெரிக்காவின் இந்த அறிவித்தல் களை போரில் ஈடுபட்டுள்ள பொஸ்னிய சேர்பியர்களும் பொஸ்னிய முஸ்லிம் களும் எப்படி ஏற்கிறார்கள் என்பதில் தான் இந்தப் போரின் எதிர்காலமே தங்கியிருக்கிறது.

அமெரிக்காவின் இந்த அறிவித்தல் தமக்கு ஓர் ஆசீர்வாதம் என்றும், பச்சைக் கொடி என்றும் பொஸ்னிய முஸ்லிம்கள் கருதி, தமது சண்டைகளை துரிதப்படுத்தக் கூடும். பலம் பொருந்திய நிலையில் இருந்துதான் எதிரியுடன் சமரசம் செய்ய வேண்டும் என்பத யுத்த நுணுக்கங்களுள் ஒன்று. அதன்படி, தமது புதிய பலத்தின் உதவியுடன் பொஸ்னிய அரசு, பொஸ்னிய சேர்பியர்களுடன் சமரசம் செய்ய முற்பட்டால் அது நல்லது. அப்படியல்லாமல், அமெரிக்க கிளின்டன் அரசின் ஆதரவை தமக்கு பக்க பலமாகக் கருதி, பிரமிப்பில் - புளகாங்கிதத்தில் பொஸ்னிய சேர்பியர்களுடன் தாக்குதல்களை நீடித்தால் சமாதான தீபம் அணைந்து விடலாம். உயிர்ப்பலிகளும் இரத்தக் களரியுமே அதிகரிக்கலாம். ❑

# உள்நாட்டு யுத்த அபாயத்தில் அரபாத்தின் சமாதான உடன்படிக்கை

## ஹமாஸ் இயக்கம் தீவிரமடைகிறது

**ஜெமினி செய்தி சேவை**

மத்திய கிழக்கு முழுவதையுமே நிலைகுலையச் செய்துவிடும் உள்நாட்டு யுத்தமொன்றின் விளிம்பில் காஸா நின்று கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளைக் கடந்துவிட்ட சமாதான நடவடிக்கைகளும், கடந்த ஆண்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் (பி.எல். ஓ) இஸ்ரேலுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகளும், பாலஸ் தீனர்களுக்கு சுய ஆட்சி, பொருளாதார விருத்தி என்பவற்றைவிட, அரசியல் ஸ்திரமின்மையையும், அதிகரிக்கும் வறுமையையும் தான் ஏற்படுத்தியிருக்கின்றன.

'பாலஸ்தீன பரீட்சார்த்தம் எந்த நேரத்திலும் நிர்மூலமாகலாம்; அந்தஎல்லையின் விளிம்பில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்' என்று, சுய ஆட்சிக்கான ஒஸ்லோ ஒப்பந்தத்தின் சிற்பிகளில் ஒருவரான நோர்வீஜிய ராஜதந்தரி றொட் லார்சன் கூறுகிறார்.

பி. எல். ஓ. தலைவர் யசர் அரபாத், அவரது உதவியாளர்கள், இஸ்ரேலியர்கள், வெளிநாட்டு நிபுணர்கள் ஆகியோர், இந்த குலைவுக்குக் காரணம் சர்வதேச நிதியுதவியாளர் களே என்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டமொன்றில் ஒதுக்கப்பட்ட 2.4 பில்லியன் டொலரில், 1994 ஆம் ஆண்டுக்கான 674 மில்லியன் டொலரை பாலஸ்தீன தேசிய அதிகார சபைக்கு வழங்கவில்லை. ஆக, 140 மில்லியன் டொலரையே இது பெற்றுள்ளதாக லார்சன் கூறுகிறார்.

காஸாவின் 60 வீதமான வேலையற்றோருக்கு வேலை வழங்கும் பொது வேலைத் திட்டங்களில் மூலதனமிடுவதற்குப் பதிலாக, பெரும்பாலான பணம் பொலிஸ், வைத்தியசாலைகள், பாடசாலைகள் ஆகியவற்றின் நடைமுறைச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கைத் தரம் 50 வீதம் குறைந்து விட்டது.

நவம்பரில் அரபாத்தின் பொலிசாருக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் நிலைமையைப் பெரிதுபடுத்தி, உதவி வழங்கும் நாடுகள் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தின. ஆனால், மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளை, காஸாமீது பணத்தை வாரி இறைப்பதன்மூலம் மாத்திரம் பாதுகாத்து விட முடியாது. நூற்றுக் கணக்கான மில்லியன் டொலர்கள்கூட அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை, அவர்கள் அரபாத்மீதும் அவரது சமாதான உடன் படிக்கைகள்மீதும் விசுவாசம் கொள்ளுமளவுக்கு உயர்த்திவிடமாட்டா. இஸ்ரேலால் தாமதப்படுத்தப்படும் ஒஸ்லோ உடன்படிக்கைகளின் விரைவான நடைமுறைப் படுத்தல் மட்டுமே சுய ஆட்சி நடை முறைகளைக் காப்பாற்ற வல்லது.ஆனால், இஸ்ரேல் அதனை வேண்டுமென்றே கடத்தி வருகிறது. விளைவாக, அரபாத்தின் தேசிய அதிகாரத்துக்கும், ஹமாஸ் தலைமையிலான இஸ்லாமிய எதிரிகளுக்குமிடையே தினசரி மோதல்கள் ஏற்படுகின்றன. உண்மையிலே, அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவியை பி. எல். ஓ. இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் போராடுவதற்கு தன்னை இராணுவ ரீதியாக பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தினால் வெளி

- காஸா பகுதியின் 40 வித நிலப்பரப்பை இஸ்ரேல் இன்னமும் தன்னகத்து வைத்திருக்கிறது. இஸ்ரேல் துருப்புகளும், குடியேற்றங்களும் கேந்திர முக்கியமான இடங்களில் நிறுத்தப்பட்டிருப்பதால் காஸா நகரிலிருந்து ஏனைய முக்கிய நகரங்களுக்கு அவர்களுடன் சச்சரவேதுமின்றி பாலஸ் தீனர்கள் பிரயாணஞ் செய்ய முடியாதிருக் கிறது.
- ஹமாஸும் மற்றும் சிறிய. மிகத் தீவிரமான இஸ்லாமிய ஜிஹாட்டும் பாலஸ் தீன போராட்டத்தை அரபாத்திடமி ருந்து தாம் பொறுப்பேற்றுள்ளன.
- இஸ்ரேலின் துரித நடவடிக்கை ஒன்றுதான் அரபாத்தை தப்பவைப் பதோடு, காஸாவின் சமாதானத்தையும் பாதுகாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டு உதவி முழு அளவிலான சிவில் யுத்தத்துக்குத்தான் வழி வகுக்கும்.

இது நடந்தால் அல்லது நடக்கும் போது, அக்டோபரில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர் சுமுக நிலை அடைந்துவரும் ஜோர்டான் - இஸ்ரேல் உறவும் அதன் வெளிப்பாடாக டிசம்பரில் இரு நாடுகளும் பரஸ்பரம் தூதரகங்களைத் திறக்க விருப்பதும் பாதிப்புறலாம். பாலஸ்தீன உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டால் அது ஜோர்டான் நதியைக் கடந்து இப்பாலும் பரவும் என்று ஜோர்டான் அஞ்சுகிறது.

ஆக, அந்தவிதத்தில் வெள்ளை மாளிகைப் பசும்புல் தரையில் **1993** செப்டம்பரில் கைச்சாத்தான ஒஸ் லோ உடன்படிக்கை, சமாதானத்துக்குப் பதிலாக யுத்தத்தையே தோற் றுவிப்பதாக அமையும். ஒப்பந்தம் கைச்சாத்தான தினம் காஸா வீதிகள் அனைத்தும் லட்சக் கணக்கான மக்கள் அரபாத்தின் கொடி, புகைப் படங்களுடன் ஆடிப் பாடி, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் துன்புறுத்தலும் நீங்கி, சுய ஆட்சியும் சுபீட்சமும் மலர்வதாக மகிழ்ந்து கொண்டாடினார்கள். அப்போது, தூரத்தே ஒரமாக, இஸ்ரேலுடனான அரபாத்தின் சமரசத்தை எதிர்த்த இஸ்லாமியர்கள் தருணம் பார்த்து காத்திருந்தார்கள்.


இப்பொழுது, அவர்கள் ஒதுங்கியிருக்க வில்லை. ஆயிரக் கணக்கில் வீதிகளில் அவர்கள் அரபாத்தின் நடவடிக்கைகளையும், அவரது ஆட்சியையும் இஸ்லாமிய எதிராளிகளைத் தடுத்துவைக்கும் அவரின் நடவடிக்கையையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இஸ்ரேலியர்களும், அரபாத்தும், உதவி வழங்குவோரும் பாலஸ்தீனர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுபடுத்தத் தவறியதால், எதிர்பார்த்திருந்த தருணம் இஸலாமியர்களுக்கு இப்போது வந்துவிட்டது.

ஆக்கிரமிப்பு ஒரு முடிவுக்கு வரவில்லை. காஸா பகுதியின் **40** வீத நிலப்பரப்பை இஸ்ரேல் இன்னமும் தன்னகத்து வைத்திருக்கிறது. இஸ்ரேல் துருப்புகளும், குடியேற்றங்களும் கேந்திர முக்கியமான இடங்களில் நிறுத்தப்பட்டிருப்பதால் காஸா நகரிலிருந்து கான் யுனிஸ், ராபா போன்ற ஏனைய முக்கிய நகரங்களுக்கு அவர்களுடன் சச்சரவேதுமின்றி பாலஸ்தீனர்கள் பிரயாணஞ்செய்ய முடியாதிருக்கிறது.

இஸ்ரேலின் இராணுவ நிர்வாகத்திலிருந்து கையேற்கக்கூடிய வலுவுள்ள அரசொன்றை அரபாத் இன்னமும் நிறுவவில்லை. பதிலாக, ஒரு பாலஸ்தீன தேசிய அதிகார சபையையே அவர் நியமித்திருக்கிறார். அதில் அங்கம் வகிப்பவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்த அவரது நெருங்கிய சகாக்களே. அவர்களை 'வெளியார்' என்று உள்ளூர் காஸா வாசிகள் குறிப்பிடுகிறார்கள். அத்துடன், 27 ஆண்டுகால ஆக்கிரமிப்பில் சீர்குலைந்துபோன பொருளாதார அமைப்பை மீள நிர்மாணிப்பதற்கான நிதியை திரட்டவல்ல நிறுவனங்களை அமைக்கவும் அவர் தவறிவிட்டார். நிதி வழங்கும் நாடுகள் முழுமையாக அவற்றை வழங்கவில்லை. ஆக. நெருக்கடியான ஒராண்டு கடந்துவிட்ட போது ஹமாஸ், அரபாத்துக்கும் அவரின் உடன்படிக்கைக்கும் எதிரான தலைமையில் தன்னை ஸ்திரப்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் துருப்புகள் மீதும், பொது மக்கள் மீதும் தாக்குதல்களை நிகழ்த்துவதன் மூலம் ஹமாஸும் மற்றும் சிறிய, மிகத் தீவிரமான இஸ்லாமிய ஜிஹாட்டும் பாலஸ்தீன போராட்டத்தை அரபாத்திடமிருந்து தாம் பொறுப்பேற்றுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சிக்கு கைம்மாறாக அரபாத் இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டார்.

## காஸா




அரபாத் தாமே காஸாவின் தனித்த ஆட்சியாளராகவுள்ள போது, ஹமாஸ் தன்னை ஜனநாயகத்தினதும் பரவலாக்கலினதும் காவலனாக காண்பிக்கிறது. கடந்த ஆண்டில் ஹமாஸின் செல்வாக்கு **11 -15** வீதத்திலிருந்து 25 - 30 வீதமாக இரட்டிப்பு அடைந்திருப்பதாக பாலஸ்தீன வட்டாரமொன்று ஜெமினி செய்தி சேவைக்கு மதிப்பிட்டிருக்கிறது. இதேவேளை, **50** வீதத்துக்கு மேலாகவிருந்த அரபாத்தின் செல்வாக்கு **30 - 35** வீதமாக குறைந்துள்ளது.

ஆக, இஸ்ரேலின் துரித நடவடிக்கை ஒன்றுதான் அரபாத்தை தப் பவைப்பதோடு, காஸாவின் சமாதானத்தையும் பாதுகாக்கும். ஆனால், இஸ்ரேல் பிரதமர் யிற்சாக் றாபின் பாலஸ்தீன அதிகாரத்தின் அனைத்துக் கோரிக்கைகளையுமே ஏற்றுக்கொண்டுவிட முடியாது என்கிறார். அவர் ஏற்றுக்கொள்ள மறுப்பவை:

* ஹமாஸில் மத சீர்திருத்த தலைவர் ஷேக் அகமட் யசீன் உள்பட, மீதமான ஐயாயிரம் பாலஸ்தீன சிறைக் கைதிகளுக்கும் விடுதலை மறுப்பு.
* காஸாவின் நெற்சரிம் நகரிலும், மேற்குக் கரையில் ஹமாஸின் செல்வாக்கு மிக்க ஹெப்ரோன் நகரிலுமுள்ள இஸ்ரேல் குடியிருப்புகளை அகற்ற மறுப்பு.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் சுய ஆட்சி சபைக்கான தேர்தலை வருட முடிவுக்கள் நடாத்த மறுப்பு.

இவற்றில் ஏதாவது ஒன்றுக் கான 'ஆம்' சுய ஆட்சியில் பாலஸ்தீனர் களை நம்பிக்கை கொள்ளவைக்கும். அல்லாவிடின், ஹமாஸின் செல்வாக்கு அதிகரித்தே செல்லும்.

அரபாத்தின் பொலிசார் இஸ்லாமியரின் எதிர்ப்பு நடவடிக்கைகளை நசுக்குவதாக றாபின் கூறுகிறார். தாக்குதலிலிருந்து இஸ்ரேலியர் பாதுகாக்கப்பட்டாலொழிய தாம் சுய ஆட்சி முறைக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதில்லை என்று அவர் கூறுகிறார்.

அண்மையில் இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டமை, ஏற்கனவே 'இஸ்ரேலின் பொலிஸ்காரர்' என்ற பெயரையும் கூடவே அரபாத்துக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறது. ❐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனந்தம் பரமானந்தம்

லண்டன் லோகன் மண்டபத்தில் நடைபெற்ற செல்விகள் தனுஜா, சுஷா சிறீஸ்கந்தராஜா சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் 'நன்றாக இருந்தது' என்று பொதுவாக சொல்லிவிடுவதற்கு அப்பால், சில மனதை ஈர்க்க வைத்த அம்சங்களையும் சிறப்பாகக் கொண்டிருந்தது.

நிகழ்ச்சி முழுமையும் செறிந்திருந்த காத்திரமான - நுணுக்கமானலய விவகாரங்கள்;

புதிதான உருப்படிகள்;

மிடுக்கான நட்டுவாங்கம்;

திட்டமான அடவுகளுடன் கூடிய, பாவச் சிறப்பான ஆடல் - இவற்றை அந்த அம்சங்களாகச் சொல்லலாம்.

அலாரிப்பிலேயே இது வெளிப்பட ஆரம்பித்தது. மிஸ்ரத்தில், இடையே சிக்கலான நடைகளையெல்லாம் மிருதங் கத்தில் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி விவகாரம் செய்து கல்பனையாக வாசிக்க, நட்டுவாங்கம் செய்த லக்ஷ்மியின் தாளமும், ஜதியும் காலப்பிரமாணத்தோடு இருந்தன. இது வர்ணத்தில் இன்னமும் சிறப்பாக தெரிந்தது.

தனுஜா, சுஷா இருவருமே இந்த லய அம்சங்களுக்கு அமைவாக, வெகு கச்சிதமாக ஆடினார்கள்.

அடவுகள் - குறிப்பாக, அரைமண்டி எல்லாமே சுத்தமாக இருந்தன. நேர்த்தியான கை அசைவுகள்.

நமக்குப் பரிச்சயமில்லாத, 'கோகுல பாலா...' என்று, கல்யாணியில் பம்பாய் ராஜி நாராயண் அமைத்த ஒரு வர்ணம். மகாபாரதத்து காட்சிகள் சிலவற்றைச் சித்தரித்து அமைந்திருந்தது. இந்த வர்ணத்துக்கு சகோதரிகள் இருவரும் பொருத்தமாக, மாறிமாறி சஞ்சாரி பாவங்களோடு ஆடினார்கள்.

குற்றாலம் நாகராஜனின் பாடலின், பாவ வெளிப்பாடும் வெளிப்படும் விதத்தில் அமைந்த பதங்கள்.

இவற்றிடையே, இடைவேளையையடுத்து கீரவாணியில், சிவனும் சக்தியும் ஆடுவதாயமைந்த ஓர் உருப்படி 'ஆனந்தமே பரமானந்தமே..'; அது ஆனந்தம், பரமானந்தமாகவே இருந்தது! இதுவும் ராஜி நாராயணனே இயற்றியது. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி சிக்கலான ஜதிக் கோவைகளுடன், அற்புதமாக இசையமைத்திருந் தார்.

இருவர் சேர்ந்தாடுவதற்கு ஏற்றாற்போல் ஓர் உருப்படியை அமைத்துத்தர, கடந்த ஆண்டில் விபத்தில் காலமான நாட்டியக் கலைஞர் வெங்கடா சலபதி கேட்டதற்காக இதனை அமைத்த தாக காரைக்குடி தெரிவித்து, வெங்கடாசலபதிக்கே இதனை சமர்ப்பணமாக அளிப்பதாகவும் கூறியபோது, அது இன்னமும் ஈடு பாட்டை ஏற்படுத்தியது. அன்றைக்கு வெங்கடாசலபதி காலமான ஓராண்டு நிறைவு நாளுங்கூட.

தில்லானாவும் ஆபோகியில் புதிது தான். முருகன்மீது சாவேரி, காபி விருத்தத்தைத் தொடர்ந்து அமைந்திருந்தது.

கோதண்டபாணி வயலின். அத்தோடு, புதிதாக ஒரு வேணுகானம் கேட்டது. இலங்கை வானொலி ரி. வி. பிச்சையப்பாவின் புதல்வர் என்று சொன்னார்கள். பெயர் ஞானவரதன்; ஞானம் மிக்கவர்.

ஆக, லண்டனில் பிறந்து, லண்டனில் நடனம் பயின்ற லக்ஷ்மி கணேசன், நல்ல நர்த்தகி என்பது தெரியும். இப்போது, 'ஆசியா' என்ற நடனப் பள்ளியை நடாத்தும் இவருடைய கற்பித்தல் ஆற்றலையும், தனுஜாவும், சுஷாவும் இந்த அரங்கேற்றத்தில் துல்லியமாகவே காண்பித்திருக்கிறார்கள். அவருடைய நட்டுவாங்கம் அன்று மிகவும் ஈர்த்த ஒன்று.

# சுக பைரவி

பதினொரு வயதுச் சிறுமியொருத்தியின் அந்த லாவகமான - அநாயாசமான வயலின், வெகு ரம்மியமானதாக, சற்று பிரமிப்பூட்டுவதாகவுந் தான் இருந்தது.

நல்ல சுத்தமான விரலசைவுகள்; வில் அசைவுகள்.

அத்தோடு, சுத்தமான லயம்.

இவற்றோடிணைந்த அந்த அநாயாசம் கச்சேரி முழுமையுமே இழையோடியது.

சங்கீத வித்வான் திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவியான செல்வி பைரவி கணேஸ்வரனின் வயலின் அரங்கேற்றம் லண்டன் புறநகர் றைஸ்லிப்பிலுள்ள வின்ஸ்ரன் சர்ச்சில் மண்டபத்தில், 'தமிழ் ரைம்ஸ்' நிர்வாக இயக்குநர் திரு என். எஸ். கந்தையா தலைமையில் நடைபெற்றது.

பொதுவாக, லண்டன் இசைக் கச்சேரிகளில் 'இடைவேளை' இல்லாத கச்சேரிகள் வெகு அபூர்வம். அப்படியிருக்க, இந்தச் சிறுமி தன்னுடைய அரங்கேற்றத்தில் அந்த இடைவேளையின்றியே, ஒரு முழுக் கச்சேரியை இப்படியொரு ரம்மியமாக அளித்தது இன்னமும் சிறப்பானது.

வயலின் அத்துணை இலகுவான வாத்தியம் அல்ல. ஆனால், கலைவாணி குறிப்பிட்டபடி பைரவியின் 'அசுர' சாதனை அங்கு வெளிப்பட்டது.

கல்யாணி வர்ணத்துடன் அவர் கச்சேரியை ஆரம்பித்தபோது காணப்பட்ட இயல்பான அந்த பதட்டத்தை எளிதாகவே



ஆளுமைப்படுத்தி, பின்னர் மிகும் எடுப்பாகவே வாசித்தார். தியாகராஜரின் 'அநுபவ குணாம்புதி...'யில் அடாணா, 'பக்கல நிலபடி...'யில் கரஹரப்பிரியா, பின்னர் பல்லவியில் சுத்த தன்யாசி ராக ஆலாபனைகள், ஸ்வரப் பிரஸ்தாரங்கள் மிக நேர்த்தியாக இருந்தன. கரஹரப்பிரியா வெகு விஸ்தாரமாக இருந்தது.

மத்தியமாவதியில் ஊத்துக்காடு வேங்கடசுப்பையரின் 'ஆடாது அசங்காது வா கண்ணா...', மற்றும் அவர் வாசித்த அன்னமாச்சாரியார் கிருதி அவையை வெகுவாக ஈர்த்தன. கண்டஜாதி ஏக தாளத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பஞ்சநடைப் பல்லவி. விஸ்தாரமாக இல்லாவிட்டாலும் கச்சிதமாக இருந்தது.

சிக்கலான கார்வைகளைக் கொண்ட லால்குடி ஜெயராமனின் பெஹாக் ராக தில்லானா பைரவியின் லய ஞானத்தை தெள்ளிதாக உணர்த்தியது. அது கச்சேரிக்கு முத்தாய்ப்பாகவும் அமைந்தது.

பக்கவாத்தியங்களாக முத்து சிவராசா மிருதங்கமும், பாஸ்கரன் சிறிகரம் கடமும், கந்தையா சிதம்பரநாதன் மோர்சிங்கும் வாசித்தார்கள்.

ஆக, கலைவாணி அருமைவாய்ந்த ஆசிரியை என்பதை இந்த அரங்கேற்றத்தில் மேலும் உணர்த்தியிருக்கிறார்.

ஒன்று; இத்தகைய ஆற்றல்மிக்க - ஈடுபாடு மிக்க - ஓரளவுக்கு இத்துறைகளிலே தொடரவல்ல பிள்ளைகளுடைய அரங்கேற்றங்கள் கூடுமானவரையிலும் சம்பிரதாயத்தை உணர்த்தி அமைவது தான் நல்லது. தனியாவர்த் தனத்தின்போது பைரவியும் இடையிலே சேர்ந்துகொண்டதும், ராகம்-தானம்-பல்லவியில் தானத்தின் போது மிருதங்கம் வாசித்ததும் மரபிலே புதியனவாகப் பட்டன. புதியன என்பதற்காக அல்ல ஆனால், இவை அவ்வளவாக ஒட்டியிருக்கவில்லை.

ஆக பைரவி, தொடர்ந்த ஈடுபாட்டில் பயிற்சியில் நல்லதொரு வயலின் கலைஞராக திகழவல்லவர் என்பதைச் சொல்லலாம்.

## பேர்ளின் தந்த வியப்பு

ஜேர்மனியில் அந்த அரங்கேற்றத்தைப் பார்த்தது சற்று வியப்பாகத்தானிருந்தது.

மனோரம்மியமான சூழலிலே அமைந்த - மிக அமைவான மண்டபம். மண்டபத்தின் அமைவான ஒலி, ஒளி அமைப்பு. நர்த்தகிக்கு - கலைஞர்களுக்கு உற்சாக மூட்டவல்ல அமைதியான- வரவேற்பான பார்வையாளர்கள்.

அவர்களை அரவணைத்துச் செல்லும் அநுசரணையான நிகழ்ச்சி அறிவிப்பு. சலிப்பை ஏற்படுத்தாத நிகழ்ச்சி யோட்டம். இப்படி, இவற்றோடிணைந்து, ஓர் அரங்கேற்ற நர்த்தகியிடம் எதிர்பார்க்கும் அனைத்து அம்சங்களிலும் கணிசமான நிறைவைத் தந்த ஆடல்.

எடுப்பூட்டும் நட்டுவாங்கம். பாடல், பக்கவாத்தியங்கள்.

செல்வி பிரசாந்தி சேகருடைய பரத நாட்டிய அரங்கேற்றம் அது.

பிற்றிகா சட்டர்ஜி என்ற இந்தோ ஜேர்மானியரை குருவாகக் கொண்டவர் இவர். பிற்றிகா, கலாக்ஷேத்ராவின் லீலா சாம்சனுடைய மாணவி.

பேர்ளின் நகரின் காங்கிரஸ் மண்டபத்தில் இந்த அரங்கேற்றம் நடைபெற்றது.

தீர்க்கமான அடவுகள்.

சீரான கை அசைவுகள்; முத்திரைகள்.

உணர்ந்து, மெல்லிதாக வெளிப்படும் பாவம். அநேகமாக, கலாக்ஷேத்ராவின் முத்திரையாகவே திகழ்கின்ற 'ரூபமுஜூச்சி....' தோடி ராக வர்ணத்திலும், அதனையடுத்த திருப்பாவை பதத்திலும் பிரசாந்தியிடம் இந்த அம்சங்கள் நன்கு வெளிப்பட்டன.

வர்ணத்தில் சஞ்சாரி பாவங்கள் குறைவாகவே இருந்தாலும் அமைவாக இருந்தன. கச்சிதமான அடவுகள்.

பிற்றிகாவினுடைய நட்டுவாங்கம்



நன்றாக இருக்கிறது. தாள கட்டுடன் மிக மிக நன்றாக செய்கிறார். சில சில இடங்களில் சற்று ஒட்டம். அதைக் கவனித்தால் அவருடைய நட்டுவாங்கம் பிரமாதம்.

'கற்பூரம் நாறுமோ.....' திருப்பாவை பாடலை பதமாக அபிநயித்தார் பிரசாந்தி. கலாக்ஷேத்ரா நாட்டிய நாடகம் ஒன்றில் இப்பாடல் முகாரியில் இசையமைப்புச் செய்யப்பட்டிருந்தது. பிரசாந்தி சங்கராபரணத்தில் இதனை ஆடினார். நல்ல இசை அமைப்பு; நடன அமைப்பு.

கடலில் கண்டெடுத்த சங்கை, அது அந்த மாதவனையே சென்றடையட்டும் என்று மீண்டும் கடலில் விட்டு, அது செல்லும் அழகை, வழியை அவர் விழிகள் எழிலாக காண்பித்தன.

பக்குவமாக அபிநயித்தார்.

கண்ணன் பாட்டு இனிமை.

நிகழ்ச்சியில் பாடியவர் கண்ணன். அவையை ஆட்கொள்ளும் சாரீரம். நன்றாகப் பாடுகிறார். இலங்கையில் பொன். சுந்தரலிங்கத்தினுடைய மாணவர். மெல்லிசை ஈடுபாடு அதிகம் என்பது தோடி, சங்கராபரணத்தில் தெரிந்தது.

பரவாயில்லை; கண்ணன் விரைவில் அதனை நிவர்த்திசெய்ய வல்லவர்.

காபி தில்லானா. சற்று சிக்கலான அடவுகள்.

நிகழ்ச்சி முழுமையுமே மெருகு சேர்த்து அமைந்திருந்தது அந்த மிருதங்கம். யாழ்ப்பாணம் ஏ. எஸ். ராமநாதனின் சிஷ்யர் பிரணவநாதன் அவர். நீண்ட நாள்களின் பின் ராமநாதனை நினைவுக்குக் கொண்டுவந்தார். பலே.

பாரிஸ் தேவராஜாவின் அநுசரணையான வயலின். லண்டனைச் சேர்ந்த ஜனநாயகம் புல்லாங்குழல். சுருதிதான் சமயங்களில் இடைஞ்சல் கொடுத்தது.

ஆக, ஜேர்மானியரும் காணப்பட்ட மண்டபத்தில், விமல் சொக்கநாதனுடைய அறிவிப்பும்கூட நிகழ்ச்சிக்கு மிகுந்த ஒன்றுதலாகத்தானிருந்தது.

பரதநாட்டியத்தில் அருகிவருகின்ற சில அம்சங்களைத் தன்னுடைய சொத்தாகக் கொண்ட லக்ஷ்மி விஸ்வநாதன் தலைமையில் பிரசாந்தியினுடைய இந்த அரங்கேற்றம் நடைபெற்றது.

ஆக, அரங்கேற்றங்கள் பொதுவாக எங்குமே விவாதத்துக்குரியனவாகிவிட்ட போது, வாய்ப்புகள் குறைவாகவேயுள்ள ஜேர்மன் நகரில் இந்த அரங்கேற்றம் பல விதங்களில் ஒரு 'மாதிரி' அரங்கேற்றம் என்று கூறுமளவுக்கு இருந்தது. அதுதான் வியப்பு. ❒



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசை ராத்திரி



உஸ்ராட் வலயற் கான், உஸ்ராட் பிஸ்மில்லா கான்

படம்: கிருஷ்ணராஜா

லண்டனில் ஓர் இசை ராத்திரி. இலங்கையில் பாடசாலை நாள்களில், விடுதியிலிருந்து கள்ளத்தனமாக வெளிப் பட்டு, அருகே அளவெட்டி கிராமத்து கோவிலில் தக்ஷிணாமூர்த்தியும் மற்றும் யாழ்ப்பாணத்து தவில் சிம்மங்களும் விடிய விடிய புரியும் லய சமரில் திளைத்ததுண்டு.

அவற்றை நினைந்து, அவற்றுக்காக சமயங்களில் ஏங்குவதும் உண்டு.

ஆனால், அப்படியோர் இரவை லண்டனிலே அநுபவிக்க முடிந்தபோது அது ஓர் அபூர்வ இரவாகத்தானிருந்தது.

இங்கே, இசைச் சிம்மங்கள்.

அனைத்தும் 'ஜுகல்பந்தி'.

உஸ்ராட் ஆஸிஷ் கான் - சரூட்; பண்டிற் இன்ரனில் பட்டாச்சார்யா - சித்தார்.

உஸ்ராட் றெய்ஸ் கான் - சித்தார்; உஸ்ராட் சுல்தான் கான் - சாரங்கி.

பண்டிற் ஹரி பிரசாத் சௌராசியா - புல்லாங்குழல்; விநாயகராம் - கடம்.

முத்தாய்ப்பு வைத்து, பீம்சென் ஜோஷி; பாலமுரளி கிருஷ்ணா. ஹிந்துஸ்தானியும் கருநாடக இசையும்.



ஹிந்துஸ்தானி பைரவி, தோடி, சிந்துபைரவி ராகங்களில் ஜோஸி. அவற்றுக்கிணையான கருநாடக மாயாமாளவ கௌளை, சுபபந்துவராளி, சிந்துபைரவியில் பாலமுரளி.

...சங்கரா யார்கொலோ சதுரர்!

யாரை யார் வென்றார்கள்? யார் தான் தோற்றார்?

திருவையாறு போலத்தான்; தேம்ஸ் நதியின் தென்கோடிக் கரையில், பெரும் பெரும் வித்வக் கலைகளெல்லாம் சங்கமிக்கும் அரச விழா மண்டபத்தில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

'நவ்ராஸ்' இசைத்தட்டு நிறுவனம், வேறும் சிலவற்றுடன் இணைந்து சில தினங்கள் அளித்த இந்திய சாஸ்திரீய இசை, நடன நிகழ்ச்சித் தொடரில் ஒன்று இது.

முன்னதாக ஒரு தினம், உஸ்ராட் வலயற் கான் சித்தார்; உஸ்ராட் பிஸ்மில்லா கான் ஷெனாய் நிகழ்ச்சி.

இசையில் இத்தகைய 'ஜுகல்பந்திகள்' இந்தியாவில் பொதுவாக நடைபெறுகின்றன. ஆனால், நடனத்தில் இது அபூர்வம். அதற்குக் காரணங்கள் பலவுண்டு.

துர்க்கா லாலுடன் பத்மா சுப்ரமண்யம் ஒரு ஜுகல்பந்திக்கு தயார் செய்துகொண்டிருந்தபோது துர்க்கா லால் காலமாகி விட்டார். எனினும், சிலர் நடனத்திலும் ஜுகல்பந்தி நிகழ்ச்சிகளை அளித்திருக்கிறார்கள். அப்படி, நடனத்திலுமான ஒரு ஜுகல்பந்தியும் இந்த நிகழ்ச்சித் தொடரில் இந்த தென் கோடிக்கரை மண்டபங்களில் ஒன்றான குயின் எலிஸபேத் மண்டபத்தில் நடைபெற்றது. மாதவி முட்கல் - ஒடிஸி; வீலா சாம்சன் - பரதநாட்டியம்.

ஒரு முழு இரவுமாக நடைபெற்ற அந்த இசை ஜுகல்பந்தி முடிந்து வெளியே வந்தபோது, தேம்ஸ் நதியின் மெல்லிய குளிர் காற்று; பனிக்காலத்து சூரியனின் மெல்லொளி; லண்டனின் ஞாயிறு அமைதி.

அநுசரணையான சுகம் அது.

அந்த காலைப் பொழுது, ஞாயிறன்றி வேறொரு பொழுதாக இருந்திருந்தால் மண்டப வாயிலுடனேயே அந்த அநுபவம் முடிந்திருக்கும். ❑

**– மாலி**



படம்: கிருஷ்ணராஜா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வெங்கட்ராமன் கிளப்பிய சர்ச்சை

# ராஜீவுக்கு எதிரான ராஜ்ய சபா விவாதத்தை ஏன் மறுத்தார்?

பிங்காட்சன்

வெங்கட்ராமனின் 'எனது ஜனாதிபதிப்பதவி ஆண்டுகள்' என்ற புத்தகத்தைப் பற்றிய சர்ச்சை அடங்கிவிட்டது. போராட்டத்துக்கு மக்களின் கவனத்தைக் கவருவதற்கு வேறு பிரச்னை இல்லாததால் தமிழக காங்கிரஸ் சிறிது காலம் வெங்கட்ராமனைப் பிடித்துக்கொண்டிருந்தது. ராஜீவ் 'நாடாளுமன்ற அனுபவமற்றவர்' என்று எழுதிவிட்டாராம்.

இப்போது அந்தப் புத்தகத்தைப் பற்றிய பேச்சே இல்லை. தலைமைத் தேர்தல் ஆணையாளர் வரலாறு அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டது. சேஷனின் நூலை எதிர்த்து ஒவ்வொரு கட்சியும் உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவைப் பெற்றிருக்கின்றன. தமிழக காங்கிரசில் மீண்டும் குடுமிப்பிடி, கோஷ்டிச் சண்டை. மூப்பனார் அணி, வாழப்பாடி அணி, தங்கபாலு அணி என்று கட்சியில் மூன்று அணிகள் இப்போது. எனவே, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ராஜீவையும், வெங்கட்ராமனின் புத்தகத்தையும் பற்றிச் சிந்திக்க நேரம் இல்லை. புத்தகம் அமோகமாக விற்பனையாகியது; பதிப்பாளருக்கும் ஆசிரியருக்கும் வேறென்ன வேண்டும்?

My Presidential Years என்ற நூலை சுயசரிதமாகக் கருத முடியாது. வெங்கட்ராமன் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றது முதல் பதவி விலகியது வரை அவருடைய நாள்குறிப்பு, டயரி குறிப்புகளின் தொகுப்பு இந்த நூல். 670 பக்கங்கள். படிக்கச் சற்று சலிப்பாகத்தானிருக்கிறது.

குடியரசுத் தலைவர் மாளிகையான ராஷ்டிரபதி பவனின் சடங்குகளை-நடப்புகளை விளக்கியுள்ளார். பல்வேறு விழாக்களில் அவர் ஆற்றிய உரைகளின் சில பகுதிகளும் இதில் அடங்கியுள்ளன. அவற்றை அவர் கூறுவதுபோல, மேலாகப் புரட்டிச் சென்றுவிடலாம். இம்மாதிரியான விழா உரைகள் சுவையாக இருப்பதில்லையே!

**குடியரசுத் தலைவராக பதவியேற்ற சில தினங்களுள் அவர் சந்தித்தது இலங்கைப் பிரச்னைதான்.**

- ஜயவர்த்தன வடக்கையும் கிழக்கையும் இணைக்க ஒப்புக்கொண்டுவிட்டார்.
- பிரபாகரனை இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு உடன்படச் செய்ய. அவருக்கு மிகவும் உதவியாக இருந்தவரும். அவரிடம் செல்வாக்கு உள்ளவருமான எம். ஜி. ராமச்சந்திரனின் உதவியை நாடப்போவதாகவும் ராஜீவ் கூறினார்.
- "நாம் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு மக்கள் முன்பு வைப்போம்; தமிழ் மக்கள் அதனை நிராகரித்துவிட்டால் நாம் நம் கையைக் கழுவிக்கொள்ள வேண்டியதுதான்"

வெங்கட்ராமனுக்கு முன்னர் குடியரசுத் தலைவராக இருந்த ஜெயில் சிங்குக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் உறவு நிலை சீர்கெட்டிருந்தது நாடறிந்த விடயம். குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்குமிடையே இம்மாதிரி மனத் தாங்கல்கள் ஏற்படுவது புதிதல்ல. முன்னர், டாக்டர் ராஜேந்திரபிரசாத்தும் பண்டித நேருவும் ஒரு கட்டத்தில் கருத்து முரண்பாடு கொண்டிருந்தார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் பதவி விட்டுப் போகுமுன்னர், 'நாட்டின் ஆட்சி திறம்பட நிர்வகிக்கப்படவில்லை' என்று கூறிச் சென்றார். அப்போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். ஆனால், ராஜேந்திரபிரசாத், சாகிர் ஹுசேன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் தமக்கென்று தனி மதிப்பும், அந்தஸ்தும் உடையவர்கள். எனவே, அவர்களால் தனித்து நிற்க முடிந்தது; தம் கருத்தை வலியுறுத்திக் கூறமுடிந்தது. அதற்குப் பின்னர் வந்த ஜனாதிபதிகள் ஆளும் கட்சியின் தயவில், பிரதமரின் தயவில் பதவி பெறவேண்டிய நிலை. வி. வி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிரியும், பக்ருதீன் அலி அகமதும், ஜெயில் சிங்கும் வெறும் தலையாட்டிப் பொம்மைகளாக, ரப்பர் ஸ்டாம்புகளாகவே விளங்கினார்கள். ஜனநாயகத்தை மதிக்காத இந்திரா காந்தியின் ஆளுமை அவர்களை அச்சுறுத்தி ஆட்டிவைத்தது எனலாம். இல்லாவிட்டால், எழுபதுகளில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டு ஜனநாயகமும், பத்திரிகைச் சுதந்திரமும் முடக்கப்பட்டு, கிருபளானி முதல் ஜெயப்பிரகாஷ் நாராயண் வரையில் எதிர்க்கட்சியின் தலைவர்கள் எல்லோரும் சிறைக்குள் தவிக்கும் நிலையை இந்த குடியரசுத் தலைவர்கள் அங்கீகரித்திருப்பார்களா? வெங்கட்ராமன்கூட முதலில் 'ஸ்வராஜ்யா'வில் அவசரகாலநிலையை எதிர்த்து எழுதியவர்தான். அவரே பின்னர் 'பல்டி' அடித்தார். நீதிமன்ற அதிகாரங்களைப் பறிக்கும் 44ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தையும் அவசரகால நிலையையும் நியாயப்படுத்தினார்.

இதெல்லாம் பழைய கதை. ஜெயில்சிங், ராஜீவ் காந்தி முரண்பாட்டைப்பற்றி வெங்கட்ராமனும் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'ஜெயில்சிங்கின் பதவிக்காலத்தின் கடைசியில் கசப்பும், இறுக்கமும், சர்ச்சையும் மிகுந்திருந்தன. அவருக்கும் ராஜீவ் காந்திக்குமிடையே கசப்பு உணர்வு ஏற்படக் காரணம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. பிரதமர், மரபுப்படி அவ்வப்பொழுது குடியரசுத்தலைவரைச் சந்தித்து நாட்டு நிலைமைபற்றிக் கூறவில்லை. பிரதமர் குடியரசுத் தலைவரைப் புறக்கணித்தார்; உதாசீனப்படுத்தினார்; வெளிநாட்டு விஜயங்களுக்கு அவருக்கு அனுமதி அளிக்கவில்லை என்றெல்லாம் கூறப்பட்டது. இந்திரா காந்தி கொலைபற்றி விசாரணை செய்த தக்கார் கமிஷனின் அறிக்கையின் நகலை அவரின் பார்வைக்கு அனுப்பவில்லை என்றெல்லாம் குறைகூறப்பட்டது. இந்த விவகாரம் ராஜ்ய சபையில் எழுப்பப்பட்டது. ராஜ்ய சபையின் தலைவர் என்ற முறையில் இதுபற்றிய விவாதத்துக்கு நான் அனுமதி மறுத்துவிட்டேன்' என்கிறார் வெங்கட்ராமன்.

'இந்த ராஜ்யசபை விவாதம் ராஜீவின் மதிப்பைக் குறைத்துவிடும் என்பதாலேயே இவர் அனுமதி அளிக்க மறுத்தார்' என்று தோன்றுகிறது. அதாவது, இந்த விவகாரத்தில் வெளியே தெரியாமல் ராஜீவ் பக்கம் சாய்ந்திருக்கிறார் வெங்கட்ராமன். இதுவே, பின்னர் இவர் குடியரசுத் தலைவர் பதவியை அடைய ராஜீவின் அங்கீகாரத்துக்கு உதவியிருக்கலாம்.



போஃபர்ஸ் ஊழல் நாடெங்கிலும் பேசப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. ஊழல் குற்றச்சாட்டில், குடியரசுத் தலைவர் ஜெயில் சிங், ராஜீவைப் பதவியிலிருந்து இறக்கிவிடுவார் என்ற வதந்தி உலாவியது. எதிர்க்கட்சிகள், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிரதமரை பதவியிறக்கம் செய்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவரிடம் மனு கொடுத்தன.

வெங்கட்ராமன் எழுதுகிறார்: '1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் தேதி, மூத்த காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் என்னைச் சந்தித்தார். குடியரசுத் தலைவர் ராஜீவை ராஜிநாமா செய்யும்படி கேட்டுக்கொள்ளப்போகிறார். அதற்கு அவர் உடன்படாவிட்டால் அவரைப் பதவியிலிருந்து அகற்றி, வேறு ஒருவரைப் பிரதமராக நியமிப்பார் என்று கூறினார்' - என்கிறார்.

இதையடுத்து சர்ச்சைக்குரிய செய்தியையும் அவர் வெளியிடுகிறார். வெங்கட்ராமன் பிரதமர் பதவி எற்க ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்கு 250 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தரத் தயார் என்றும் அவர் கூறினாராம். (அந்த மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் பெயரை அவர் வெளியிடவில்லை. இப்போது அமைச்சராகவிருக்கும் வி. சி. சுக்லாதான் அந்த உறுப்பினர் என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால், அதை அவர் மறுத்திருக்கிறார்.) இதில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். தாம் பிரதமர் பதவியை ஏற்க மறுத்துவிட்டதாக வெங்கட்ராமன் எழுதுகிறார். பிரதமர் பதவியை ஏற்க அவர் ஒப்புக்கொண்டிருந்தால் சரண்சிங் போல அல்லது சந்திரசேகர் போல ஒரு குறுகியகால பிரதமராகத்தான் அவரால் இருந்திருக்க முடியும். நேரு குடும்பத்தினருக்கு மக்களிடையே இருந்த கவர்ச்சி இவருக்கு இருந்திருக்க முடியுமா? இவருக்கென்று சொந்த மாநிலத் திலோ ஏன், சொந்தத் தொகுதியிலேகூட மக்கள் ஆதரவு இல்லை என்பது எல்லோருக்குமே தெரிந்த விடயம். எனவே, குடியரசுத் தலைவராக ஆகும் வாய்ப்பு உறுதியாக இருக்கும்போது, நிலையற்ற பிரதமர் பதவி தேவையில்லை என்று அவர் முடிவு செய்தது ஒரு தியாகமோ, பெருந்தன்மையோ அல்ல! அதற்காக இவர் மார்தட்டிக்கொண்டிருக்கவும் வேண்டாம்.

ராஷ்டிரபதியாக பதவியேற்ற சில தினங்களுள் அவர் சந்தித்தது இலங்கைப் பிரச்னைதான். ராஜீவும், சோனியாவும் குழந்தைகளுடன் தேநீருக்காக வந்திருந்தபோது ராஜீவ் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து தமக்கு விளக்கியதாகக் கூறுகிறார்.

தமிழ் மக்கள் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் என்கிறார்கள். இலங்கை அரசு இதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறது. முதலில் இந்த இணைப்புக்கு ஒப்புக்கொள்ளும்படி இலங்கை அரசை வற்புறுத்தியதாகவும், இணைந்த பிறகு, பின்னர் ஒரு மக்கள் கருத்துக்கணிப்பு மூலம் மக்கள் விருப்பம் அதுவானால் மீண்டும் பிரித்து விடலாம் என்று தான் இலங்கை அரசுக்கு கூறியதாகவும் ராஜீவ் விளக்கினார் என்கிறார்.

'ஜூலை 28ஆம் தேதி ராஜீவ் என்னிடம் பேசினார். மறுநாள் ஜயவர்த்தனவின் அழைப்பில் இலங்கை செல்வதாகக் கூறினார். ஜயவர்த்தன வடக்கையும் கிழக்கையும் இணைக்க ஒப்புக்கொண்டுவிட்டதாகக் கூறினார். தெற்கே ஜே.வி.பி.யைச் சமாளிக்க இலங்கைப் படைகள் தேவை என்பதால் யாழ்ப்பாணத்திலிருந்து படைகளை அகற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடியில் ஜயவர்த்தன இருப்பதாக ராஜீவ் கூறினார். வடக்கு-கிழக்கு இணைப்பை விடுதலைப் புலிகள் பற்றிக்கொள்ள வேண்டும். பிரபாகரனை இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு உடன்படச் செய்ய, அவருக்கு மிகவும் உதவியாக இருந்தவரும், அவரிடம் செல்வாக்கு உள்ளவருமான எம். ஜி. ராமச்சந்திரனின் உதவியை நாடப்போவதாகவும் கூறினார்'.

'நாம் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு மக்கள் முன்பு வைப்போம்; தமிழ் மக்கள் அதனை நிராகரித்துவிட்டால் நாம் நம் கையைக் கழுவிக்கொள்ள வேண்டியதுதான்' என்றாராம் ராஜீவ். அப்படிச் செய்யாதுபோனது - கைகழுவி விடாமல் போனது எத்துணை அனர்த்தத்தில் முடிந்தது என்று எண்ணிப் பார்க்கா மல் இருக்க முடியவில்லை. இந்திய வரலாற்றில் இலங்கைக்கு அமைதிப்படை அனுப்பியது மகத்தான தோல்வியையும், அவப் பெயரையும் வேண்டாத, ஏராளமான செலவையும் பெற்றுத் தந்ததுதான் மிச்சம். (மீதி அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழாராய்ச்சியும் மாநாட்டுப் பந்தல்களும்

சோ. சிவபாதசுந்தரம்

சென்னையிலிருந்து வெளியாகும் 'கணையாழி' மாசிகையின் அக்டோபர் இதழில் எனது குடும்ப நண்பரும் சிறந்த பத்திரிகையாளருமான என். எஸ். ஜகந்நாதன், தஞ்சையில் நடக்கவிருக்கும் எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் படாடோபங்களைப்பற்றி எழுதியிருப்பதைப் பார்த்தேன். ஜகந்நாதன் டில்லி வாசியாக இருந்தாலும் அசல் தஞ்சாவூர்க்காரர். அவர் பிறந்த ஊர் திருவையாறு. அதனால்தான், அவருடைய கட்டுரையில் சில உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். 1968இல் சென்னையிலும், 1981இல் மதுரையிலும் போட்டிபோட்டுக்கொண்டு திராவிடத் தமிழர்கள் தமது அரசியல் கட்சிகளை வளப்படுத்தியதுபோல, இப்போது 1995 ஆரம்பத்தில் மூன்றாவது திராவிடத் தமிழ்க்கட்சி தனது செல்வாக்குப் போதாதென்று, பல கோடி ரூபாய் செலவில் தமிழின் பெயரால் தஞ்சாவூரில் மாநாடு கூட்டுகிறது. இதில் விசனிக்கப்படவேண்டிய அம்சம் என்னவென்றால், இதற்கு மூலஸ்தானமாகவுள்ள உலகளாவிய மொழியறிஞர்கள் மதிப்பைப் பெற்றிருக்கும் 'உலக தமிழாராய்ச்சி மன்றம்' (International Association for Tamil Research - IATR) என்ற ஸ்தாபனம் எப்படித்தான் ஒப்புதல் கொடுத்ததென்பதே.

இந்த மாநாட்டின் பின்னணியை தெரிந்திருப்பது நல்லது. 1962இல் புதுடில்லியில் இந்திய மொழியியல் சம்பந்தமாக ஒரு கருத்தரங்கு நடந்தது. இதில், இந்திய அறிஞர்களோடு இலங்கை, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் கலந்திருந்தார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தனிநாயக அடிகள், பிரெஞ்சு தமிழ் அறிஞர்கள் பிலியோசா, குறோ முதலியோர். இந்தக் கருத்தரங்கில்தான் 'உலக தமிழாராய்ச்சி மன்றம்' ஸ்தாபிக்கப்பட்டது. உலகின் பல நாடுகளிலுமுள்ள கல்வி ஆராய்ச்சி நிலையங்களில் தமிழ் மொழியையும், இலக்கியங்களையும்பற்றி அறிஞர்கள் பல

> **1968இல் சென்னையிலும், 1981இல் மதுரையிலும் போட்டிபோட்டுக்கொண்டு திராவிடத் தமிழர்கள் தமது அரசியல் கட்சிகளை வளப்படுத்தியதுபோல, இப்போது 1995 ஆரம்பத்தில் மூன்றாவது திராவிடத் தமிழ்க்கட்சி தஞ்சாவூரில் மாநாடு கூட்டுகிறது.**

காலமாக ஆய்வு நடாத்திவருகிறார்கள் என்ற தகவலை அறிந்த தனிநாயகம், அந்த ஆய்வு முயற்சிகளையெல்லாம் தேடித் தொகுத்து, சென்னையில் தாம் நடாத்திய கூயஅடை ஊரவரசந என்ற ஏட்டில் 1964இல் வெளியிட்டார். இந்த அடிப்படைச் செய்திகளைத் தொடர்ந்தே, தனிநாயகம் உலகளாவிய கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, தமிழ் ஆய்வாளர்களை அணுகி, தாம் பணியாற்றிய மலாயாப் பல்கலைக்கழகத்தின் மூலம் கோலாலம்பூரில் 1966 ஏப்ரலில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் கூட்டினார். பல்வேறு நாட்டுத் தமிழ் அறிஞர்கள் சேர்ந்து பல்வேறு ஆய்வுகள் நடாத்தினார்கள். அந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு வகையில் இதுவரை ஒன்று வெளிவரவில்லை. இந்த மாநாட்டுக்குத் தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்டவர்களில் அப்போது சென்னை முதல் மந்திரியாகவிருந்த பக்தவத்சலமும் ஒருவர். மாநாட்டு முடிவில் அடுத்த மாநாட்டை எங்கே நடாத்துவது என்ற கேள்வியில், சென்னையில் தாம் நடாத்த விரும்புவதாக பக்தவத்சலம் அழைப்பு விடுத்தார். தமிழாராய்ச்சி மன்றம் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அதற்குரிய தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பித்தது.

இரண்டு ஆண்டுகள் கழித்து 1968 இல் சென்னை மாநாட்டை ஏற்பாடு செய்யுமுன்னர் தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி



பாரிஸ் மாநாட்டில் தனிநாயக அடிகள், டாக்டர் பிலியோசா, டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்.

மாறி, தி. மு. க. ஆட்சியில் அண்ணாதுரை முதலமைச்சரானார். தி. மு. க. கையில் மாநாடு வந்ததும், சகல ஏற்பாடுகளும் செய்யும் அதிகாரம் கருணாநிதி வசம் ஒப்படைக் கப்பட்டது. தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழர் மாநாடாக மாறியது. அதில் நடந்த கோலாகலங்களைப் பற்றி பலரும் அறிவர். நல்ல வேளையாக, தனிநாயகம் தலைமையிலான நிர்வாகக்குழுவின் கோரிக்கையில், தமிழாராய்ச்சிக்குப் புறம்பான தமாஷாக்களை யெல்லாம் புறத்தேயுள்ள 'பூம்புகார்' தீவுத் திடலில் வைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அன்று ஆரம்பித்தது தான் தமிழாராய்ச்சி மாநாடும் தமிழ்நாடும் என்றகூட்டுத் தமாஷா.

மூன்றாவது மாநாடு பாரிசிலும், நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்திலும் நடந்தன. ஐந்தாவது மாநாட்டை யார் நடாத்தவது என்பது, யாழ்ப்பாண மாநாட்டின் இறுதியில் ஏற்பட்ட அராஜக அவலங்களால் தீர்மானமாகவில்லை. ஏழு ஆண்டுகள் கழிந்தபோது, புதிதாக தமிழ்நாட்டு முதலமைச்சராக வந்த எம். ஜி. ஆர். ஐந்தாவது மாநாட்டை மதுரையில் 1981இல் தாமே நடாத்த முன்வந்து விண்ணப்பித்தார். தொடர்ந்த பல பேச்சுக்களின் பின்னர் சம்மதம் அளிக்கப்பட்டது. மதுரைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த மாநாடு ஆராய்ச்சிப் பாகுபாடற்ற தமிழர் விழாவாக நடந்தது. வெளிநாட்டு (தமிழரல்லாத) தமிழறிஞர்கள் பெரும்பாலும் கலந்துகொள்ளவில்லை.

அடுத்த மாநாடு 1989இல் மொரிஷியஸ் நாட்டில் நடந்தது. இதற்கடுத்த ஏழாவது மாநாட்டை மலாயாவிலுள்ள தமிழர்கள் 1991இல் நடாத்தினார்கள். இப்போது, எட்டாவது மாநாடு தஞ்சையில் நடைபெறுவதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அழைப்பு விடுத்திருக்கிறார். சொல்லவா வேண்டும்? தஞ்சை நகரம் சாக்கடையற்ற நகரமாக மாற வாய்ப்புண்டு. அடுத்த பொதுத் தேர்தலில் ஜெயலலிதா வெற்றிக்கொடி நாட்டவும் வாய்ப்புண்டு. எம். ஜி. ஆர். படாடோபமாக ஆரம்பித்த, வி. ஐ. சுப்பிரமணியம் துணைவேந்தராக ஏற்பட்ட தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்போது, சாதி அடிப்படையிலும் கட்சி அடிப்படையிலும் செயல்பட ஆரம்பித்துவிட்டது. ஜகந்நாதன் குறிப்பிட்டதுபோல சென்னை, தரமணியிலுள்ள தமிழாராய்ச்சி நிறுவனமும் பல ஆண்டுகளாக ஒரு தனிமனிதன் ஆட்சியிலிருந்து பழுதுபட்டேவிட்டது. ❑




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செவ்வி: எம். ஏ. நுஃமான்

# 'தமிழில் புகலிட இலக்கியம் புதிய பிரிவாக வளர்கிறது'



நவீன தமிழ் இலக்கியத்தில் படைப்பாளியாகவும், திறனாய்வாளராகவும் தன்னை நிறுவிக்கொண்டவர் எம். ஏ. நுஃமான். மஹாகவி, நீலாவணண் ஆகிய வளமான கவிதைப் புலத்தின் வித்தாக விளைந்த சில கவிஞர்களில் ஒருவர். திறனாய்வுத் துறையில் படைப்பிலக்கிய செழுமைக்கு, அதன் முழுமைக்கு முக்கியத் துவம் அளித்து, கட்சி, குழு மனோபாவங்களுக்கு அப் பாற்பட்ட வளமான மார்க்சிய திறனாய்வாளர்களில் ஒருவர். தற்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் பணியாற்றும் இவர், லண்டனில் செப்டம்பர் 24, 25 ஆம் தேதிகளில் நடைபெற்ற 19ஆவது இலக்கியச் சந்திப்பில் கலந்து உரையாற்ற வந்திருந்தார்.

இந்த இலக்கியச் சந்திப்பு பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

*இது மிகப் பிரயோசனமான ஒன்றாகவே எனக்குத் தோன்றுகின்றது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பிரிந்துவாழும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஆண்டுக்கு ஒருமுறையாவது ஒரிடத்தில் சந்தித்து தாங்கள் எதிர்நோக்கும் கலை, இலக்கிய, சமூகப் பிரச்னைகள் பற்றிக் கலந்துரையாடுவது பயனுடையது. 19ஆவது இலக்கியச் சந்திப்பு அவ்வகையில் முக்கியமானது என்று கருதுகிறேன். கலை இலக்கியப் பிரச்னைகள் பல இங்கு விவாதிக்கப்பட்டன. கவிதைகள் வாசிக்கப்பட்டன. இசை நிகழ்ச் சிகள் இடம்பெற்றன. நாடகங்கள் அரங்கேறின. இவற்றின் மூலம் ஐரோப்பாவில் வளர்ந்துவரும் தமிழ்க் கலாச்சார சூழலை, குறிப் பாக புகலிடம் தேடி வந்த கலைஞர்கள், எழுத்தாளர்களின் இருத் தலுக்கான தேடலை என்னால் ஒரளவு புந்துகொள்ள முடிந்தது.*

*தமிழ் கலை இலக்கிய வரலாற்றில் இது ஒரு முக்கிய அம்சமாகும். இலங்கையின் அரசியல் நெருக்கடி காரணமாக 80க்குப் பின்னர் ஓர் இலட்சத்துக்குமதிகமான இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பியநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களுள் எழுத்தாளர்களும், கலைஞர்களும் பலர். இவர்கள் பெரும்பாலும் தமிழ் மட்டும் அறிந்தவர்கள். இவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப் படுத்துவதற்குரிய களமாக சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வெளியிடுகின்றனர். இந்த வகையில் சுமார் நாற்பது இதழ்கள் இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுமிருந்து வெளிவருகின்றன. புத்தகங்கள் பலவும் வெளிவந்துள்ளன. இவற்றின் மூலம் தமிழில் புகலிட இலக்கியம் என்பது கவனத்துக்குரிய புதிய பிரிவாக வளர்ந்து வருகின்றது. ஒரு படைப்பாளி என்ற வகையிலும், இலக்கிய விமர்சகன் என்ற வகையிலும் பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியம் கற்பிக்கும் ஆசிரியன் என்ற வகையிலும் இதன் வளர்ச்சி எனக்கு முக்கியமானதாகப் படுகின்றது. புகலிட இலக்கியம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நின்று நிலைக்கும் என்பதை இப்போதைக்குத் தீர்மானிக்கமுடியாது. எனினும், இன்றைய தமிழிலக்கியத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாக அதனை நாம் நோக்கவேண்டும் என்பதை இந்த இலக்கியச் சந்திப்பு உறுதிப் படுத்திவிட்டது.*

இக் கலந்துரையாடலின் பதிவுகள் வெளியீடாக முன்வைக்கப் படாதுபோனால் இதன் பயன்பாடு எப்படி?

*எழுத்தாளர்கள் தங்கள் சொந்தப் பிரச்னைகள்பற்றி தங்களுக்குள் உரையாடிக் கொள்வது அவர்களது சுய வளர்ச்சியைப் பொறுத்தவரை பயனுடையதே. இதேவேளை, இலக்கியச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் - விவாதிக்கப்படும் விடயங்களைத் தொகுத்து வெளியிடுவது அவசியம். அப்பொழுதுதான் அதனையிட்டுப் பொது விவாதங்கள் நடைபெறும். பொது வாசகர்கள் மத்தியிலும் அதனையிட்டு ஒரு பிரக்ஞை ஏற்படும். இலக்கியச் சந்திப்புகளை ஏற்பாடு செய்பவர்கள் இதனையிட்டுச் சிந்திப்பது நல்லது.*



இன்றைய புகலிட தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் சிலருக்கு ஐரோப்பிய இலக்கியங்களை அதன் மொழிகளிலேயே படிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. இதன் ஒளியில் தமிழ் படைப்புகள், விமர்சனங்கள் ஆழப்படுத்தப்படவேண்டியது பற்றி...

*இன்று நான் அறிந்தவரை புலம் பெயர்ந்த எழுத்தாளர்களில் ஒரு சிறு எண்ணிக்கையினர்தான் தாங்கள் புகலிடம்பெற்ற நாட்டு மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் சில மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளனர். இது வரவேற்கப்பட வேண்டியது. ஆனால், இது விசாலிக்கப்படவேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் இது நிகழும் என்றே நம்புறேன். ஐரோப்பிய மொழிகளில் நிகழும் புதிய இலக்கிய முயற்சிகளை நேரடியாக அறிந்து கொள்ளவும், தமிழில் அவற்றை நேரடியாக மொழிபெயர்க்கவும் அவற்றின் பாதிப்பினால் தங்கள் பார்வையை விசாலப்படுத்திக் கொள்ளவும் சில எழுத்தாளர்களுக்காவது வாய்ப்புக் கிடைக்கும் என்றே நம்புறேன். எதிர்காலத் தமிழ் இலக்கியத்துக்கு இது வளம் ஊட்டும் என்று எதிர்பார்க்கலாம்.*

சர்வதேச அளவில் மார்க்சியம் சந்தித்த நெருக்கடிகளுக்குப் பின்னர், அதனை மனிதனின் தளைகளை அகற்றும் தத்துவமாக கருதுகிறீர்களா?

*மார்க்சியம் மட்டுமல்ல, எல்லாவகையான தத்துவங்களும் மதக் கோட்பாடுகளும் வரலாற்றுப் போக்கில் நெருக்கடிகளைச் சந்தித்தே வந்துள்ளன. ஆனால், மனிதர்கள் அவற்றை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசிவிடவில்லை. மார்க்சியத்தின் இறுதிக் குறிக்கோள் வர்க்க பேதமற்ற, சுரண்டலற்ற, சமத்துவமான*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சமூக அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதுதான். மனிதன் தன் மனிதத் தன்மையை அழிக்கும் சகல தளைகளிலுமிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதுதான் இந்தக் குறிக்கோள். இந்தக் குறிக்கோள் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசி எறியப்பட்டது என்றே நான் நம்புகிறேன். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக மார்க்சிய வாதிகள் கையாண்ட விதிமுறைகளின் தவறுகளை வரலாறு நமக்கு வெளிப்படுத்தியுள்ளது. குறிக்கோளும், அதனை அடைவதற்கான வழிமுறைகளும் பிரிக்க முடியாதவையல்ல.

■ குறிக்கோளும். அதனை அடைவதற்கான வழிமுறைகளும் பிரிக்க முடியாதவையல்ல.

■ விசாரணையற்ற நம்பிக்கைக்குக் கட்டுண்டு கிடக்கும் எந்த ஒரு கோட்பாடும் மத வழிபாட்டுத் தன்மையைப் பெற்று விடுகின்றது.

■ ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல் இலக்கியத்தில் ஒலிக்கவேண்டும்.

மதங்கள் கூடத்தான் மனிதத் தன்மையை அழிக்கும் சகல தளைகளிலிருந்தும் விடுதலையைக் கோரியது. அவ்வகையில் மார்க்சியம் இன்று மதங்கள் ஏற்கனவே வந்தடைந்த எல்லைக்குத்தான் வந்து நிற்கின்றன என்று கருதுகிறீர்களா?

விசாரணையற்ற நம்பிக்கைக்குக் கட்டுண்டு கிடக்கும் எந்த ஒரு கோட்பாடும் மத வழிபாட்டுத் தன்மையைப் பெற்று விடுகின்றது. கட்சி சார்ந்த மார்க்சிசத்துக்கும் அதுவே நேர்ந்துள்ளது. 'தவறுகள் அற்ற கம்யூனிஸ்ட் கட்சி' போன்ற நம்பிக்கைகள் கம்யூனிச அரசுகள் பலவற்றின் வீழ்ச்சிக்கு வழிகோலின. தொடர்ந்த விசாரணையும் பகுத்தறிவு நோக்கும் உள்வாங்கப்படும் போது மதங்கள்கூட மனித விடுதலைக்கு வழிகாட்ட முடியும்.

தமிழ்நாட்டில் முனைப்புப் பெற்றுள்ள தலித் இலக்கியம் பற்றிய, அதன் எதிர்கால நிலை பற்றிய உங்கள் கருத்து....

தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைப் பிரச்னை அவர்களின் விடுதலை பற்றிய இலக்கியப் படைப்புகள் ஐம்பதுகளின் நடுப்பகுதியிலிருந்தே தமிழில் தோன்றத் தொடங்கிவிட்டன. குறிப்பாக, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இத்தகைய படைப்புகள் பெருமளவில் தோன்றியது மட்டுமன்றி, இலக்கிய ரீதியான முக்கியத்துவமும் பெற்றிருந்தன. 'தலித்' என்பது, ஒரு புதிய தேடல்தான். தமிழ்நாட்டு எழுத்தாளர்களும், விமர்சகர்களும் இத்தகைய புதிய தேடல்களில் அதிக மோகம் கொண்டுள்ளனர். அதன் ஒரு வெளிப்பாடுதான் தலித் இலக்கியம், தலித் கலாச்சாரம் பற்றிய கருத்தாக்கங்கள். இன்னும் ஒரு காரணம், பிராமணிய எதிர்ப்பு. பிராமணியம், தலித்தியம் இரண்டுமே காரியவாதம்தான். நான் காரியவாதத்தை ஒரு கலாச்சாரக் கோட்பாடாக ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல் இலக்கியத்தில் ஒலிக்கவேண்டும் என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை.



பல்வேறு மக்களின் வாழ்க்கை அவலங்கள் இலக்கிய வெளிப்பாடாக அமையவேண்டியது அவசியம்தான். ஆனால், தலித்துகள் பற்றிய பிரச்னைகள் தலித்துக்களால் தான் படைக்கப்படல் வேண்டும் என்ற போக்கும் தமிழ்நாட்டில் நிலவுகிறது. இது ஓர் இலக்கிய சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் நிலையை உருவாக்கும் என கருதவில்லையா?

சுய அனுபவம் உண்மையான இலக்கிய வெளிப்பாட்டுக்கு அவசியம் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், ஒரு நல்ல இலக்கியப் படைப்புக்கு சுய இலக்கிய அனுபவம் மட்டும் போதாது. அந்த வகையில் தலித்துகள் பற்றிய இலக்கியம் தலித்துகளால் தான் எழுதப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுதான் எனது கருத்தும்.

இன்றைய ஈழத்து இலக்கியப் போக்குகள் எவ்வாறு இருக்கின்றன?

இன்றைய ஈழத்து இலக்கியத்தில் பல போக்குகள் காணப்படுகின்றன. 60, 70களில் மேலோங்கியிருந்த மார்க்சிய கருத்தியலின் அடிப்படையில் அமைந்த வர்க்க ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான இலக்கியப் போக்கு இப்போது உள் ஒடுங்கிவிட்டது எனலாம். அதன் இடத்தில் இனத் தேசியவாத (ethnic nationalism) கருத்தியல் மேலோங்கியுள்ளது. 80களில் இதன் தாக்கத்தை இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் நாம் அதிகம் காண்கிறோம். குறிப்பாக, யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து இன்று வெளிவரும் இலக்கியத்தில் இதன் குரலை நாம் அதிகம் கேட்கலாம். இன விடுதலைக்கான 'போர்ப் பறையாகவே' யாழ்ப்பாண இலக்கியம் இன்று காட்சிதருகிறது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே சில வேறுபட்ட குரல்களை கேட்கிறோம். 80களின் நடுப்பகுதியில் வெளிப் பட்ட இயக்க மோதல்களும், இராணுவ நோக்கும் சில எழுத்தாளர் மத்தியில் இனத் தேசியவாதத்தைக் கேள்விக்குரியதாக்கியது. அந்தவகையில் இனத் தேசியவாதம் இராணுவவாதம், ஆயுத கலாச்சாரம் ஆகியவற்றுக்கு எதிரான குரல்களும் இலக்கியத்தில் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

■ இன விடுதலைக்கான 'போர்ப் பறையாகவே' யாழ்ப்பாண இலக்கியம் இன்று காட்சிதருகிறது.

மலையக இலக்கியம் பெரிதும் அதன் பழைய தடத்திலேயே போய்க்கொண்டுள்ளது. அவர்கள் வாழ்க்கையும் பிரச்னைகளும் வேறுபட்டவை. ஆயினும் பாரம்பரிய அதிகார வர்க்கத்துக்கு எதிரான குரல்கள் புதிய தலைமுறையினரின் படைப்புகளில் கேட்கின்றன. முஸ்லிம்களின் இலக்கிய வெளிப்பாட்டுக்குச் சில புதிய ஊற்றுக்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக, கிழக்கிலிருந்து பல புதிய இளைஞர்கள் இலக்கியத் துறைக்குள் நுழைந்துள்ளனர். போர் எதிர்ப்புக் குரல் இவர்களின் வாழ்க்கை அனுபவத்தின் அடியாக வெளிப்படுகிறது.

புகலிட இலக்கியம் இன்னும் ஒரு புதிய போக்காக அரும்பியுள்ளது. மேலைக் கலாச் சார சூழல் தமிழ் இலக்கியத்துக் குள் நுழையும் ஒரு வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளது. அது ஒரு புதிய வளத்தை எமது இலக்கியத்துக்கு பெற்றுத்தரும் என்பதே என் நம்பிக்கை.

யாழ்ப்பாண இலக்கியம், இன விடுதலைக்கான போர்ப் பறையாகவுள்ளது என்கிறீர்கள். அது வாழ்வியல் நெருக்கடிகளின் வெளிப்பாடாகக் கொண்டாலும், இலக்கிய தரம் என்ற நோக்கில் படைப்பாளியும் விமர்சகருமான நீங்கள் அவைபற்றி என்ன கருதுகிறீர்கள்?

இத்தகைய படைப்புகள் பலவற்றில் ஒருபக்கச் சார்பான பிரச்சார வாடை மேலோங்கியிருக்கும் அளவுக்கு இலக்கியத் தரம் பேணப்படவில்லை என்றே கருதுகிறேன். இது, அங்கிருந்துவரும் எல்லாப் படைப்புக்களுக்கும் உரிய பொதுக் குணம் என்று கூற முடியாவிட்டாலும், நான் பார்த்த அளவில் பெரும்பாலான படைப்புக்களில் இத்தன்மையைக் காணமுடிகின்றது. ❑

– மு. புஷ்பராஜன் படங்கள்: கிருஷ்ணராஜா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தஸ்லிமா நஸ்ரீன் என்ற பிரச்னை

யமுனா ராஜேந்திரன்

தஸ்லிமா நஸ்ரீன் பிரச்னை மூன்று பிரதான விடயங்களை அடிப்படையாகக்கொண்டது.

1. இஸ்லாமிய மதமும் புதிய உலக முறைமையும் (New world order) பற்றியது.

2. மத, அரசியல் அடிப்படைவாதமும் கலைஞனது சுதந்திரமும் பற்றியது.

3. மத, அரசியல், தத்துவ அடிப்படைவாதமும் பெண்ணிலைவாதமும் பற்றியது.

முதலில், தஸ்லிமா நஸ்ரீனின் பிரச்னையும் ஸல்மன் ருஸ்டி பிரச்னையும் ஏன் உலகுதழுவிய பிரச்னையாக ஆகியது என்கிற அரசியல் அடிப்படைபற்றிப் பார்ப்போம்.

கெடுபிடி யுத்த காலகட்டத்தில் உலக முதலாளித்துவ முகாமுக்கும் சோவியத் யூனியனை மையமாகக்கொண்ட சோசலிச முகாமுக்கும் இடையில் முரண்பாடுகள் கூர்மை கொண்டிருந்தது. இஸ்லாமிய நாடுகளும் இரு முகாம்களாகப் பிரிந்து இருந்தன.

தனிநபர் சுதந்திரமும் எழுத்தாளர் சுதந்திரமும் சோசலிச சமூகங்களில் நெருக்கடிகளுக்கு ஆளானபோது மேற்குலக பிரச்சாரம் அதையே மையமாகக்கொண்டிருந்தது.

முதலாளித்துவ மாற்றுக் கட்டமைப்பு எனும் அளவில் சோசவிசத்தை சமூக பொருளாதார ரீதியில் முறியடிப்பதற்கு மேற்குலகுக்கு எழுத்தாளனதும் சிந்திப்பவனதும் சுதந்திரம் பற்றிய பிரச்னை ஆயுதமாக ஆகியது. போரிஸ் பாஸ்டர் நாக், சோல் ஸனித்சின், ஜோசப் பிராட்ஸ்கி, வக்லாவ் ஹாவல் போன்ற கலைஞர்களைப்பற்றிய விவாதங்கள் இத்தகையவை.

இதே காலகட்டத்தில் எகிப்தில் நாவல் ஆசிரியை நோவல் எட் சால்வியும், துருக்கியில் இல்மஸ் குணேயும், நசீம் இக்மத்தும், நவ்சத் செலிக் எனும் கவிஞர்களும் கலைஞர்களும் அடக்குமுறைகளுக்கு ஆளானார்கள். இதே காலகட்டத்தில் முதலாளித்துவ நாடுகளில் பெர்டோல்ட் பிரெக்ட், சார்லி சாப்ளின், அஞ்சலா டேவிஸ் போன்ற கலைஞர்களும் பேட்ரன் ரஸ்ஸல் போன்ற சிந்தனையாளர்களும் அடக்கு முறைக்கு ஆளானார்கள்.

மேற்குலகம் இஸ்லாமிய நாடுகளில் கலைஞர்கள் நிலைபற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. சோசலிசத்தை விமர்சித்த கலைஞர்களுக்கு நோபல் விருதுகள் வழங்கப்பட்டன. 1980களின் இறுதி, 90களின் ஆரம்ப ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. மேற்குலகுக்கு தனது சமூக, பொருளாதார நெருக்கடிகளுக்கு திசைமாற்றம் தேவைப்பட்டது. அதன் இருத்தலுக்கு புதிய புதிய எதிரிகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது.

தற்பொழுது மேற்குலகுக்கு சவால்விடும் அரசியல் சத்தியாக இருப்பது இஸ்லாமும் இஸ்லாமிய நாடுகளும்தான். ஆகவே, மேற்குலகின் தாக்குதல் இப்பொழுது இஸ்லாமிய மதநம்பிக்கையின் மீதும், இஸ்லாமிய நாடுகளின்மீதும் துவங்கியிருக்கிறது.

தன் வாழ்நாளெல்லாம் கன்சர்வேட்டிவ் கட்சியை விமர்சித்துவருபவரும் Mrs Torture (திருமதி சித்திரவதை) என தச்சர் அம்மையாரைத் தாக்கியவருமான சல்மான் ருஸ்டியை அதே தச்சர் அமைமையார் பாதுகாத்து நிற்பது அதனால்தான்.

முஸ்லிம் மக்களையும் மொரோக்கோ நாட்டு அகதிகளையும் விரட்டியடிக்கும் பிரான்சும், ஜெர்மனியும் நஸ்ரீனை நிபந்தனையற்று வரவேற்பதும் இதனால்தான்.

பங்களாதேஷ் அகதிகளை தெருக்களில் கொன்றொழிக்கும் பிரிட்டிஷ் அரசு நஸ்ரீனை வரவேற்பது இதனால்தான்.

தமிழ் அகதிகளைத் திருப்பி விரட்டியடிக்கும் சுவிஸ் அரசாங்கமும் நோர்வேயும் சுவீடனும் நஸ்ரீனை வரவேற்பதும் இதனால்தான்.

மேற்குலகம் இப்பிரச்னையில் இவ்வளவு ஆர்வம் காட்டுவதற்கான அரசியல் காரணம் இதுதான்.

இந்த அம்சம் தஸ்லமா நஸ்ரீன், ருஸ்டி பிரச்னையின் ஒரு பரிமாணமே. இதுதான் பிரச்னையின் முதல் பரிமாணமும் ஆகும்.

இரண்டாவது, மத, அரசியல், தத்துவ அடிப்படைவாதம் பற்றிய பிரச்னை.

மனித விமோசனத்தை நோக்கமாகக் கொண்ட மத, அரசியல், தத்துவ அணுகுமுறைகள் மேற்கோள்களிலும் புத்தகங்களிலும் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதிலும் தங்கிவிடும்போது அடிப்படைவாதம் வேர் விடுகிறது.



மனிதனது சுதந்திரத்தையும், படைப்பாற்றலையும் மாற்றுக்கருத்துக்களையும் அடிப்படைவாதம் பலிகேட்கிறது. ரஷ்யாவில் அது புதிய பொருளாதார கட்டமைப்பு எனும் பெயரில் ஸ்ராலினிசமாக வடிவெடுக்கிறது. சீனாவில் புதிய கலாச்சாரப் புரட்சியெனும் பெயரில் அது மாவோயிஸமாக வடிவெடுக்கிறது. இந்தியாவில் புதிய ஜனநாயகம் எனும் பெயரில் நக்ஸலிசமாக வடிவெடுக்கிறது.

புதிய உலகமுறை எனும் பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அது வியட்நாமிய ஆக்கிரமிப்பாக வடிவெடுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சதாம் ஹுசேனுக்கு குர்திஸ் கொலைகள், பொல்பொட்டுக்கு கம்போடிய புதிய கொலைக் களம். பாரதீய ஜனதாவுக்கு பாபர் மசூதி இடிப்பு, கிறிஸ் தவ மதத்துக்கு கலிலியோ, கொமேனிக்கு ருஸ்டியின் தலை, ஈழத்தில் செல்வி, கோவிந்தன், பிரிட்டனுக்கு போக்லாந்து, அயர்லாந்து.

மார்க்சியம் அடிப்படை வாதமாகிறபோது அதைப் புத் தாக்கம் செய்ய கிழக்கு ஐரோப்பிய மக்கள் கிளர்ந்தெழுகிறார்கள். ஏகாதிபத்தியத் துக்குப் பாடம்புகட்ட வியட் நாமிய, கொரிய, இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க மக்கள் எழுகிறார்கள்.

இந்த மக்கள் எழுச்சிகளுக்கு முன்னோட்டமாக அது எந்த அமைப்பாயினும் கலைஞர்களும், சிந்தனையாளர்களும்தான் எதேச்சாதிகாரத் துக்கு எதிராக முதன்முதல் குரல்கொடுக்கிறார்கள். புதிய எஜமானர்களின் மூடத்தனத்தை அவர்களே கேள்விக் குள்ளாக்குகிறார்கள்.

அடிப்படைவாதம் எல்லா சமூக அமைப்புகளிலும் எழும். ஏகாதிபத்திய அமைப்பு போலவே புரட்சிக்கு பிந்திய சமூகங்களிலும் அடிப்படை வாதம் நிலைகொண்டிருக் கிறது. நாடு, மத, அரசியல், தத்துவ அணுகுமுறைகளுக்கு அப்பால் மானுட விடுதலைபற்றிப் பேசும் கலைஞர்களதும் சிந்தனையாளர்களதும் நிலை இச் சூழ்நிலைகளில் பிச்னைக்குள்ளாகி விடுகிறது.

சிவரமணியும், மயாக்கோவ்ஸ்கியும் ஆத்மாநாமும் தற்கொலையைக் கலகமாக நிறுவுகிறார்கள்.

கலைஞனது காலம், இடம் கடந்த இத் தன்மையைப் புரிந்து கொள்கிறவர்கள் எல்லைகளைத் தாண்டி அவனுக்காகக் குரல் கொடுக்கிறார்கள்.

குந்தர் கிராஸிலிருந்து ஸால்பல்லோ, முல்க்ராஜ் ஆனந்த், ஜோசப் பிராட்ஸ்கி, இன்குலாப் என எல்லோரும் ஒரே குரலில் பேசுவது இதன்பொருட்டே.

இது நஸ்ரீன் பிரச்னையின் இரண்டாவது பரிமாணம்.

மூன்றாவதாக, பெண்ணிலைவாத அணுகுமுறை என்பது அனைத்துச் சிந்தனைக் கட்டமைப்புகளையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக் கிறது. தமது ஒடுக்கப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து எல்லாவற்றையும் அது கேள்விக்குறியாக்குகிறது.

மார்க்ஸை, பிராய்டை, மொழியியலை, வரலாற்றை, மதத்தை, தத்துவத்தை, ஆண்நிலை நோக்கிலிருந்து விடுவித்து, பெண்ணிலை நோக்கிலிருந்து மறு நிர்மாணம் செய்கிறது. தனது கணவனை, நண்பனை, காதலனை, மகனை பெண்ணிலைவாதம் கேள்விகேட்கிறது.

இது மத, அரசியல், தத்துவ, அழகியல், கலை மதிப்பீடுகளை புதிய வழி நோக்கித் திறக்கிறது.

## வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| பிறப்பு: | 1962 ஆகஸ்ட் 25, மேமன்சிங், பங்களாதேஷ். |
| பெற்றோர்: | தந்தை ஒரு டாக்டர். தாயும் சகோதரர்களும் உண்டு. |
| தலையின் விலை: | 2500 அமெரிக்க டொலர்கள். |
| தொழில்: | டாக்டர். எழுத்து தன் வாழ்வின் அடிப்படைகளில் ஒன்று என்கிறார். |
| மணவாழ்வு: | மூன்றுமுறை திருமணமாகி விவாகரத்துப்பெற்றவர். குடும்ப அமைப்பில் அவநம்பிக்கை தெரிவிக்கிறார். |
| 1992: | 'நபசித்ரா' எனும் கட்டுரைத் தொகுதிக்காக 'ஆனந்த் புரஸ்கார்' இலக்கிய விருது. புகழ்வாய்ந்த வங்காள இலக்கிய விருது இது. |
| 1993, பெப்ரவரி: | 'லட்ஜா' நாவல் பிரசுரம். |
| 10 ஜுலை 1993: | பங்களாதேஷில் 'லட்ஜா' நாவலுக்கு தடை. |
| 9 மே 1994: | 'குரான் மாற்றி எழுதப்படவேண்டும்' - கல்கத்தா நியூ ஸ்ரேற்மன் நேர்முகம். |
| 4 ஜுன் 1994: | இஸ்லாம் மதத்தைக் கொச்சைப்படுத்தியதற்காக கைது உத்தரவு. |
| 3 ஆகஸ்ட் 1994: | டாக்கா உயர் நீமன்றத்தில் ஆஜராகி, பிணையில் விடுதலை. |
| 9 ஆகஸ்ட் 1994: | இரகசியமாக பங்களாதேஷிலிருந்து வெளியேறி, கல்கத்தா வழியாக சுவீடன் பயணம். |
| 10 ஆகஸ்ட் 1994: | சுவீடன் வருகை. |
| செப்டம்பர் 1994: | நோர்வேயில் எழுத்துரிமை பற்றிய மாநாட்டில் ருஸ்டியுடன் பங்கேற்பு. |

முழு சிந்தனைக்கட்டமைப்பும் ஆட்டம் காணுகிறபோது நிலைநிறுத்தப்பட்ட ஆதிக்க வடிவங்கள் சீறுகின்றன. வசை பொழிகின்றன. தமது மதிப்பீடுகளை வன்முறைமூலம் நிலை நாட்ட முயல்கின்றன.

மார்க்சிய புரட்சியாளனான றொபர்ட் முகாபேக்கு பெண்ணிலைவாதம் மேற்கத்திய சரக்காகிப்போகிறது.

இஸ்லாமியரான இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் சஹாபுதினுக்கும் தமிழ்க்கவிக்கோ அப்துல் ரஹ்மானுக்கும் நஸ்ரீன் பிரச்னை 'யோனி விடுதலை' (Freedom to her vagina) விஷயமாகிப்போகிறது.

பாலுறவு ஆண்களின் ஏக போகச் சொத்துரிமை அல்ல பெண்களும் எழுதலாம், எழுத வேண்டும், எழுதுவேன் என்கிறார் நஸ்ரீன்.

நஸ்ரீனின் 'பூச்சியின் கதை' கவிதை கத்தியின்மீது நடக்கும் மொழியின் பயணம். அது அற்புதமான படைப்பாகியிருக்கிறது. முற்றிலும் உக்கிரமான பெண் கவி அனுபவம் அது.

இலக்கியம் பற்றிப் பேசவரும் விமர்சகர்கள் தஸ்லிமாவின் மணவாழ்க்கைபற்றி, விடுதலைக் காதல்பற்றி கேவலமாக வசை உதிர்க்கிறார்கள். ருஸ்டியும் பல பெண்களோடு பழகுபவர். விவாகரத்தானவர். மனைவியால் புறக்கணிக்கப்பட்டவர் போன்றவை ருஸ்டி பற்றி விவாதத்தில் பிரச்னைக்குள்ளாவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள் பெண்ணிலைவாதிகள்.

அஸ்கர் அலி என்ஜினியர் போன்றவர்கள்கூட நஸ்ரீனை விமர்சிப்பதற்கு கொடுக்கிற அழுத்தத்தை அவர் தலைக்கு விலை வைத்த கொடுமையைக் கண்டிப்பதில் கொடுப்பதில்லை என்றே தோன்றுகிறது.

இன்றைய நிலையில் கலைஞன் அரசியல்வாதியாக இருக்கத் தேவையில்லை. தத்துவவாதியாக இருக்கத்தேவையில்லை.



www.tamilarangam.net

கலைஞன் உணர்ச்சி மயமானவன். மானுட மதிப்பீடுகள் மீது தொடுக்கப்படும் கொடுமைகளுக்கு எதிரானவன்.

இந்தத் தார்மீக தன்மைதான் நஸ்ரீனை பங்களாதேஷில் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட இந்துக்கள்பற்றி எழுத வைத்திருக்கிறது.

நஸ்ரீனின் எழுத்து மத விரோதம் சார்ந்ததல்ல. மதத்தின் மானுட விரோதத் தன்மையை எதிர்ப்பதைச் சார்ந்தது.

துருக்கிய கொடுங்கோலாட்சிக்கு எதிராகப் பேசிய கவிஞனொருவன் இவ்வாறு சொல்கிறான்:

மௌனம் சாவு.
எதுவுமே பேசாமல் இருப்பதும்
சாவுதான்
எதுவும் பேசினாலும் சாவு நிச்சயம்
பேசுவோம்
பேசிவிட்டுச் சாவோம்.


இந்தத் தார்மீகத் தன்மைதான் இந்த விடுதலை வேட்கைதான் நஸ்ரீனைப் பேச வைத்திருக்கிறது.

சுழுலட்டும் உலகம். இன்னும் வேகமாகச் சுழலட்டும்.

இயக்கம் இயற்கை. இயக்கம் வாழ்வு.


இயக்கம் வாழ்வின் அர்த்தம். இயக்கம் மனிதம். ❑

குறிப்பு: இந்தக் கட்டுரை, நேர்முகம், வாழ்க்கைக் குறிப்பு, கவிதை போன்றவற்றுக்கான ஆதார பத்திரிகைகள் Sunday, Mainstream, Savvy, Times, புதியகுரல், புதியகலாச்சாரம் போன்றவற்றையும், Lajja நாவலையும் அனுப்பி உதவிய நண்பன் விசுவநாதனுக்கு என் நன்றி.



சல்மான் ருஸ்டி

# "எந்நேரமும் அவர்கள் என்னைக் கொலைசெய்யலாம்"



"என்னை மௌனிக்கச்செய்துவிட முடியாது.
எங்கெங்கே நான் பார்த்தாலும் அங்கெல்லாம் மதத்தின் பெயரால் பெண் கேவலமாக நடத்தப்படுகிறாள். அவர்கள் மீதான ஒடுக்குமுறை மதத்தின் பெயரால் நியாயப்படுத்தப் படுகிறது.
இதை எதிர்த்துக் குரல் கொடுப்பது என்பது ஆன்மீகப் பொறுப்புணர்வில்லையா?
எமது பெண்கள் விடுதலை பெறவேண்டுமானால் முதலில் அரசியல் மதத்தை அடிப்படையாகக்கொண்டதாக இருக்கக் கூடாது."

**நேர்முகம்: ரைம் சஞ்சிகை**

**கேள்வி: ஏன் நீங்கள் தலைமறை வாகப் போனீர்கள்?**

**தஸ்லிமா:** வங்காள தேசமெங்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தெருக்களில் இறங்கி என்னைத் தூக்கிலிடவேண்டும் என ஆர்ப்பரித்தார்கள். என்னைக் கொல்ல வெறிகொண்டலைந்தார்கள். நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில் விபத்து நேரலாம் என்று நான் கருதினேன்.

**கேள்வி: முஸ்லிம்களின் மத உணர்வுகளைக் காயப்படுத்திவிட்டீர்கள் என்று குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டபின் ஏன் நீங்கள் நீதிமன்றப் பிணை பெறுவதற்காக வெளிவந்தீர்கள்?**

**தஸ்லிமா:** ஒளித்து வாழ்ந்தபோதும் என் வாழ்வு பாதுகாப்பானதாயிருக்கவில்லை. நிலைமை மேலும் மோசமாகியிருந்தது. ஆகவேதான் என் உயிருக்குப் பிரச்னை என்று தெரிந்தும்கூட நான் நீதிமன்றம் போக முடிவுசெய்தேன்.

**கேள்வி: ஒளிந்து தப்பித்து வாழ்பவராக உங்கள் அனுபவங்களைச் சொல்லுங்கள்.**

**தஸ்லிமா:** இருட்டில் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்கு நான் நகர்ந்துகொண்டிருந்தேன். தங்குமிடங்கள் கிடைப்பது மிகச்சிரமமாகவே இருந்தது. எனது மிக நெருங்கிய நண்பர்கள்கூட என்னை உள்ளேவிடப் பயந்தார்கள். நான் எங்கே சென்றாலும் இருண்ட அறையினுள்ளேயே வாழவேண்டியிருந்தது. இந்த இரண்டு மாதங்களில் சூரிய ஒளியைக் காண்பதே சொற்பம்தான். சில சமயங்களில் இரவுக்கும் பகலுக்கும் எனக்கு வித்தியாசமே தெரியாது. சுத்தமான காற்றை நான் சுவாசிக்கவேயில்லை. எப்போதும் ஊசி வீழ்ந்தால் கேட்கும் நிசப்தம். எனது குடும்பத்தோடு தொடர்புகொள்ள முடியவில்லை. சரியான நேரத்துக்கான சாப்பாடு கிடைக்கவில்லை. தூக்கமற்ற இரவுகளைக் கழித்தேன்.

**கேள்வி: உங்கள் மனோநிலை எப்படியிருந்தது?**

**தஸ்லிமா:** எனது நாள்கள் பயங்கரத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது. நான் நலிந்துபோயிருந்தேன். மனக்கிலேசமுற்றிருந்தேன். அந்த இரண்டு மாதங்களும் எனக்கு பயங்கர சொப்பனம்போன்றது.

**கேள்வி: எதை நீங்கள் அதிகம் இழந்தீர்கள்?**

**தஸ்லிமா:** என்னால் எழுதமுடியவில்லை.

**கேள்வி: இந்தச் சம்பவங்கள் உங்களை எப்படி மாற்றிது?**

**தஸ்லிமா:** உண்மையை உயர்த்திப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடிப்பதற்காகவும் அடிப்படைவாதத்துக்கு எதிராகவும் சமரசமற்று எழுதவேண்டும் என என்னுள் மறுபடி தீவிரம் பெற்றது. மூடத்தனமாக காரணங்களைச் சொல்ல அடிப்படைவாதிகள் எமது நாட்டை இருண்ட காலத்துக்குள் இழுத்துப் போக நினைக்கிறார்கள்.

**கேள்வி: நிங்கள் பாலுறவுபற்றித்தான் அதிகமாக எழுதுகிறீர்கள் என்று உங்கள் விமர்சகர்கள் சொல்கிறார்களே?**

**தஸ்லிமா:** நான் பெண் கல்வி மற்றும் பெண் தற்காப்பு பற்றித்தான் அதிகம் எழுதுகிறேன். பெண்ணின் முழு சுதந்திரத்துக் காக நான் வாதிடுகிறேன். உடம்புக்கும் மனதுக்குமான முழு விடுதலைபற்றிப் பேசுகிறேன்.

பெண் விடுதலையை மறுப்பவர்கள் தான் நான் பாலுறவுபற்றி எழுதுகிறேன் என்ற குற்றச்சாட் டுப் போர்வையில் எனது உண்மையான படைப்புக்களை மறைக்கப் பார்க்கிறார்கள். மேலாக, ஆண்கள் மட்டும் தான் பாலுறவு பற்றி எழுதலாம் எனும் கருத்து இச்சமூகத்தில் நிலவுகிறது. பாலுறவு ஆணின் ஏகபோகச் சொத்து அல்ல. பாலுறவு பற்றி எழுத பெண்ணுக்கும் சம சுதந்திரம் உண்டு.

**கேள்வி: சில மதசார்பற்ற மற்றும் பெண்ணுரிமைக் குழுக்கள் உங்களது கோபாவேசமான அறிக்கைகள் தங்களது நோக்கங்களைச் சிதறடித்து விடுகின்றன என்று நினைக்கிறார்கள்.**

**தஸ்லிமா:** நான் உண்மையைச் சொல்கிறேன். பெரும்பாலானவர்கள் உண்மையைச் சொல்லப்பயப்படுகிறார்கள். ஏனெனில், அந்த உண்மைகள் மத அடிப்படைவாதிகளை ஆத்திரமூட்டிவிடும் என பயப்படுகிறார்கள். முல்லாக்கள் கோபப்படுவார்கள் என்பதற்காக பெண்கள் தற்காப்பு பெறுவதற்கான தமது முயற்சிகளை நிறுத்திக்கொள்ளவேண்டுமா?

இம்மாதிரியான வாதங்கள் அடிப்படைவாதத்தை வளர்க்கவே செய்யும்.

**கேள்வி: இப்போது நீங்கள் உங்கள் குரலை அடக்கிப் பேசப்போகிறீர்களா?**

**தஸ்லிமா:** ஒருபோதும் இல்லை. எனது அபிப்பிராயங்களை எப்போதும்போல அச்சமில்லாமல் உரத்துப்பேசப்போகிறேன்.

**கேள்வி: இப்போது உங்கள் உயிருக்கான ஆபத்துபற்றி பயப்படுகிறீர்களா?**

**தஸ்லிமா:** ஆமாம். எனது தலைக்கு மூன்று இஸ்லாமிய தலைவர்கள் சன்மானங்களை அறிவித்திருக்கிறார்கள். அடிப்படைவாதிகள் என்னைக் கொலைசெய்ய கொலைப்படைகளை அமைத்திருக்கிறார்கள். எந்த நேரமும் அவர்கள் என்னைக் கொலை செய்யலாம்.

**கேள்வி: ஓர் இயல்பான வாழ்க்கையை வங்காள தேசத்தில் உங்களால் மேற்கொள்ள முடியும் என்று கருதுகிறீர்களா?**

**தஸ்லிமா:** இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக இயல்பான வாழ்க்கையை வாழமுடியவில்லை. இப்போது முன்னரை விடவும் அடக்கப்பட்டிருக்கிறேன்.

**கேள்வி: ஏதெனுமோர் அந்நிய நாட்டில் அரசியல் அடைக்கலம் ஏற்றுக்கொள்வீர்களா?**

**தஸ்லிமா:** இந்த நிமிடம் வரை இல்லை.

**கேள்வி: உங்கள் திட்டங்கள் என்ன?**

**தஸ்லிமா:** எழுதுவது. சமரசமில்லாமல் எழுதுவது. எது தவறோ, எது நீதியின்மையோ, எது இருட்டோ அவற்றுக்கு எதிராக எழுதிக்கொண்டேயிருப்பது. ❑

## இந்திய பெண்ணிலைவாதி ஒருவருடன் நேர்முகம்: கல்கத்தா சன்டே

தஸ்லிமா: ராமாயணம், மகாபாரதம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இபேநிவா: அவை காவியங்கள். சிறந்த இலக்கியத்துக்கான உதாரணங்கள்.

தஸ்லிமா: இதே அபிப்பிராயத்தை கீதை பற்றியும் உபநிடதங்கள் பற்றியும் நீங்கள் சொல்லமுடியுமா?

இபேநிவா: ஆமாம்.

தஸ்லிமா: இவைகளை கடவுளின் வார்த்தைகள் என்று நம்புகிறீர்களா?

இபேநிவா: இல்லை. நிச்சயமாக இல்லை.

தஸ்லிமா: ஆகவே இந்த நூல்கள் பகிரங்கமாக விமர்சிக்கப்படவேண்டும் என நினைக்கவில்லையா? இவை பற்றி எழுதப்படவேண்டாவா? திருத்தப்படவேண்டாவா? மறுகட்டமைப்புச் செய்யப்படவேண்டாவா? திரும்ப எழுதப்படவேண்டாவா? மாற்றம் செய்யப்படவேண்டாவா?

இபெநிவா: இல்லை. பதில் மக்களை கல்விமயப் படுத்த வேண்டும். கற்பிக்கவேண்டும். உணரச்செய்ய வேண்டும்.

தஸ்லிமா: இல்லை. புத்தகங்கள் மாற்றி எழுதப்படவேண்டும்.

## படைப்புகள் பற்றி

தாகூருக்குப்பின்னால் வங்க மொழியிலிருந்து வெளிவந்த பிரபலமான புகழ்பெற்ற எழுத்தாளராக இவரைக் கணிக்கிறார்கள். இலக்கியக் காரணங்களல்லாத காரணங்கள் இதில் முக்கியமாகின்றன. கவிதைகளில் இவர் நிமிர்ந்து நிற்கிறார். உரைநடையில் ஆழமில்லை என்கிறார்கள் விமர்சகர்கள்.

எட்டு கவிதைத் தொகுதிகளும் இரண்டு குறுநாவல்களும் ஒரு கட்டுரைத் தொகுதியும் வெளியாகியிருக்கின்றன. இவற்றுள் ஒருசில கவிதைகளும் 'லட்ஜா' (வெட்கம்) நாவலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'லட்ஜா' நாவல் பெங்குயின் இந்தியாவினால் வெளியிடப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் இந் நூல் கிடைப்பதில்லை.

பங்களாதேஷிலும் இலங்கையிலும் இந்நாவல் தடைசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் புகழ்பெற்ற பெண்ணிலைவாதி குமாரி ஜெயவர்த்தனா இந்நாவல் தடைசெய்யப்பட்டதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தஸ்லிமாவுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்த உலகப் புகழ் வாய்ந்த எழுத்தாளர்கள்: சல்மான் ருஸ்டி, முல்க்ராஜ் ஆனந், குந்தர் கிராஸ், மரியா வர்கஸ் லோசா, அஸ்கர் அலி என்ஜினியர், சுமித் சக்கரவர்த்தி

இவர் நாவல் கலையழகு குறைந்தது எனச் சொல்லும் புகழ்வாய்ந்த கலைஞர்கள்: புத்ததேவ் தாஸ் குப்தா, மிருணாள் சென், அபர்ணா சென், நபனிதா தேவ்ஸன்

இவர்பற்றி தமிழ்ச் சிறுபத்திரிகைச் சூழலிலோ பெரும் பத்திரிகைச் சூழலிலோ அக்கறையுடன் எதுவும் எழுதப்படவில்லை. கணையாழில் மட்டும் நாவல் விமர்சனம் ஒன்று வெளிவந்திருக்கிறது. இன்குலாப்பின் கவிதை இவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருக்கிறது.

'கவிக்கோ' அப்துல் ரஹ்மான் தரக்குலைவான வசைகளுடன் அபிப்பிராயங்களை உதிர்த்திருக்கிறார். பழனி பாபா தஸ்லிமா ஒரு நரம்புத்தளர்ச்சி நோயாளி என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சர்வதேச பத்திரிகைகளான கார்டியன், ரைம் இன்ரர்நஷனல், நியூயோர்க் ரைம்ஸ் போன்றவற்றில் இவரது நேர்முகங்கள் வெளியாகியுள்ளன.

சல்மன் ருஸ்டி இவருக்கு எழுதிய ஒரு கடிதம் உலகெங்கும் 40 பத்திரிகைகளில் வெளியானது. இவரது தலைக்கு விலை வைக்கக் காரணமாயிருந்தவை இரண்டு விடயங்கள்:

1. இந்தியாவின் கல்கத்தா நியூஸ்ரேற்மன் பத்திரிகைப் பேட்டி. தஸ்லிமா சொன்னார்: 'குரான் மாற்றி எழுதப்பட வேண்டும்'

2. 'லட்ஜா' நாவல் மறுபிரசுரம்.

இந்தியாவில் பாபர் மசூதி தகர்ப்பு தொடர்ந்து பங்களா தேஷில் இந்துக்கள் கொல்லப்பட்டது பற்றிய குறு நாவல்.

இப்போது சுவீடனில் சர்வதேச பென் அமைப்பு கிளையின் பொறுப்பில் தங்கியிருக்கிறார். இதுவரை எந்நாட்டிலும் அடைக்கலம் கோரவில்லை. ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூச்சியின் கதை

தஸ்லிமா நஸ்ரீன்

பாதித் தூக்கத்தில் விழித்தேன்

ஆச்சர்யத்தில் நான் பார்த்தேன்
அது பிற ஏவரது விரல்களுமில்லை
அது ஒரு கரப்பான் பூச்சி
எனது தொப்புளை நோக்கி
ஊர்ந்துகொண்டிருந்த அது
மோப்பம் பிடித்தது.

அந்த முதிர் கரும் புண்ணில்
என்ன தித்திப்பு இருக்கிறதோ
எனக்குப் புரியவில்லை.

இந்தப் பூச்சியும் ஓர் ஆணாக
இருக்குமோ?
பசிகொண்ட காமவெறி நாயைப்போல
நாக்கை வேட்கையுடன்
தொங்கப் போட்டுக்கொண்டிருக்கிறதோ?

விஷமுள் எறும்பும்
தொடைகளைக் கடிக்க எனது கால்களின்
மீதேறுகிறது
தொடைகள் ஏதேனும்
இனிப்புக் கரைசலில்
முக்கியெடுக்கப்பட்டிருக்கிறதோ?

யாரறிவார்
இதுவும் ஓர் ஆணாக இருக்கக்கூடும்.
சுவையறிய அதன்
கூர்நகங்களுக்கு அரிப்பெடுத்திருக்கக்கூடும்.

இந்தக் குளவியின் கொடுக்கு
எல்லாவற்றையும் விடுத்து
முலைக்காம்பை நோக்கி வருகிறது

உத்திர இடைவெளியின் பதுங்கலிலிருந்து
பல்லியை
இருளின் கருமை வெளிக் கொணர்கிறது.
தோலின் மெதுமெதுப்பில் அதன்
மடிப்புகளில் அடைக்கலம் தேடுகிறது.

கருப்பையின் பாதைகளில் கறையான்கள்
அரித்துத் தின்கின்றன
வாயிலில் கருமுட்டைகள்
துர்நீர் தெறிக்கிறது

நான் அவற்றை வெளித்தள்ள
முயன்றேன்

ஆயினும் அந்த மயிர்நிறை கம்பளிப் பூச்சிகள்
ருசிக்கும் மணக்கும்
நுழைவாயில் நோக்கி
வேகம்கொண்டோடியது.....



எப்போதைக்கும் ஆண்
நரகம் நோக்கி சந்தோஷத்துடன்
மூச்சிறைப்புடன்
பயணம் போகமாட்டானா?

நான் அதிசயிப்பேன்.

முகங்களிலிருந்து
இரைதேடும் நீலப் பூச்சிகள்
உதடுகளின்
ஓதப் பரப்பில் ஈரம்குடிக்க
வஞ்சகத்துடன் வழிதேடி வரும்.

இவைகள்
ஆண்களல்லாது வேறெதுவாகவாவது
இருக்கமுடியுமா?
இந்தப் படுக்கை மூட்டைப் பூச்சிகள்
என்னை விட்டுத் தொலையுமா?

சதைக்கோள முகடுகளின் பரப்பில்
முடங்கிவிட்டது அது.

கூரான பற்கள்
மென்மையான தசையைக் கிழிக்கின்றன.
தசைப் படிவுகளின்
வேர்கள்தேடி ஆழம் நோக்கி
இறங்குகிறது கூர் பற்கள்
ஆணின் பற்களைப்போன்ற கூர் பற்கள்.

தலைமுறை தலைமுறைச் சிலந்திகள்
யோனிக் குழாய் ஆழம்வரை
குறுக்கு நெடுக்காக
தமது நூலாம்படை வலைகளைப் பின்னியிருக்கிறது.

இந்தப் பின்னல் வலை என்னை
மௌனமான உணர்ச்சிகளின் சேமிப்புக்கிடங்கான
என்னை
வழிமறிக்கிறது

இயற்கையும் கூட
பெண்ணின் உடம்பைத் திட்டமிட்டுத்தான்
வார்த்திருக்கிறது
ஆணின் விருப்பைத் திருப்திப்படுத்தி
ருசிகளை வீசும்படிக்கு.

வங்கமொழியிலிருந்து ஆங்கிலத்தில்: சுதேசனா ரே.
தமிழில்: யமுனா ராஜேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அடுத்த தெரு 'பேராசிரியர் ஜொஹான்சன்' தெரு

இன்னும் மூன்று வாரங்கள்தான் இருக்கின்றன. அறையைக் காலிசெய்யும்படி அறிவித்தல் தந்துவிட்டாள் கிழவி திருமதி ஹறால்ட். மீதமுள்ள மூன்று வாரங்களுள் வேறு அறை வாடகைக்குப் பார்த்தாகவேண்டும். இரண்டு வருடம் குடியிருக்கலாம் என்பதுதான் திருமதி ஹறால்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தம். ஆனால், எட்டு மாதங்களில் அறையை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவிட்டுள்ளாள். குடியிருப்போர் சட்ட திட்டங்களென ஏதேதோவெல்லாம் பிரதி எடுத்து, எந்த ஒழுங்கு மீறலுக்குள் ஒப்பந்தம் ரத்தாகி, வெளியேற்றப்படுகிறார்களென விபரமாய்க் கடிதமும் எழுதி பதிவுத்தபாலில் அனுப்பியிருந்தாள். விபரம் தெரிந்த கிழவி.

கிழவி குறிப்பிட்ட எந்தக் குற்றச்சாட்டும் உண்மையல்ல. இரவில் சத்தமாய்ப் பாடல் ஒலிப்பதற்கான எந்தவித பாட்டுப் பெட்டிகளும் இவர்களிடம் இல்லை. பழைய பொருட்கள் வாங்குமிடம், விற்குமிடத்தில் மூன்று வருடங்களின் முன்னால் ஐம்பது குரோணருக்கு ரமேஷ் வாங்கிய ஒரு சிறு பிலிப்ஸ் ரேடியோ மட்டுமே இவர்களின் பொழுதுபோக்குச் சாதனமாய் இருந்தது. இதிலிருந்து வெளிவரும் ஓசை எட்டடியில் தள்ளி நிற்பவருக்கே கேட்கக்கூடியதல்ல. அடுத்து, கிழமை நாட்களிலும் மதுவருந்திவிட்டு உரத்த சத்தமாய்ப் பேசிக்கொள்கிறார்கள் என்பது. இது இம்மியளவும் உண்மையானதல்ல. ரமேஷ் மது, புகை போன்ற எந்தப் பழக்கமுமற்றவன். கார்த்திகேயன் சிறிதளவாய் அருந்துவான். அதுவும் செறிவு குறைந்த மது. அவன் அறையில் எப்போதுமே குடித்ததில்லை. மாதத்தில் ஒரு தடவை, அல்லது இரண்டு தடவைகள் குடிப்பான் அளவாக, வேறு நண்பர்களிடத்தில் அவர்களுடன். அடுத்தவன் மாதவன். நிறையக் குடிப்பான்; அது முன்பு. அகதி வாழ்வினால் நொந்து, மனம் சலித்து, வாழ்வு கசந்து வேலை கிடையாத ஏக்கத்தில், வீட்டுக்கு பணம் அனுப்பமுடியவில்லை என்ற ஆதங்கத்தில், மூத்த சகோதரிக்கு இன்னமும் திருமணம் செய்துகொடுக்க முடியவில்லையே என்ற கவலையில், இளைய சகோதரியின் படிப்பு பாழாய்ப் போகிறதே என்ற துக்கத்தில், தனக்கு அடுத்த சகோதரன் போர்க் கடலுக்குள் காணாமற் போய்விட்டானென்ற ஏக்கத்தில்... இப்படி அவன், தான் குடிப்பதற்கு நிறைய நியாயமான (?) காரணங்களை கைவசம் வைத்திருந்து குடித்தான். நிறையக் குடித்தான். இது முன்பு. இப்போதல்ல. எல்லாவற்றுக்கும் முழுக்குப் போட்டுவிட்டான். ரமேஷும், கார்த்திகேயனும் இவனை குடிக்கு முழுக்குப் போட வைத்தனர். நாயாய், காகமாய், பேயாய், முனியாய்... இப்படி இருவரும் அலைந்து திரிந்து அவனுக்கோர் பகுதி நேர வேலையை எடுத்துக்கொடுத்தனர். வயிற்றைப் பாதியாய் நனைத்துவிட்டு மிச்சம் பிடித்து வீட்டுக்கு அனுப்புகிறான் சிறு சிறு தொகையை மாதவன் இப்போது. அவனுக்கு மதுவருந்த நேரமுமில்லை, அதற்கு வசதியு மில்லை. முன்பு குடித்ததை நினைத்து இப்போது கவலை கொள்வான். இவனுக்கு வழங்கப்பட்ட அகதிப்படியில் கவலைகளைக் காரணத்திற்கு இழுத்துப்போட்டு குடித்துத் திரிந்த பணத்தை கொஞ்சமேனும் மிச்சம் பிடித்து வீட்டுக்கு அனுப்பியிருக்கலாம். அந்த முட்டாள்தனத்தை நினைக்கும் போது இப்போது தன் மீதே தனக்குக் கோபம் உண்டாகும் அவனுக்கு.



ஆக மொத்தத்தில் திருமதி ஹறால்டின் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு முரணானவை. இது ஆதாரமற்றதென்று மூவருக்குமே தெரியும். ஆனாலும் மேற்கொண்டு இது பற்றி திருமதி ஹறால்டுடன் பேசவோ, குற்றச்சாட்டுக்களை மீளாய்வு செய்து கொள்ளவோ, தொடர்ந்து அவளது அறையில் குடியிருக்கக் கோரவோ அவர்கள் மூவரும் விரும்பவில்லை. ஏனெனில் கிழவிக்கு இப்போது இவர்கள் மூவரும் அறையில் குடியிருப்பது விருப்பத்திற்குரியதல்ல. அதனால் காரணமற்ற குற்றச்சாட்டுக்களை காட்டத் தொடங்கிவிட்டாள். இதற்குப் பின் இங்கு குடியிருப்பதென்பது தொடர்ந்து பிரச்னைகளைத்தான் வளர்க்க ஏதுவாயிருக்கும். எனவே அறையைக் காலிசெய்வதென்ற முடிவுக்கே மூவரும் வந்துவிட்டனர்.

கிழவி நல்லவள். முன்பு இவர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டபோது இவர்களை மிகவும் பிடித்துப் போயிற்று கிழவிக்கு. இவர்கள் ஒவ்வொருவர் கதைகளையும் கேட்டு அனுதாபப்படுவாள். 'இறைவன் படைப்பில் எல்லா இன மனிதர்களும் சமமே' என அடிக்கடி சொல்வாள். 'உங்கள் வாழ்வும், நாடும் சுபீட்சமடைய கர்த்தரைத் தினமும் பிரார்த்திக்கிறேன், இளைய நண்பர்களே' என்பாள். இவர்களுக்கு அறையை வாடகைக்குத் தந்ததால் தான் திருப்தி கொள்வதாக

www.tamilarangam.net

பல தடவைகள் கூறியிருக்கிறாள். கிழவி நல்லவள். கர்த்தருக்குப் பயந்தவள். கர்த்தரின் அனுக்கிரகமே உத்தமம் என்பவள். 'எனது கணவன் இன்னும் பத்து வருடங்களாயினும் உயிருடன் இருந்திருப்பான். ஆனால் கர்த்தர் அவன்மீது மிகவும் விருப்பம் கொண்டதால் தன்னுடன் அழைத்துக் கொண்டார். திடகாத்திரமான எனது கணவனுக்கு கொஞ்சமும் சம்பந்தமற்ற மாரடைப்பு நோயை அனுப்பி என்னிடமிருந்து அவனை அபகரித்துக் கொண்டது தான் கர்த்தரின் வேடிக்கையான செயல். ஆனாலும் எனது கணவன் ஹரால்ட் கர்த்தரின் அருகில் அமர்ந்திருந்து என்னோடு தினமும் பேசிக்கொண்டே இருக்கிறான். கர்த்தரும் அதற்கு அனுமதியளித்திருக்கிறார்.' இவற்றை இவர்களிடம் கிழவி கூறும்போது அவளது விழிகள் பனித்து விடும். ஆயினும் அவளது சுருங்கிய வெண்தோல் முகத்தில் உறுதியின் ரேகைகள் கொடியிடும்.

ஹரால்ட்.

நாஸிகளிடமிருந்து நோர்வேயைக் காப்பாற்றப் போராடிய தேசியப் படையின் போர்வீரன். அப்போது, தான் ஒரு போர்க் காலக் குமரியெனவும், தமது கிராமத்துக்குள் முகாமிட்டிருந்த ஹரால்ட் படைப்பிரிவினருக்கு காலையிலும், மாலையிலும் தனது தந்தையாரின் பண்ணையிலிருந்தே பசும்பால் வழங்கப்பட்டதாகவும், பால் கொடுக்கச் செல்லும் போதே தமக்குள் காதல் விளைந்ததாகவும்... இன்னும் தங்கள் காதல் அனுபவங்களை சுவைபட இவர்கள் மூவரோடும் பகிர்ந்து கொண்டிருக்கிறாள் கிழவி. இப்போது என்னவாயிற்று கிழவி திருமதி ஹரால்டுக்கு? ஏனிந்த ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கள்...?

ஸ்தெய்ன்.

பக்கத்துத் தெருவான 'பேராசிரியர் ஜொஹான்சன்' தெருவில் குடியிருக்கும் கிழவன். அவனது குறுகிய உருவத்தின் கூர்ந்த, சிரிக்கத் தெரியாத முகத்துக்கு சற்றும் பொருத்தமற்ற பெரிய மூக்கும், கட்குழிகளுக்குள் விகாரத்தை விதைத்தபடி தூரக் கிடக்கும் நீல விழிகளும் பார்ப்போரை 'வஞ்சம் நிறைந்த கிழவனிவன்' என்ற முடிவுக்கே வரச் செய்யும். அந்த வஞ்சகக் கிழவன் ஸ்தெய்ன், கொஞ்சக் காலமாக வந்து கிழவி திருமதி ஹரால்டுடன் எதையோ இரகசியமாகப் பேசிவிட்டுப் போவதை இவர்கள் மூவரும் கவனிக்கத் தவறவில்லை. அந்தக் கிழவனின் வருகைக்குப் பின்பே திருமதி ஹரால்டின் மனம் மாறியிருக்கிறது. அந்தக் குள்ளக் கிழவன்தான் கிழவியைக் குழப்பியிருக்கிறான்; இதுதான் உண்மை. இன்னும் இரண்டு வாரங்கள்தான் பாக்கியிருக்கின்றன. அதற்குள் வேறு அறை வாடகைக்கு எடுத்தாகவேண்டும். மூவரும் மூன்று பக்கத்தால் முயற்சித்தும் முடியவில்லை. தினப் பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களில் கண்களுக்குத் தென்படும் 'வீடு வாடகைக்கு' என்பவற்றையெல்லாம் மேய்ந்து முயற்சித்துவிட்டனர். 'வீடு பார்க்க வா' என முகவரியையும் கொடுத்துவிட்டு, நேரிற் போனபின் 'இல்லை, போகலாம்' என முகத்தைச் சுழித்தபடி - முகத்திலடித்தாற்போல் கூறுகிறார்கள். அவர்களது முகம் 'கறுப்பு' என மௌன மொழி பேசி அருவருப்பை அனுபவிக்கிறது. 'கறுப்பு' என்ற வார்த்தையின்பால் ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடே 'போ வெளியே...' எனும் மனித நாகரீகம் மறந்து உதடுகளால் விதைக்கப்படும் வார்த்தைகள்.

கள்ளத் தோணிகளிலும், இரவல் கடவுச் சீட்டுகளில் பொய்யான முகங்களுடனும் கடல்களையும், சமுத்திரங்களையும், மலைகளையும், முகில்களையும், நாடுகளையும், கண்டங்களையும் தாண்டி இந்த இயந்திரத்தனமான வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கும் ஐரோப்பியப் புலத்துக்கு வந்து சேர்ந்ததைவிடவும்; தன் சொந்த மக்களுக்கே வேலை இல்லை எனக் கையை விரிக்கும் இந்தத் தேசத்தில் வேலைதேடி அலைந்து பெற்றதை விடவும்; மிகவும் கடினமானதாகப் போயிற்று இப்போ இவர்கள் ஒரு அறையை வாடகைக்கு எடுப்பது.

ஒரு வாரம் மட்டுமே உண்டு.

அறையொன்று எடுத்தாயிற்று. பல பிரயத்தனங்களின் பின் ஒரு நிலவறை. மூவருக்கும் அது போதியதல்லத்தான். ஆயினும் இப்போது இந்த நிலவறை இவர்களுக்கு சுவர்க்கமாய்த் தெரிந்தது. பாகிஸ்தானியன் ஒருவனின் இறக்குமதிப் பொருள்கள் விற்பனை அங்காடியொன்றின்கீழ் அமைந்துள்ள சிறிய நிலவறை.



"அவன் உண்மையிலேயே நரகத்தில் வெந்து தான் போவான்."
"கர்த்தருக்கருகில் அமர்ந்திருக்கும் எனது கணவனிடமும் நான் சொல்லி வைத்திருக்கிறேன் அவனைத் தண்டிக்கும்படி"

குளிர் காலங்களில் மனிதன் விறைத்துப்போகமாட்டான் என்பதற்கு எந்த உத்தரவாதமுமே அற்ற நிலவறை. கோடை காலங்களில் தெருப் புளுதி சன்னல் வெளிகளால் படையெடுத்து உட்புகாதென்ற உத்தரவாதமற்ற நிலவறை. ஒன்றுமே செய்யமுடியாது. எப்படியாவது சமாளித்துத்தான் ஆகவேண்டும். இதனையும் விட்டால் வேறு வழியே இல்லை. இன்று ஒப்பந்தம் எழுதுவதற்காக அந்த நிலவறையின் உரிமையாளனான பாகிஸ்தானியனைச் சென்று சந்திக்க வேண்டும். அவனைச் சந்திக்க நேரமும் வாங்கியாயிற்று. மாலை மூன்று முப்பது, அவனது அங்காடியில்.

மூன்று பதினைந்து. மூவரும் புறப்பட்டனர்.

'மூவர் குடியிருக்கப்போகிறீர்களா.....' பாகிஸ்தானியன் புருவங்கள் விரியக் கேட்டான்.

'ஆமாம்' - ரமேஷ்.

'இதனை முதலில் ஏன் சொல்லவில்லை...'

'சொல்லவில்லைத்தான். அதற்கென்ன இப்போ? நிலவறைக்குரிய மாதாந்த வாடகை தருவோம்தானே?' - ரமேஷ் சாந்தமாகவே பதிலுரைத்தான்.

'நான் முதலில் குறிப்பிட்ட வாடகை ஒருவருக்கு மட்டுமே... இப்போது மூவர் வந்து நிற்கிறீர்கள். எனவே... ' மூவரின் முகங்களையும் ஏறெடுத்துப் பார்த்தான் பாகிஸ்தானியன் அவர்கள் நிலை அறிவதற்காய்.

'எனவே... ?'

புதிய கதை அளக்கப்போகிறானோ என்ற அச்சம் ரமேஷின் கண்களைக் கவ்விக்கொண்டது.

'வாடகையின் தொகை அதிகமாகும்.' தனக்கு முன்னால் கிடந்த பேனாவால் ஏதோ தாறுமாறான கோடுகளைக் கிறுக்கியபடி சொன்னான் பாகிஸ்தானியன்.

'எவ்வளவு?' ரமேஷ் நிதானமாகவும், அதேவேளை அவன் போடப்போகும் குண்டை எண்ணி அஞ்சியவனாகவும் கேட்டான். ஏற்கனவே அவன் கேட்டிருந்த முற்பணத்துக்கே என்ன செய்வதென்று தெரியாமல் மூவரும் அங்கு கொஞ்சம், இங்கு கொஞ்சமென கடன் கேட்டிருந்தனர். இப்போது இவன் பெரிய தொகையைக் கேட்பானானால் எங்கு போவது?

'மாதம் இரண்டாயிரம் குரோணர்கள் என முன்பு கூறியிருந்தேன்... மூவருக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகில் ஆறாயிரம் நான் அறவிட வேண்டும். நான் நீதியானவன். நீங்கள் ஐயாயிரம் தந்தால் போதும். அத்தோடு...' நிறுத்தி அவர்கள் மூவரையும் நோக்கினான்.

'அத்தோடு... ?' - ரமேஷ்.

'இரண்டு மாதகால வாடகை முற்பணம் கேட்டிருந்தேனல்லவா...' - பாகிஸ்தானியன்.

'ஆமாம்... ?' - ரமேஷ்.

நான்கு மாதகால வாடகை முற்பணம் கொடுக்கவேண்டும்' - பாகிஸ்தானியன்.

'அதாவது, ஐயாயிரம் மேனிக்கு நான்கு மாதம்... ?' கோபம் முகத்தால் பீறிட கேட்டான் கார்த்திகேயன்.

'ஆமாம்' நிதானமாகவே பதிலிறுத்தான் பாகிஸ்தானியன்.

'இப்போது ஒன்று மட்டும் புரிகிறது நண்பா. உன்போன்றவர்களாலேயே மொத்த வெளிநாட்டுக்காரர்களையும் நோர்வீஜியர்கள் வெறுக்கிறார்களென்பதை புரிந்துகொண்டோம் நண்பா' - இதுவரை எதுவுமே பேசாதிருந்த மாதவன் தனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கூறினான்.

'இப்போது உங்கள் முடிவுதான் எனக்குத் தேவை.. ?' மூவரையும் கேட்டான்.

'நாங்கள் போய் சிறிது யோசித்து விட்டு மீண்டும் வருகிறோம்' - ரமேஷ் கூறினான். அவன் கூறியபோது 'ஏற்கனவே நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம்' என்ற அர்த்தம் வெளிப்பட்டது.

'வரவில்லையெனில்... ?' அர்த்தம் விளங்கியவன்போல் கேட்டான்.

'எமக்கு வேண்டாமென்று அர்த்தம்; புரியவில்லையா?' மாதவனின் பதிலில் கோபத்தின் சூடு தெரிந்தது.

அறையில் மூவரும். வழியில் வாங்கி வந்த தினப் பத்திரிகையை விரித்து, ரமேஷ் வாடகை வீடு தேடி விளம்பரப் பகுதியில் விளிகளை வேட்டையாட விட்டான் வென்று வாருங்களென்று. கார்த்திகேயன் தேநீர் தயாரிப்பதில் மும்முரமானான். மாதவன் வீட்டிலிருந்து வந்த நீலத் தபாலுறையைப் பிரித்துப் படிக்கலானான். மூத்த சகோதரியின் எழுத்துக்களில் பஞ்சத்தின் வரிகளும், போரின் கொடுமைகளும் கொடும் சவுக்கைச் சுமந்துகொண்டு நின்றன.

வாசல் அழைப்பு மணி ஒலித்தது. ரமேஷ் சென்று கதவைத் திறந்தான். திருமதி ஹரால்ட். சில நாட்களாக மறைக்கப்பட்டிருந்த அவளது வஞ்சமற்ற புன்னகையை பழுப்பு நிற பற்கள் சிந்தின. 'உள்ளே வர அனுமதியுண்டா தோழா?' கேட்டாள் கிழவி.

'உனது சொந்த அறைதானே... ? யார் மறுப்புக்கூற முடியும்?' கூறியபடி வழிவிட்டான் ரமேஷ். கிழவி உள்ளே வந்து சோபாவில் அமர்ந்து கொண்டாள். அவளெதிரே மூவரும். கார்த்திகேயன் தயாரித்த தேநீரை அருந்தியபடி 'என் இனிய தோழர்களே, என்னை முதலில் மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களை மிகவும் சஞ்சலப்பட வைத்துவிட்டேன். என்னைப்பற்றி நீங்கள் தவறாகவும் எண்ணும்படி செய்துவிட்டேன். எல்லாம் அவன் ஸ்தேய்ன் புரிந்த காரியம். என்னை அவன் மிகவும் குழப்பிவிட்டான். உங்களுக்கெதிராக செயற்படும்படி செய்துவிட்டான். அவனைக் கர்த்தர் மன்னிக்கவேமாட்டார்.'

சிறிது அமைதியானாள் கிழவி. தேநீரில் கொஞ்சம் அருந்திவிட்டுத் தொடர்ந்தாள் 'நீங்கள் தினமொரு பெண்ணுடன் சுற்றுவதாகவும், போதைப் பொருட்கள் பாவிப்பதாகவும், நோய் காவிகள் என்றும், உங்களைப் போன்றோரால்தான் இந்த நாட்டில் குற்றச் செயல்கள் பெருக்கமடைவதாவும் பல அபாண்டங்களைச் சொல்லி என்னை உங்களுக்கெதிராக அந்த ஸ்தெய்ன் செயற்படும்படி வைத்துவிட்டான். உங்களை எப்டி இந்த அறையை விட்டு வெளியேற்றுவதென்ற ஆலோசனைகளையும் அவனே தேடித் தந்தான். அவனது போக்கில் எடுபட்டுப் போன நானும் ஒரு முட்டாள் என்பதை நான் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.' அவளின் விழிகள் பனித்தன. மூவருக்கும் என்ன செய்வதென்று புயாமலிருந்தது. திருமதி ஹரால்ட் தொடர்ந்தாள்: 'இப்போதுதான் கேள்விப்பட்டேன் அந்த சாத்தானின் மகன் ஸ்தெய்ன், புதிய நாஸிகளின் ஆதரவாளனென்று. அவன் உண்மையிலேயே நரகத்தில் வெந்துதான் போவான். நாஸிப்படை இந்த மண்ணையும், மக்களையும் வாதைக்குள்ளாக்கி, குருதி கறந்த கலந்த காலத்தை மறந்துவிட்டான். இப்போது என் இதயம் நடுங்குகிறது அந்தக் கொடூரம் வியாபித்த காலங்களை நினைத்து. எனது இதயம் நொந்து சபிக்கிறேன் அவனை. கர்த்தருக்கருகில் அமர்ந்திருக்கும் எனது கணவனிடமும் நான் சொல்லி வைத்திருக்கிறேன் அவனைத் தண்டிக்கும்படி.'

கிழவியின் விழிகள் குருதியாய்ச் சிவந்திருந்தன. அத்தனையும் கோபத்தின் பிரசவம். தொடர்ந்தாள் 'என் இளைய தோழர்களே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.'

தேநீர் அருந்தி முடித்த கிழவியின் வெற்றுக் கோப்பையை நிறைக்க முனைவது போல் அவளது விழிகள் நீரைச் சொரிந்தன. இவர்களுக்கும் விழிகள் கசியத் தொடங்கின. 'தோழி, இன்று நீ எங்களோடு விருந்துண்டுதான் போகவேண்டும்; மறுப்பில்லை. எமது உணவு சாதாரணமானதுதான். ஆனாலும் நீ மறுக்கக் கூடாது.'

கிழவி கண்ணீரைத் துடைத்தபடி, முயற்சியெடுத்துப் புன்னகைத்துக் கொண்டு தலையை அசைத்துச் சம்மதித்தாள். 'ஆனால் நண்பர்களே, நீங்கள் எனக்காகக் காரத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டாம். நீங்கள் இங்கு குடிவந்த பின் எனக்கும் காரம் பழக்கப்பட்டு விட்டது. எனவே நீங்கள் வழமையாகத் தயாரிக்கும் உணவாகவே இருக்கட்டும்.'

நால்வரின் சிரிப்பொலியும் அந்த அறையைக் கவிந்துகொண்டது. திறந்திருந்த சன்னல் துவாரத்தால் அவர்களின் சிரிப்பின் நெடில் 'பேராசிரியர் ஜொஹான்சன்' தெருவையும் சென்று தொட்டது. நிறவாதம் நிறைந்த ஸ்தெய்ன் கன்னங்களில் படார் படாரென அவர்களது சிரிப்பொலி அறைந்திருக்கும். ❑


VINNEY VIGNES

CERTIFIED ACCOUNTANTS &
REGISTERED AUDITORS

COMPLETE ACCOUNTANCY AND TAXATION SERVICES

84 Ilford Lane
Ilford, Essex IG1 2LA

Tel: 081-553 5876 Fax: 081-553 3721
Mobile: 0956 277112




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கமல் ஹாசனின் 'நம்மவரும்' தமிழ் சினிமா மொழியும்

ரோஸா




தேவர் மகன், மகாநதி போன்ற படங்களின் பின்னர், கமல் ஹாசன் நடித்து வெளிவந்திருக்கும் படம் 'நம்மவர்.'

சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் கமல் ஹாசன், பாலு மகேந்திரா, மகேந்திரன் (உதிரிப் பூக்கள், மெட்டி) போன்றோர் இனி நல்ல படங்களையே தாங்கள் தரப் போவதாகச் சொல்லியிருந்தார்கள். அது, 'நம்மவரி'ல் கொஞ்சம் தடம் பதித்திருக்கிறது.

இயக்குநர் சேது மாதவன் மலையாளப் படங்களின் இயக்குநர். தமிழில், மறுபக்கம் (இந்திரா பார்த்தசாரதி) படத்தின் இயக்குநரும் இவர்தான். கமல் ஹாசன் நடித்த கன்யாகுமரி இவரது மற்றொரு மலையாள படம்.

இந்திய திரைப்பட விழாவுக்கு கல்கத்தா சென்று வந்த லண்டன் கார்டியன் பத்திரிகையின் விமர்சகர் டெரக் ஜார்மன் இந்தியப் படங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'இந்தியர் கள் இன்னும் கலைப் படம், வியாபாரப்படம் எனும் புதிரான சிக்கலான - அவசியமில் லாத பிரச்னைகளில் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லியிருந்தார்.

இது உண்மைதான்; நல்ல படம், கெட்ட படம் என்று தான் உண்டு. நல்ல படங்கள் தீவிர மாகப் பிரச்னையைச் சொல்லும். புரிதலுடன் புரியும்படி சொல்லும். கெட்ட படம் கதம் பமாக, மசாலாவாக, எரிச்சலூட்டும் படி பொய்மைகளாக நிறுத்தப் பட்டிருக்கும். இந்தப் புதிய அணுகுமுறையுடன் கோவிந் நிஹ்லானி, சேது மாதவன், பரதன், பாலு மகேந்திரா வழியில் கமல்ஹாசன் கொடுத்திருக்கும் இன்னொரு படம் தான் நம்மவர்.

நம்மவர் கதை இதுதான்:

சாராய வியாபாரியால் நடாத்தப்படும், அவர் மகன் படிக்கும் கல்லூரிக்கு துணை அதிபராக வருகிறார் சரித்திரப் பேராசிரியரான கமல் ஹாசன்.

சமூகப் பிரக்ஞையுள்ள ஆண், பெண் பேதம் மறுத்த மாணவர் நலனில் அக்கறையுள்ள பேராசிரியர். ஈடுபாடற்ற கல்வி முறையின் கற்பித்தல் பற்றி ஆண் பெண் பேதம் கல்லூரி தொடக்கம் வளர்க்கப்படுவது பற்றி - பேசும் இவர், மாணவர்களின் வன்முறைசார் நெறி யற்ற போதைவஸ்து பழக்கம் போன்ற வற்றை தனிநபர் மனோவியல் அடிப்படையில் புரிந்து கொள்ள முனைகிறார். அன்பு செலுத்துவதன் மூலம் - அவர்கள் வழியிலேயே எதிர்கொள்வதன் மூலம் கல்லூரியை ஆக்க பூர்வமாக மாற்ற முனைகிறார்.

இதில் எழும் பிரச்னைகள்தான் சொல்லப்படுகிறது. இது ஒரு வகையில் இலட்சியவாத - எம். ஜி. ஆர். மரபில் உருவான படம்தான். ஆயினும், இந்த இலட்சியவாதம் கனவு தவிர்ந்த (எம். ஜி. ஆர். படங்களில் இக் கனவம்சம், பிரமை, நாயக வழிபாடு முக்கியம்) இயல்பான மனிதர்களுடன் - சம்பவங்களுடன் சொல்ல முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு, கனவு சார்ந்த தமிழ் சினிமா மொழியில் - நவரச உணர்ச்சி சார்ந்த தமிழ் சினிமா மொழியில் - இட்டுக் கட்டப்பட்ட சோகம், காதல் காட்சிகள் இறுகிய, தமிழ் சினிமா மரபு மொழியில் - புதிய விடயங்களைச் சொல்லப் புறப்படும் போது ஏற்படும் சிக்கல்களை படம் சந்திக்கிறது.

உதாரணமாக, கமல்ஹாசன் படத்தில் புற்று நோயாளி. இப் புற்றுநோய் சமாச்சாரத்தை இவர் சகோதரி (ஸ்ரீவித்யா), காதலி (கௌதமி), மருத்துவ உலகம் சார்ந்தோர் சாதாரணமானதாக இயல்பானதாக, நோயை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால், தமிழ் சினிமா மரபு மொழியில் - சிந்தனைக் கட்டமைப்பில் - அது அவ்வாறு இல்லை. புற்றுநோய் வந்தவர் மூக்கில் இரத்தம் வரும். கீழே வீழ்ந்து தவழ்ந்து தவழ்ந்து இறந்துபோவார். இறக்கும் காட்சியில் முகம் வியர்த்துக் கொட்ட, பத்து நிமிடங்கள் பார்வையாளனுக்கு நாயகன் சோக ரசம் தருவார்.

புற்றுநோய் பிரச்னையைப் படம் எதிர்கொள்கிறபோது, இந்த மரபு ரீதியான மொழிக்கும், இயல்பான பாத்திரங்கள் ஏற்றுக்கொள்ளலுக்குமிடையில் புதிய மொழி சிக்கித் தவிக்கிறது.

புற்றுநோய் பற்றி செந்தில், கௌதமி உரையாடலும், அதே புற்றுநோய் பற்றி ஸ்ரீவித்யா, கமல்ஹாசம், கௌதமி உரையாடலும் ஒரே தளத்தில் இணைந்து கொள்ள மறுக்கின்றன.

இதையும் மீறி, மிக நல்ல குறிப்பிடத்தக்க இயல்பான காட்சிகள் இப்படத்தில் உண்டு. மனிதனுக்கு மனிதன் உதவ நினைப் பது பரிதாபத்தினாலல்ல; மானுட நேயத்தால் என கமலஹாசனுக்கும் கௌதமிக்கும் இடையிலான உரையாடல் காட்சி இயல்பானது.

நாகேஷின் மகன் தற்கொலை செய்த பின் வரும் காட்சி இயல்பானது.

ரவுடித்தனம் புரியும் மாணவர்கள், சாராய வியாபாரிகள் தொடர்பாக வரும் காட்சிகள் தமிழ் வில்லத்தனமானது.

மரபார்ந்த தமிழ் சினிமா மொழிக்கும், புதிய விடயங்களைச் சொல்ல விளையும் இயக்குநரின் மொழிக்கும் இடையிலான தர்க்கமின்மையை பல்வேறு இடங்களில் சந்திக்க முடிகிறது.

கௌதமி பாத்திரம், நாகேஷின் பாத்திரம் இதில் வலுவானது. செந்தில் (கமல் ஹாசனின் வேலைக்காரர்) எவ்வாறு Inter Colleagiate போட்டியில் மேடையில் தோன்ற முடியும் என்பதெல்லாம் வழமையான நகைப்புக்குரியது.

அனாவசியமான melodrama களை படம் முழுக்கச் சொல்லவில்லை. கனவுக் காட்சிகள் இல்லை. புற்றுநோய் நாயகன் சோகமாக வசனம் பேசவில்லை.

புற்றுநோய்க்கான சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்கான பயண வழியனுப்பலுடன் படம் முடிகிறது. மருத்துவர்களைக் கலந்து பேசுவோம்.

தமிழ் சினிமா தனது புதிய மொழியை தனது முரண்பாடுகளிலிருந்து கண்டு பிடிக்கும். 'நம்மவரி'ல் அறகான முயற்சி இருக்கிறது என்பதை நிச்சயமாக சொல்ல முடியும். ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் விமர்சனம்

# எழுத்தாளனின் வல்லமை

— ஸ்ரீதரன்




| | |
|---|---|
| நூல்: | உள்மன யாத்திரை |
| ஆசிரியர்: | உமா வரதராஜன் |
| வெளியீடு: | வியூகம் |
| விலை: | ரூபா 25 |

ஊர்விட்டு வந்து பதினேழு வருடங்களாகிவிட்டது. ஊர் ஞாபகங்கள் தேய்ந்தேபோய்விட்டன. நான் இறந்துபோனது நிச்சயமே என்ற நம்பிக்கை மேலோங்கி, என் சவக்கிடங்கிலிருந்து எப்போதாவது எழுந்து வீழ்வதும், பரிச்சயமாகிப்போன நேரத்தில், நண்பர் பத்மநாபனால் அனுப்பப்பட்ட 'உள்மன யாத்திரை' கிடைத்தது. உமா வரதராஜன் கதை ஒன்றை நான் படித்து 'நன்றாக இருக்கிறது' என்று சொன்னவுடனேயே உள்மன யாத்திரையின் பிரதி ஒன்று அனுப்பினார். ஒட்டுமொத்தமாகப் படிக்கும்போது ஒரு புதிய அனுபவந்தான். விமர்சிக்க முடியுமா என்று கேட்டபோது, 'இந்தியா டுடே'யின் *1994-1995* இலக்கிய ஆண்டு மலரில் வந்த 'அரசனின் வருகை'யையும் வாசித்திருந்த நேரம். தொடர்ந்து, நாழிகை ஜுலை **94** இதழில் வந்த ஜெய மோகனின் ஈழத்துப் படைப்புகள் பற்றிய விமர்சனத்தில், உமா வரதராஜனின் படைப்பைத் தனியே எடுத்து முதலில் சிலாகித்து, பின்னர் திட்டவட்டமான கலாச்சார அடையாளம் இல்லாததனால் பல்வேறு தளங்களை நோக்கி அக்கதை விரிவு பெறவில்லை என்றும், சுய அனுபவத்தின் சாரமில்லை என்றும் வாசித்தபோது மனக்குறை உண்டாயிற்று. குறிப்புக் கதைகள் எழுதியவன் என்றதனாலும், எழுத்தாளன் என்றவுடனேயே விமர்சகனின் எந்தப் பைத்திய உதைப்புக்கும் ஆயத்தமாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை நன்றாகவே உணர்ந்தவனாதலினாலும் ஜெய மோகனுடைய கூட்டையகலாத்தனத்தை எண்ணி வருத்தப்படவேண்டியதாயிற்று.

மனிதனின் படைப்பு இயல்புகளைப் பற்றி விவாதிக்கும்போது, ஹசவாரச முடிநளவடநச இலக்கியப் படைப்புகளைப் பற்றியும் எழுதினார். பல்வேறு கதைகளும் தரப்பட்ட மனச்சிக்கல்களைப் (complexes) பற்றியே என்றும், புதுப் புதுச் சூழல்களில் அவற்றின் தன்மையை இலக்கியகாரர்கள் கொண்டு வருகிறார்கள் என்றும் வாதித்து இருக்கிறார். மேலோட்டமாகப் பார்த்தால் ஜெய மோகனுடைய வாதத்துக்கு இது உறுதுணையாக இருக்கும். இதன் மறுபக்கத்தைப் பார்த்தால், நேர கலாச்சார சூழல்கள் இல்லாமல் கதை சொல்லவே முடியாதா என்று கேட்கத் தோன்றும். குறிப்புக் கதைகள் இந்த மனித நெருக்கடியைத் தாண்ட முயல்கின்றன. இதை ரசியுங்கள் என்று சொல்லமுடியாது. இக்கதைகளை உணர்வதற்கு கூட்டையகலும் தன்மை வேண்டும். முடியாவிட்டால் விமர்சனம் செய்யத் தயங்கவாவதுவேண்டும்.

இந்த எரிச்சலும் மனக் குறையும் அடங்காமல் இருந்தபோதே உள்மன யாத்திரை கிடைத்தது. வாசகனுக்கும் எழுத்தாளனுக்கும் நடுவிலே நின்று விமர்சிக்க யாருக்கு உரிமை இருக்கிறது?

குறிப்புக்கதைகளல்லாமல் குறிப்பான கதைகள். அது முடியாமல் இதைச் செய்ய வரவில்லை என்கிற மாதிரியான, மனதைத் தொடும் கதைகள். 'விளிம்பு'வரை வாசித்திருந்தபோது நீல பத்மநாபனின் கதைகள் ஞாபகத்துக்கு வந்தன. மனித ஆத்மாவின் தவிப்புகளைப் பிரகடனப்படுத்தும் பாங்கில். ஒப்புமை தவறானதென்றால் என் ஞாபகசக்தி தேய்ந்து போய்க் கொண்டிருப்பதையே காரணங்காட்ட வேண்டும். எழுத்தாளனின் வல்லமை மனிதர்களை நெருங்கியும் அணுகுவதுந்தான் என்று நான் முன்னர் நம்பியதுண்டு. அணுகுவதென்ன, உள்மன யாத்திரையும் கூடுமானது என்று நிரூபித்திருக்கிறார் உமா வரதராஜன்.

அவர் விபரிக்கின்ற சூழல்கள் எனக்குப் பரிச்சயமானவைதான். என்னை அங்கு அழைத்துச் சென்றதோடு அன்றி,

> நாழிகை ஜுலை 94 இதழில் வந்த ஜெய மோகனின் ஈழத்துப் படைப்புகள் பற்றிய விமர்சனத்தில், உமா வரதராஜனின் படைப் பைத் தனியே எடுத்து முதலில் சிலாகித்து. பின்னர் திட்டவட்டமான கலாச்சார அடையாளம் இல்லாததனால் பல்வேறு தளங்களை நோக்கி அக்கதை விரிவு பெறவில்லை என்றும். சுய அனுபவத்தின் சார மில்லை என்றும் வாசித்தபோது மனக்குறை உண்டாயிற்று.

இங்கு வந்ததற்குப் பிறகு அங்கே நடப்பவையையும் பின்னணியில் பார்க்கக்கூடியதான அனுபவம், முன்னணியில் நடப்பதுடன் ஒட்டிக் கிடைத்தது. இந்த மாதிரியான முழு அனுபவத்தைத் தருகிற வன்மை வெறும் எழுத்தாற்றலால் மட்டும் முடியாது.

கதைகள் 'எழும்புவதற்கு' ஆதர்ச புருஷர்கள் கட்டாயம் வேண்டும் என்பது நியதியாக இருந்ததுண்டு. எழுத்தில் பிரபலமானவர்களை அறிந்திருந்தவர்கள் இந்த நியதியை மறுத்ததில்லை.

ஆதர்ச புருஷர்களில்லாமலும் கதையை நிறுத்தி நிலைநாட்டுவதின் கஷ்டத்தை மிக இலகுவாகக் கையாள்கிறார் வரதராஜன். 'சின்னஞ்சிறிய சிறகுகளில்' வரும் பத்மநாபனின் சமூகப் பிரக்ஞையை வைத்துப் பார்த்தால் அவன் ஆதர்ச புருஷனாயிருக்கலாம். இயற்கையில் பார்த்தால் எத்தனை ஆதர்ச புருஷர்கள்? 'முகங்களில்' வரும் சார்ஜன்ட் ஜயசேகராவிடம் ஒருசில விசேட குணங்கள் மட்டுமே உண்டு. மனிதக் கும்பலில் ஆதர்ச புருஷர்களின் பங்கு வீதம் அவர் கதைகளிலும் தெரிகின்றன. ஆதர்ச புருஷர்கள் கதைகளிலிருந்து இல்லாமல் போனது சரித்திர ஓட்டமா? அல்லது, உமா வரதராஜனின் புரட்சியா? வரதராஜனின் உண்மைக் கலை ஒருபக்கம்; அவர் ஆற்றல் மற்றப் பக்கம்.

எது எதை வென்றதைப் பொறுத்ததே இதற்கு விடை. 'ஜெனி'யை வாசித்தபோது இது உறுதியாகப் போனது - மிகமிக உண்மையான வாழ்க்கையில், ஆதர்ச ஆத்மாக்கள் நாங்கள் நெடுகவே அறிந்த கதைகளில் வருவது போலில்லை - வாழ்க்கை நெருக்கடியில் மனிதனின் பௌதீக நிலையைத் தாண்டவொண்ணாமையைத் தாண்டுகிற முயற்சியில் எப் போதுமிருக்கிறார்கள்.

'பள்ளிக் காலத்தில் ஓடும் அந்த ஜெனியை நான் நினைத்துப் பார்த்தேன். மைதானத்தின் ஆரவாரம் அவளை ஒரு காலத்தில் ஓட வைத்தது. இப்போதும் ஓடுகிறாள். வாழ்வின் துன்பங்கள் அவளைத் துரத்துகின்றன. அளுக்கு ஏதோ வகையில் ஆறுதல் சொல்லவேண்டும்போல் எனக்குத் தோன்றியது. ஆனால் அவளுக்காக உள்ளுக்குள் அழுதுவடியும் என் மௌனத்தின் மேன்மையை வெறும் வார்த்தைகள் கொச்சைப்படுத்திவிடுமோ என்று எனக்குப் புரியவில்லை.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பள்ளிக்கூட நாட்களில் பிறந்த தொடர் பிற்குப் பத்து வருஷங்கள் பின்னர் ஆத்ம தவிப்புகளை அறியும்போதே மனிதர்கள் ஆத்ம புருஷர்களாகிறார்கள்.

கடைசியாக 'அப்பா இல்லாத ஊரில்' வாசிக்க முடிந்தது. எங்களில் பலரும் வடக்கையும் கிழக்கையும் கொழும்பையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறோம் என்று நம்புகிறார்கள். பலருக்கு மலையகமே வேறு உலகம். இந்த முழு நம்பிக்கை யின் அத்திவாரத்தில் தங்கள் அரசியல், உலக நோக்குகளைக் கட்டியெழுப்பிக் கொள்கிறார்கள். எங்களிற் பல எழுத்தாளர்களுமே இந்தப் போக்குக்கு உட்பட்டதுண்டு. கடல் கடந்து உறவு கொண்டவர்களையும், பல்வேறு விதங்களால் சமூகப் பரம்பலின் எல்லையில் தள்ளப்பட்டவர்களையும் தெரியாமல் வாழ்வு நடத்திக் கொண்டு இருக்கிறோம். எங்கள் சமூகப் பரம்பல்களின் வித்தியாசங்களையும் நிறங்களையும் முழுதாக அறிந்ததில்லை. ஆனால், வித்தியாசப்படுத்தியிருக்கிறோம் - சாதி, பணம் இம்மாதிரியான அளவு கோல்கள் கொண்டு. ஒன்றிணைக்கும் மனிதத்துவம் தப்பியே போய்விடுகிறது.

'அடிக்கடி வந்து போகணும்பா' என்கிறார்கள் சித்தப்பாவும் அண்ணனும். ஆம் என்று சொல்லிக் கொண்டாலும் அதற்குப் பிறகு இந்தப் பக்கம் வரப்போவதில்லை என்ற எண்ணம் உள்ளுக்குள் பதிந்துபோயிருந்தது. பஸ்ஸின் வெளிச்சப் பொட்டு தூரத்தே தெரிந்தது. அப்பாவைக் காணாமலேயே, அவரைச் சிறை மீட்க முடியாமலேயே இவன் ஊர் திரும்பினான்.'

சிலோன், ஈழம், தமிழ்நாடு, சிங்களவன், தமிழன் இவ்வாறு பிரித்த பிரிப்புகளின் ஆதிக்கமா அல்லது நாற்பது வயது அம்மாவைப்பற்றி ஐம்பத்தைந்து வயது அண்ணன் விசாரிப்பதன் வருத்தமா? வாழ்க்கையோட்டத்தில் பிரிவதைத் தவிர மிக மெய்யானது எதுவுமில்லை என்ற உணர்வா? தன்னைச் சௌகரியமாக வளர்த்த தந்தையின் ஞாபகங்களுக்கு வெறும் எதிரொலியாக இருக்கிற அண்ணனும் சித்தப்பாவும் தன் தந்தையாக முடியாது என்ற முடிவா? தந்தையைச் சிறைமீட்க முடியாததனால் அதுவாகத் தான் இருக்க முடியும்? ஏ அரசியல் வாதிகளே, எங்கே இருக்கிறீர்கள்? எந்தக் கதை ஆய்வும் அது என்ன 'இஸத்தில்' சேர்ந்ததென்பதை ஆராய்வதே வழக்கமாகிவிட்டது. உமா வரதராஜன் கதைகள் என்ன தோற்றம் காட்டுகின்றன? இந்தக் கதைகளில் ஒன்றிப் போன என்னால் இந்த விவகாரத்தில் இறங்கமுடியாது. இதற்கென்றே நிறையப் பேர் இருக் கிறார்கள்.

குறைகள்? நாங்கள் அறிந்த கதைத் தனம் குறைவாக இருக்கிறது - உண்மை வாழ்க்கையை மெய்யாகச் சொல்லப்போனபடியினால். ❑



இண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் தெற்கு லண்டன் குறொய்டனில் ஆரம்பிக்கப்பட்ட 'கலாபவனம்' நுண்கலை மையம், அதன் குறுகிய காலத்துள் பல குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ளது. அந்த வரிசையில், லண்டனின் முன்னணி கருநாடக இசைக் கலைஞர்கள் பலரை ஒன்று சேர்த்து, அண்மையில் அபூர்வமான ஒரு நிகழ்ச்சியாக முத்துஸ்வாமி தீக்ஷிதர் தினத்தை ஏற்பாடுசெய்திருந்தது.

சரஸ்வதி பாக்கியராசா, நாகேஸ்வரி பிரம்மானந்தா, மாதினி சிறீஸ்கந்தராசா, சிவசக்தி சிவனேசன், மனோரமா பிரசாத் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தீக்ஷிதரின் நவக்கிரக, நவாவரணக் கீர்த்தனைகளைப் பாடினார்கள்.

ஒரே மேடையில் இவர்கள் எல்லோரையும் பார்த்தது அரிதான ஒன்றுதான்.

லக்ஷ்மி ஜயனும், ஞானாம்பிகை பத்மசிகாமணியும் வயலின் வாசிக்க, பவானி சங்கரும். முத்து சிவராசாவும் மிருதங்கம் வாசித்தனர்.

தீக்ஷிதரின் வாழ்க்கை வரலாறு, அவரின் சாகித்தியங்கள் சிலவற்றின் தனிச் சிறப்புபற்றி திரு பி.பி. காந்தன் அங்கு குறிப்பிட்டார். ○



லண்டனில் இலங்கையின் அநேகமான பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் சிறப்பாக இயங்குகின்றன. விளையாட்டுப் போட்டிகள் போன்ற பொது நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்குபற்றும் இவை, வருடாந்த போசன வைபவங்களையும், பல கலை நிகழ்ச்சிகளுடனும் நடாத்துகின்றன. இந் நிகழ்ச்சிகளின் மூலம் தத்தம் பாடசாலைகளுக்கு இவை பல உதவிகளைப் புகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி , யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த போசன வைபவங்கள் அண்மையில் நடைபெற்றன.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வைபவத்தில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒன்று இது. பாடுபவர்கள், செல்விகள் சுஜிதா, கவிதா சிவசுப்பிரமணியம் சகோதரிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொற்சதுரங்கம்-6

தொகுப்பு: ஜனா

பரிசுத்தொகை £10.00
விடைகள் கிடைக்கவேண்டிய கடைசித் தேதி: 30.12.94

**இடமிருந்து வலம்:**

1. மழை பெய்யும்போது சாரலை இப்படி குறிப்பிடலாம். (4)
5. கோவில்களில் தேவாரப் பண்ணிசை பாடுபவர்கள். (4)
8. பரதனின் தாய். (3)
10. ஏமாற்றி ஜெயிப்பவன். (4)
12. இது இல்லையேல் சாதல் என்றான் பாரதி. (3)
15. எண்களினாலும் இதைச் செய்யலாம். (4)
17. அரசன். (4)
19. எம். ஆர். ராதாவின் புதல்வியான நடிகை. (3)
21. பாலசந்தரின் படம் - வடிவானவன். (4)
23. இடம் கணவனாகிறது. (2)
24. காதலில், மதுவில், பசியில் வருவது. (5)
29. ஒருவரிடம் வசப்படுவது. (5)
31. பிறப்பால் வருவான்; திருமணத்தால் வருவான். (5)
32. காலத்தையும் அளக்கலாம்; நோயையும் போக்கலாம். (4)
35. கர்நாடக சங்கீத ராகமொன்று. (7)
37. தோட்டம் செய்பவன். (6)

**வலமிருந்து இடம்:**

3. 'மயக்கமென்ன இந்த மௌனமென்ன 'இது'தான் கண்ணே' - வசந்தமாளிகை படப் பாடல். (5)
4. பிழையைத் திருத்தினால் இதுவாகிவிடும். (2)
11. கற்பூரம். (3)
14. தலதாமாளிகையில் புத்தரின் இந்த உறுப்பைத்தான் வைத்திருக்கிறார்கள். (2)
16. மின்னலைத் தொடரும். (2)
25. 'இது' இருக்கக் காய் கவர்ந்தற்று என்றார் வள்ளவர். (2)
27. ராமனுக்கு ஜனகனின் உறவு. (3)
28. விஜயன் இதற்கு விற்பன்னன். (2)
34. தேவாரங்களின் ராகங்கள் இப்படி அழைக்கப்படும். (2)
38. 'இவை' அறுபத்து நான்கு என்பார்கள். (2)

**மேலிருந்து கீழ்:**

1. ஓவியனுக்கு வண்ணக் கலவையுடன் இதுவும் வேண்டும். (3)
2. போட்டிக்கு இதுவும் காரணமாகலாம். (3)
3. கண்ணனின் பெயரொன்று; வாரணம் ஆயிரம் என்ற ஆண்டான் பதிகத்தில் வரும். (5)
6. பெண்களின் ஆடையை இலக்கியத்தில் இப்படிக் கூறுவர். (3)
13. தகைமை. (3)
15. இராமாயணத்தைத் தமிழில் தந்தவன். (4)
17. யானைக்கு இன்னொரு சொல். (3)
18. தன்னிடத்தில் என்பது. (4)
20. மன்மதன். (5)
21. வீடு; மனம். (3)
25. பாடலையும் குறிக்கும்; பாடுபவனையும் குறிக்கும். (2)
27. சிலப்பதிகார நாயகி ஒருத்தி. (3)
30. இது பிரிந்து விட்டால் உடலில் உயிரில்லை. (2)
31. 'இது' சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு. (3)
32. விந்தையான, நிலையற்ற. (2)
33. துளியை இப்படியும் சொல்லலாம். (3)
35. வியந்து பெரிதுபடுத்தும் ஒரு சொல். (2)
36. அருந்து. (பொதுவாக விலங்குகளுக்கு). (2)

**கீழிருந்து மேல்:**

5. பிரணவ மந்திரம். (2)
7. அனுபவி; மகிழ்ச்சி. (2)
9. கண்ணனைக் குறிக்கும் மற்றொரு பெயர். (3)
14. வாயிலில் இருக்கும். (2)
16. இல்லாதவர். (4)
19. கிராமிய பெண்ணின் பெயர் ஒன்று. (4)
22. மணம் என்று பொருள்படும். மடல் பெரிது தாழை; மகிழினிது 'இது' என்றார் ஔவையார். (4)
26. அறிவு, சந்திரனாகிறது. (2)
34. வானில் ஒன்றன் இயக்கம். (2)
38. ஆசனம். (3)

## சொற்சதுரங்கம்-5 விடைகள்

**இடமிருந்து வலம்:** 1.மல்லிகை 3.அம்மானை 6.துயில் 8.தவிப்பு 11.ராமலிங்கம் 13.பக்கம் 15.கலசம் 18.மற 19.தவிர்ந்து 21.ஆடி 25.மை 26.மந்திரங்கள் 29.மானினம் 31.நாயகன் 34.கண்ணன் 35.அந்தி 36.காதல் 37.வேதம் 39.பை -

**வலமிருந்து இடம்:** 5.கண் 7.கள் 22.பழைய 23.வேர் 27.பாகம் 28.தம் 30.நான்

**மேலிருந்து கீழ்:** 1.மதுரா 2.லில்லிமலர் 3.அகம் 4.மாதவிக்கொடி 15.கவிவேந்தன் 16.சந்திரன் 18.மழைமேகம் 19.தர்மம் 24.சுகம் 29.மாயன் 30.நாணல் 31.நாணம் 33.பொதிகை

**கீழிருந்து மேல்:** 9.வினை 10.புண் 12.மயில் 20.தும்பிகள் 22.பறவை 32.கனி 35.அன்னம் 36.கால் 37.வேகம் 38.தண்.

பரிசுக்குரியவர்:
**N.Sivanandan, 18 Avenue CH. DE. Gaulle, 94100 St. Maur, France**


**அனுப்பவேண்டிய முகவரி:**
Newsmedia International Limited
Park Royal House, 23 Park Royal Road,
London NW10 7JH

Name:........................................................

Address:....................................................

...................................................................

...................................................................





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

*TO* **COLOMBO** ***AND OTHER WORLD WIDE DESTINATIONS***

***MAIN AGENT FOR AIRLANKA***
PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

*All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo*
**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

## GLEN CARRIERS LIMITED


14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Telephone: 081-740 8379/081-749 0595
Fax: 081-740 4229 Telex: 929657 Glenca G
**BONDED WAREHOUSE:**
LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14. Tel: 575576



# CAPITAL AUTOS

**Audi Specialists & Dismantlers**
**Tel: 081-519 3041/6187**
**Fax: 081-519 9929**

**All Mechanical Repairs Undertaken**
**INSURANCE WORK AND FREE ESTIMATES**




*Only a phone call away...*
*Accident Repairs*
*Servicing*
*Resprays & Welding*
*Electric Tuning*

**Workshop:**
**307-311 Sprowston Mews**
**Forest Gate**
**London E7 9AE**

**Shop and Reception:**
**24 Sprowston Road**
**Forest Gate**
**Lodon E7 9AD**

*Specialists in Audi and Volkswagen Repairs • New and secondhand Audi spares*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## பாரிசில் இரண்டு நாள் நாடக விழா

தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் (லண்டன்) வழங்கும்

## மாபெரும் நாடக விழா - 95 (1)

இடம்:

பாரிஸ் ஆசிய கலைக் காட்சியகம்

**Musee National des Arts Asiatiques - Guimet**

**6, Place d'Iena 75116 Paris**

**11.03.95 சனி**
- பசி
- யுகதர்மம்
- மழை
- சம்பந்தம்
- கான சாகரம் (நாடகப் பாடல்கள்/மெல்லிசை)

**12.03.95 ஞாயிறு**
- பாரததர்மம்
- போகிற வழிக்கு ஒன்று
- மன்னிக்கவும்
- முகமில்லாத மனிதர்கள்

நெறியாள்கை: க. பாலேந்திரா

1991இலிருந்து லண்டனில் வருடாந்தம் நாடக விழாக்களை நிகழ்த்திவரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடந்த நாடக விழா 94, இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் மூன்று கட்டங்களாக நடைபெற்று ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது. 95ஆம் ஆண்டின் முதற்கட்ட நாடக விழா இது.

'தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே
தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்'

தொடர்புகளுக்கு: Tamil Performing Arts Society
B.M. Box 577, London WC1N 3XX
Tel: 081-459 4335 / 470 7883

பிரான்ஸ்: 49 83 75 67 / 44 74 16 65



## வெளிவருகிறது
## தமிழர் தகவல் - 1995

லண்டனில் பாரிய அளவில்
வியாபார நிறுவனங்கள்,
அகதி அமைப்புக்கள், ஆலயங்கள்,
பொதுநல ஸ்தாபனங்கள்,
தமிழர் விளையாட்டுக் கழகங்கள்,
தமிழர் கல்விக் கூடங்கள்,
கலை, கலாச்சார நிறுவனங்கள்
மேலும் பல பயனுள்ள
தொலைபேசி இலக்கங்கள்,
தகவல்கள்.

**தமிழர் தகவல் - 95**
**15,000 பிரதிகள் இலவசமாகவிநியோகிக்கப்படவுள்ளன.**

மேலதிக விபரங்களுக்கு:
தமிழர் தகவல்
9, London Road
London SW17 9JR
Tel: 0956 523377 / 0956 412278



**எவ்வளவு தொகையானாலும் ஒரே நாளில் இலங்கை, இந்தியாவுக்கு நீங்கள் பணம் அனுப்பலாம்**

# AARABEE TRAVELS

AIR & FOREIGN EXCHANGE BUREAU

**Ms AMARA**
**189, PRAED STREET, PADDINGTON**
**LONDON W2 1RH**
**Tel: 071-402 4668 Fax: 071-402 4880**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



சமகாலத் தமிழிலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் வாஸந்தி.

அரசியல் பிரக்ஞையோடு எழுதுகின்ற ஓரிரு பெண்எழுத்தாளர்களில் ஒருவர் இவர்.



தீவிரமாக எழுதுகின்ற அம்பை, ராஜம் கிருஷ்ணன், ஜோதிர் லதா கிரிஜா, காவேரி, சிவகாமி போன்ற எழுத்தாளர்களோடு சேர்த்து சொல்லத்தக்கவர்.

கொந்தளிப்பான சமூகப் பிரச்னைகள் நிலவுகிற இடங்களுக்கு நேரிலேயே சென்று, அந்த மக்களோடு கலந்து, அந்த அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டவை இவரது படைப்புகள்.

இந்தியாவில் நாகாலாந்து பிரச்னை, பஞ்சாபில் காளிஸ்தான் வன்முறை, ஈழத் தமிழர்களின் விடுதலைப்போர் குறித்த இவரது நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

'நிற்க நிழல் வேண்டும்' என்பது ஈழத்துப் பிரச்னை பற்றிய இவரது நாவல்.

'மௌனப் புயல்' பஞ்சாப் பிரச்னை தொடர்பானது.

மாலன் 'தினமணி' ஆசிரியராகப் பொறுப்பேற்றபின்னர், 'இந்தியா டுடே'-தமிழ் பதிப்பின் 'காப்பி எடிட்டரா'க பணியாற்றும் வாஸந்தி, அமெரிக்காவில் பெண் பத்திரிகையாளர்கள் தொடர்பான மாநாடொன்றில் கலந்துவிட்டு திரும்புகையில் லண்டன் வந்திருந்தார்.

'கல்கி'யில் முத்திரைக் கதையாக வெளியான இவரது முதல் சிறுகதையிலிருந்து, இந்தியா டுடேயில் அண்மையில் வெளிவந்த 'குற்றவாளி' வரைக்கும் அவரது படைப்புகள், பத்திரிகைத் துறை பற்றி சில மணி நேரங்கள் பேசினோம்.

வாஸந்தியினுடைய பேச்சில் நேர்மை, ஆழ்ந்த நிதானம் இருக்கிறது.

.............................

திருமதி சரஸ்வதி பாக்கியராசா இசை வாழ்வில் ஐம்பது ஆண்டுகளைக் கடந்துவிட்டவர்.

மலேயாவில் பிறந்த இவரின் இந்த இசை வாழ்வு இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் இணைந்து ஆரம்பித்தது. பின்னர் இலங்கைக்கு இவர் வந்தபோது, அங்கும் ஒரு போராட்டத்தில்தான் ஈடுபட்டார். கோவில்களில் கர்நாடக இசையும் 'தீண்டாமை' பெற்றிருந்த அக்காலத்தில், அந்த தீண்டாமை ஒழிப்பில் இறங்கினார். கச்சேரிகள் பலவற்றை கோவில்களில் துணிந்து நிகழ்த்தி, கௌரவம் சேர்த்தார்.

கர்நாடக இசை உலகில் இந்தியாவில் பெண்கள் மூவர் மும்மணிகளாக திகழ்ந்த போது, யாழ்ப்பாணத்தில் அப்படியான மும்மணிகளில் ஒருவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

புதிய இசைப் பரம்பரையின் பரம்பலிலும் இவருடைய பங்கு பெரிது. அது, இலங்கை, சிங்கப்பூர், லண்டன் என்று விரிவுபட்டது.



இம் மூன்று இடங்களிலும் முக்கியமான நிறுவனங்களில் பணியாற்றியிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர் இந்திய நுண்கலை நிறுவனம், மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை, லண்டன் தமிழ்க் கழகம் என்பன அவை.

இறுதியாக பணியாற்றிய லண்டன் தமிழ்க் கழகத்திலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றபோது, 'ஏழிசை மாமணி' என்ற கௌரவ பட்டம் இவருக்கு வழங்கப் பட்டது.

– செந்தமிழன்

RANJIT MANO
& CO
SOLICITORS

N. Ranjithakumaran
S. Manogaran LLB

107B HOE STREET
WALTHAMSTOW
LONDON
E17 4SA
TEL: 081-521 5757
FAX: 081-521 5757



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்யாணிக்குக் கல்யாணம்.

நிச்சயதார்த்தம் நிச்சயித்தாயிற்று.

இப்போது

எங்கே அவர்கள் அவசரப்படுகிறார்கள்?

கல்யாணிக்குத் தங்க நகைகள் வாங்க

டெவ்ஜிஸ் தங்கமாளிகை

செல்வதற்குத்தான்!



தாலி
அட்டியல்
பதக்கம்
சிமிக்கி
வளையல்கள்
இன்னும்
விதம் விதமான தங்க வைர நகைகள்
அனைத்துக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்

# டெவ்ஜிஸ் தங்கமாளிகை

# DEVJI'S

**28, EALING ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 4TL**
**TEL: 081-900 1114/5, FAX: 081-903 0958**

www.tamilarangam.net



*The travel agency which makes sure that their passengers are really taken care of*

# Skylink





## Seats available for Christmas In Colombo



### Air Lanka

| | |
|---|---|
| 25th Nov -10th Dec<br>26th Dec - 31st Mar | £495 |
| 11th Dec - 17th Dec<br>24th/25th Dec | £605 |
| 18th Dec - 23rd Dec | £650 |

### Royal Jordanian

| | |
|---|---|
| 25th Nov -30th Nov<br>25th Dec -31st Mar | £420 |
| 1st Dec - 24th Dec | £500 |

# Skylink

10-16 Rathbone Street

TEL: 071-396 9933 OR 071-396 9922

London W1P 1AH


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலாந்தில்
தன்னிகரற்ற
தங்க, வைர
நகை வியாபாரிகள்

Specializing in
22ct Tamil Jewellery.
Orders for your requirements
in your choice of weights.



பகவான்ஜி சி ஜூவல்லர்ஸ்

BHAGWANJI C JEWELLERS
48 EALING ROAD
WEMBLEY, MIDDLESEX HA0 4TQ
TEL:081-903 0033 / 903 4723
FAX:081-900 0215

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

